அறிமுகம்



ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கழகமானது 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கழகச் சட்டத்தினால் நிறுவப்பட்டது. அதன் நிர்வாகம் பின்னர் செய்யப்பட்ட பல திருத்தச் சட்டங்களின் கீழ் மறுசீரமைக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கழக (திருத்தச்) சட்டத்தினால் இக் கழகமானது ஒரு பல்கலைக்கழக அந்தஸ்திற்குத் தரம் உயர்த்தப்பட்டதுடன், அதன் பின்பு 2007ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தின் படி "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கழகம்" என மீளப் பெயரிடப்பட்டது.

இவ்வறிக்கையானது, 2019 சனவரி 1 ஆம் திகதி முதல் 2019 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் செயலாற்றுகைகளை உள்ளடக்குகிறது. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் இந்த ஆண்டு அறிக்கையும் வருடாந்தக் கணக்குகளும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவுடன் இணங்கத்தக்கதாக தயாரிக்கப்பட்டு இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் சின்னம்



கொ.பா.ப இலங்கையில் முதன்முறையாக முப்படை சேவைகள் கல்வி நிறுவனம் ஆகும், அதன் முகடு மூன்று சின்னங்களை உள்ளடக்கியது. இரண்டு குறுக்கு வாள்கள், நங்கூரம் மற்றும் இரண்டு இறக்கைகள் முறையே இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப் படையினை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. முகடு நடுவில் உள்ள சுடர் கல்விக்கு கொடுக்கப்பட்ட மைய இடத்தைக் குறிக்கிறது. கொ.பா.ப குறிக்கோன் வாசகத்துடன், "எப்போதும் தாய்நாட்டிற்காக" என கீழே பொறிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் கொடி

கொ.பா.ப கொடியானது இலங்கை இராணுவத்திற்கு ஆரஞ்சு, இலங்கை கடற்படைக்கு அடர் நீலம் மற்றும் இலங்கை விமானப்படைக்கு வெளிர் நீலம் என மூன்று வெவ்வேறு வண்ண கோடுகளுடன் முப்படைகளை அடக்கும் ஒரு குறியீட்டு அமைப்பாகும். மேலும், கொ.பா.ப முகடு கொடியில் சேர்க்கப்படுவது, நாட்டின் முப்படைகளின் தொழில்முறை மற்றும் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் தாய்நாட்டிற்குச் சேவை செய்வதில் கொ.பா.ப இன் பங்கைக் குறிக்கிறது.



பல்கலைக்கழகத்தின் கீதம்


දෑ අනුරාගෙන් ප්‍රාණ ප්‍රබෝධිත
සියරටටම කවදත් කැප අප වෙත
ශිල්ප ශ්‍රාස්ත්‍ර සංග්‍රාම තාක්ෂණ
ඥාණ විභූෂණ ශික්ෂණ දානී
ශ්‍රීමත් කොතලාවල
ආරක්ෂක සරසවි ලංකා
ධරණී ජයතු

ත්‍රිවිධ හමුදා ජීවය විදහා
දෙස රැක ගැනුමට ජය ධජ නැගුමට
දෑ අභිමානෙන් පෙරට තබන පා
සතුරන් මැඩ මිස නොගනිමු ආපසු
දිවි දෙමු සාමයේ කුසුම් පිපෙන තුරු
ඒ කුසුමෙන් ලක් මව සැනසෙන තුරු//

දෑ අනුරාගෙන් ප්‍රාණ ප්‍රබෝධිත
සියරටටම කවදත් කැප අප වෙත
ශිල්ප ශ්‍රාස්ත්‍ර සංග්‍රාම තාක්ෂණ
ඥාණ විභූෂණ ශික්ෂණ දානී
ශ්‍රීමත් කොතලාවල ආරක්ෂක
සරසවි ලංකා ධරණී ජයතු

பல்கலைக்கழகத்தின் இடவமைவு

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் – இரத்மலானை



பல்கலைக்கழகத்தின் தொலை நோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள்

தொலை நோக்கு

முப்படைகளுக்கும் அரசாங்கத் துறைக்கும் பாரியதாக சமூகத்திற்கும் சிறப்பாகச் சேவையாற்று கின்ற விசேடமானதும், ஒழுக்காற்றுகளுக்கு இடையிலானதுமான பாதுகாப்புத் தொடர்பான உயர் கல்வியில் பட்டப்படிப்பு மாணவர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்களையும் ஈடுபடுத்துவதற்கான அதன் புதுமையான தகுதிக்காக தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அறியப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாக விளங்குதல்.

பணிக்கூற்று

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் செயற்பணியானது தேசத்தின் பாதுகாப்பில் அர்ப்பணிக்கப்பட்ட சேவையின் ஆயுள்காலத்திற்கு பயிலுனர்களைக் கற்பித்தலும், பயிற்றுவித்தலும், ஊக்குவித்தலும் அத்துடன் கிரமமான படைகளின் உத்தியோகத்தர்களாக சீவியத்தொழிலுடன் இணைந்ததாக தலைமைத்துவத் திறமைகளையும் புலமைவாண்மை வளர்ச்சியையும் மேம்படுத்துதலும்.

நோக்கங்கள்

அ. பயிலிளவல் அலுவலர்களை ஆயுதப் படைப்பிரிவுகளுக்கு இணைப்புச் செய்வதற்கு முன்னர் அவர்களுக்கு ஆயுதப் பயிற்சியினை அறிமுகப்படுத்துவதற்கு வசதியினை ஏற்படுத்துதல் மற்றும் தமது தொழில் சம்பந்தமாக அவர்களது அறிவினையும் திறன்களையும் விருத்திசெய்வதற்கான வழிகாட்டலை வழங்குதல்.

ஆ. பயிலிளவல் அலுவலர்களுக்கு, அதிகாரிகளுக்கு, அரச ஊழியர்களுக்கு மற்றும் வேறு எவரேனும் நபர்களுக்கு அவர்களின் தொழில்சார் அல்லது வேலை சம்பந்தமான பாடவிடயங்கள் சார்ந்த முதனிலைப் பட்டப்படிப்புக்காக தயார்படுத்தலின் போது அறிவியல்சார் கற்கைகளுக்கான வசதிகளையும் போதனைகளையும் வழங்குதல்.

இ. ஆயுதப் படைகளின் படைவீரர்களின் சேவைக் காலப்பகுதியில் கூட்டுத் தொழிற்பாடுகளில் வசதியினை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கத்திற்காக படை வீரர்களிடையே நட்பையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்ப பயிலிளவல் அலுவல்களிடையே நட்பு மற்றும் ஒற்றுமை சார்ந்த உணர்வுகளை வளர்ச்சியடையச்செய்தல்.

ஈ. ஆயுதப் படைகளின் அதிகாரிகள் மற்றும் ஏனைய ஆட்களுக்கு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டப் பின்படிப்புப் பட்டம், பட்டதாரிப் பட்டம், திப்ளோமா மற்றும் ஏனைய சான்றிதழ்கள் என்பவற்றினைப் ஈட்டிக்கொள்ள தகுதிபெறுவதற்காக அவர்களின் தொடர்ச்சியான தொழில்சார் வளர்ச்சி சார்ந்த பாடநெறிகளை வழங்குதல்.

உ. பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பல்கலைக்கழகத்தினால் தேவையெனக் கருதப்படும் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திகள் உட்பட ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

உபவேந்தரின் மீளாய்வு



ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கலைக்கழகமானது, பயிலிளவல் அலுவலர் சார் பயிற்சியளிப்பு மற்றும் இராணுவம்சார் அறிவுறுத்தல்களை வழங்குதல் தொடர்பாக தனித்துவமான பாடங்களில் மூன்றாம் நிலை கல்விக்கான வசதிகளை பெற்றுக்கொடுக்கும் முக்கியமான நோக்கத்துடன், 1981ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஆரம்பத்தில் நிறுவப்பட்டது.

கொத்தலாவல பாதுகாப்புக் கழகமானது (KDA), 1988ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கழக (திருத்தச்) சட்டத்தின் மூலம் மாற்றப்பட்டதுடன், பல்கலைக்கழக அந்தஸ்திற்கும் தரம் உயர்த்தப்பட்டது. அதன்பின்பு, 2007 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தின் மூலம் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் பல்கலைக்கழகம் என 2007 அக்டோபர் 11 ஆம் திகதி பெயர் மாற்றப்பட்டது. பாதுகாப்புக் கழகமானது, உலகளாவிய பிரவேசத்துடனான பல்கலைக்கழகமொன்று எனும் நிலைக்கு மாற்றமடைந்து, பாதுகாப்பு கற்கைகள் தொடர்பான பட்டங்களை வழங்கும் தெற்காசிய பிராந்தியத்தின் முதன்மையான பாதுகாப்புசார் பல்கலைக்கழகமெனும் புகழையும் மதிப்பையும் அடைந்துகொள்வதற்கான கருவியாக செயற்பாடுகள் அமைந்துள்ளது.

ஐக்கிய இராச்சியத்திலுள்ள பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழகங்களின் ஒன்றியம் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களின் சங்கம் ஆகியவற்றின் உறுப்புரிமைகள் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மூலோபாய தகைமைகள் மற்றும் கீர்த்திமிக்க தொழில் வழிகளை அடைவதற்கு முயற்சி செய்யும் பாதுகாப்பு பணிசார் துறையினர், முப்படையினர் மற்றும் எமது நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சிவில் மாணவர்கள் ஆகியோருக்கு அறிவையும் ஞானத்தையும் வழங்குவதில் பல்கலைக்கழகத்தின் வகிபாத்திரத்திற்கு கொ.பா.ப. தானாகவே உயிரூட்டுகின்றது.

தொடக்கம் முதல் மிகக் குறுகிய கால வரலாற்றினுள் விரிவடைந்திருக்கும் கொ.பா.ப., பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு முழுமையான சர்வதேச பல்கலைக்கழகமாக வளர்ச்சியடைந்துள்ளது. இந்த நிலைமாறு காலச் செயற்பாட்டினுள், பட்டமேற்படிப்பு கற்கைகள், பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைகள், சட்டம், மருத்துவம், பொறியியல், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள், முகாமைத்துவம், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியல், கட்டப்பட்ட சூழல் மற்றும் இடஞ்சார் விஞ்ஞானங்கள், ஆய்வும் அபிவிருத்தியும் மற்றும் கணினியியல் உட்பட பத்து பீடங்களுடன் பல்துறைகளை உள்ளடக்கிய நிறுவனமாக விளங்குகிறது.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் பல்கலைக்கழகமானது, ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே அதனது ஆரம்பகர்த்தாக்களால் நிறுவப்பட்ட அதன் மதிப்புக்கள் மற்றும் நம்பிக்கைகளில் வேரூன்றியுள்ளது. தொழில்வாண்மைதுவத்தை அடைந்துகொள்ளும் அதன் முயற்சியின்

போது, கொ.பா.ப. - எப்போதும் தமது தாய் நாட்டுக்காகவே எனும் தொனிப்பொருளுக்கு இணங்கவே செயலாற்றுகின்றது. அதன் தொலைநோக்கை வளர்ச்சியடைச் செய்வதற்கான பாதையில் திறமைமிக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமையாளர்களுக்கு உயர் தரத்திலான முதனிலை மற்றும் பட்டமேற்படிப்பு பட்டங்களை வழங்கிவருகின்றது.

கொ.பா.ப. அதன் 12 ஆவது சர்வதேச ஆய்வு மாநாட்டை, "புதிய தொழில்நுட்பங்களை எதிர்கொள்வதில் மனித குலத்துக்குள்ள சவால்கள்" ("Challenges to humankind in the face of new technology") எனும் கருப்பொருளின் அடிப்படையில் 2019 செப்ரெம்பர் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடாத்தியது. பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி கலாச்சாரத்தை மேம்படுத்துவதில் கல்வியாளர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் ஆகியோர் பங்களிப்புச் செய்தபல்கலைக்கழகத்தின் பட்டமளிப்புவிழா, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி கோதாபய ராஜபக்ஷ அவர்களின் தலைமையில், 2020 சனவரி, 9 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

காலத்திற்கேற்றவாறு சர்வதேச போக்குகளை தூரநோக்குடன் இனங்கண்டு பல்கலைக் கழகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்துறை செயல்நுணுக்க முகாமைத்துவ உபாய முறைகள் மற்றும் பணியாட்தொகுதியினரின் செல்லுாக்குவிப்பு செயற்பாடுகள் என்பவற்றின் உண்மையான சமூகப் பயன்கள் எதிர்வரும் ஆண்டுகளின் பல்கலைக்கழக செயற்சாதனைகள் ஊடாக சிறப்பாக பிரதிபளிக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், சமூக ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள், மாணவர் – விரிவுரையாளர் ஈடுபாட்டு முயற்சிகள் மற்றும் பீட – கைத்தொழில்துறை ஒத்துழைப்புக்கள் எனும் பல்வேறுபட்ட அணுகுமுறைகள் மூலம் வலுவடைந்து வருகின்றன.

மீளாய்வு ஆண்டில் பல்கலைக்கழகம் அறிவுசார் மற்றும் பௌதிக ரீதியாக அடைந்து கொண்ட முன்னேற்றங்கள், சரியான முகாமைத்துவ பிரவேசங்கள் மற்றும் தலைமைத்துவம் ஊடாக பணியாட்தொகுதியினர் ஒன்றிணைந்து பெற்றுக்கொண்ட வெற்றிகளாகும். அது பல்கலைக்கழகத்தின் நீடித்து நிலைத்தலுக்கான சக்திமிக்க அடித்தளமாகும்.

கற்பித்தல் மற்றும் கற்பித்தல்சார் செயற்பாடுகள், ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி, கல்விசார் நடவடிக்கைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி என்பவற்றுடன் ஏனைய வெளிப்படையான மற்றும் சிறிய அம்சங்கள் தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தி, எமது தொலைநோக்கை அடைந்து கொள்வதற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் ஒன்றிணைந்து செயலாற்றி வருகின்றோம். கொ.பா.ப. இன் முன்னோக்கி செல்லும் பாதையாகிய எங்கள் சார்பாக ஆர்வம்காட்டும் வெளிப்புற பங்குதாரர்களுடன் ஒத்துழைப்பினை விருத்தி செய்வதற்கு இது மெய்யாகவே வழியமைக்கும்.

எயர் வைஸ் மார்ஷல் எச்.எம்.எஸ்.கே.பி. கொடகதெனிய
WWV, RWP, RSP, VSV, USP, MSc (Def & Strat Stu), fndu, psc
உப வேந்தர்
ஜெனரல் சேர் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

உள்ளடக்கம்

அறிமுகம் i

பல்கலைக்கழகத்தின் சிண்ணம் ii

பல்கலைக்கழகத்தின் கொடி ii

பல்கலைக்கழகத்தின் கீதம் iii

பல்கலைக்கழகத்தின் இடவமைவு iv

பல்கலைக்கழகத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள் v

உபவேந்தரின் மீளாய்வு vi

1. பல்கலைக்கழகம்

1.1 பல்கலைக்கழகத்தின் வரலாறு 3

1.2 நிறுவனக் கட்டமைப்பு 4

1.3 முகாமைத்துவச் சபை 5

1.4 பல்கலைக்கழகத்தின் மூதவை 7

1.5 பல்கலைக்கழகத்தின் வேந்தர் மற்றும் பிரதான பதவியணியினர் 8

1.6 2019 வருடத்தின் முன்னேற்றம் 10

1.7 எதிர்கால திட்டங்கள் 14

2. பல்கலைக் கழகத்தின் பீடங்கள் மற்றும் வளாகங்கள்

2.1 பீடங்கள்

2.1.1 பட்டப்படிப்புகள் பீடம் 17

2.1.2 பாதுகாப்பு மற்றும் உபாயக் கற்கைகள் பீடம் 20

2.1.3 மருத்துவ பீடம் 25

2.1.4 பொறியியல் பீடம் 51

2.1.5 சட்ட பீடம் 59

2.1.6 முகாமைத்துவம், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியல் பீடம் 64

2.1.7 இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் 70

2.1.8 கட்டியெழுப்பிய சுற்றாடல், இடஞ்சார் விஞ்ஞானங்கள் பீடம் 83

2.1.9 கணனி பீடம் 91

2.2 வளாகங்கள் மற்றும் சான்றுப்படுத்தக்கட நிறுவனங்கள்

2.2.1 தெற்கு வளாகம், சூரியவெவ 103

3. நூலக வலையமைப்பு 107

4. மாணவர் தகவல்

4.1 மாணவர் மொத்த எண்ணிக்கை – கடட் அலுவலர் (உள்நாட்டு) 115

4.2 மாணவர் மொத்த எண்ணிக்கை – கடட் அலுவலர் (வெளிநாட்டு) 116

5. பரீட்சை தரவு

5.1 பட்டப்படிப்பு வெளியீடு 118

5.2 பட்டப்பின் படிப்பு வெளியீடு 118

5.3 சான்றுப்படுத்தப்பட்ட இராணுவ கல்லூரிகளின் பட்டப்படிப்பு 119

6. மனித வளங்கள்

6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போதய பதவியினர் 120

7. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை 121

8. இலங்கை நி.அ. இலக்குகளுடன் பல்கலைக்கழகத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 127

9. நிதியியல் மீளாய்வு

9.1 நிதிச் செயலாற்றுகை பகுப்பாய்வு 129

9.2 2019.12.31 அன்று முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்று 131

10. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 180

1. பல்கலைக்கழகம்

1.1 பல்கலைக்கழகத்தின் வரலாறு


1978 ஆம் ஆண்டில், இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகள் இளம் இராணுவ அதிகாரிகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக உயர் கல்விக்கான ஒரு நிறுவனத்தை நிறுவுமாறு அரசுக்கு பரிந்துரைத்தனர். அவர்களின் பரிந்துரையின் பேரில், நிபுணர்களின் கண்டுபிடிப்புகளால் வழிநடத்தப்பட்ட அரசாங்கம், பாதுகாப்பு சேவைகளுக்கான பட்டம் வழங்கும் இராணுவ அகடமியை உருவாக்குவதற்கு முடிவு செய்தது.

முன்மொழியப்பட்ட பாதுகாப்பு அகாடமிக்கு பொருத்தமான இடம் குறித்து நிச்சயமற்ற நிலையில், இலங்கையின் 3 ஆவது பிரதமராக இருந்த ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல, அப்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜே.ஈ.டி.பெரேரா அவர்களின் கருத்துப்படி பாதுகாப்பு அகடமியை அமைப்பதற்காக 48 ஏக்கர் நிலத்தைக் கொண்ட கண்டாவளை தோட்டத்தையும் அதன் அசையும் மற்றும் அசையா சொத்துக்களையும் அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்க விருப்பம் தெரிவித்தார். இந்தச் சலுகை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அகடமியை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1980 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதி, அதிமேதகு ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன அவர்கள் லெப்டினன்ட் ஜெனரல் ஜே.ஈ.டி. பெரேராவுடன் சேர்ந்து சேர் ஜோனின் கல்லறைக்குச் சென்று அவருக்கு ஜெனரல் என்ற கௌரவ பட்டத்தை வழங்கியதுடன், அவரது அரசாங்க சேவையை கௌரவித்து ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல அகடமிக்கு பெயரிட்டு கௌரவித்தனர்.

இவ்வாறு, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு அகடமி 1980 இல் இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைக்கு அறிவுசார் திறன் கொண்ட சேவை அதிகாரிகளை உருவாக்கும் குறிப்பிட்ட நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இது 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு அகடமி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. மேலும் அதன் செயற்பாடுகளின் நோக்கம் பல அடுத்தடுத்த திருத்தங்களால் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இது 11 அக்டோபர் 2007 அன்று ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் என மறுபெயரிடப்பட்டது.

1.2 நிறுவனக் கட்டமைப்பு



1.3 முகாமைத்துவ சபை

பல்கலைக்கழகத்தின் முகாமை செய்தல் மற்றும் நிர்வகித்தலானது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்படும் முகாமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படுகிறது.மீளாய்வு ஆண்டுக்கான சபை வருமாறு.

01. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு (தவிசாளர்)	**திரு. ஹேமசிறி பெர்னாந்து** (2018.10.31 – 2019.05.06) **எஸ்.எச்.எஸ். கொட்டேகொட** (ஓய்வுபெற்ற) WWV RWP RSP VSV USP (07.05.2019-19.11.2019) **மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன** (ஓய்வுபெற்ற) WWV RWP RSP USP ndc psc MPhil (2019.11.20 முதல் இற்றைவரை)
02. இராணுவத் தளபதி	**லெப். ஜெனரல் என்.யூ.எம்.எம்.டபிள்யூ. சேனாநாயக்க** RWP RSP VSV USP psc (2017.06.27 – 2019.08.18) **லெப். ஜெனரல் எல்.எச்.எஸ்.சி. சில்வா** WWV RWP RSP VSV USP ndc psc (2019.08.18 முதல் இற்றைவரை)
03. கடற்படைத் தளபதி	**வைஸ் அட்மிரல் எஸ்.எஸ். ரணசிங்ஹ** WWV RWP VSV USP ndc psc AOWC (2017.10.26 – 2018.12.31) **வைஸ் அட்மிரல் கே.கே.வீ.பீ.எச். த சில்வா** WWV & Bar, RWP, RSP, VSV, USP, ndu (2019.01.01 முதல் இற்றைவரை)
04. வான்படைத் தளபதி	**எயர் மார்ஷல் கே.வீ.பி. ஜயம்பதி** WWV RWP RSP (3 bars) USP எம்.எஸ்சி. (சர்வதேச உறவுகள்), fndu (2016.09.13 – 2019.05.29) **எயர் மார்ஷல் டீ.எல்.எஸ். டயஸ்** RSP and three Bars, VSV, USP, எம்.எஸ்சி. (பாது. மற்றும் உபாய கற்கை.), ndc, psc (2019.05.30 முதல் இற்றைவரை)
05. மேலதிகச் செயலாளர்	**திரு. அநுராத விஜேகோண்** (பாதுகாப்பு) (2018.11.12 - 2019.12.24) – பாதுகாப்பு அமைச்சு
06. உப வேந்தர் - கொ.பா.ப.	**ரியர் அட்மிரல் ஜே.ஜே. ரணசிங்ஹ** VSV USP, psc, எம்.எஸ்சி. (DS) முகாமை., MMaritimePol (Aus), PG Dip in CPS, Dip in CR, AFNI (இலண்டன்), சமாதான நீதவான் (முழு தீவுக்கும்) (2016.01.01 – 2019.02.14)

	எயர் வைஸ் மார்ஷல் எச்.எம்.எஸ்.கே.பி. கொடகதெனிய WWV, RWP, RSP, VSV, USP, எம்.எஸ்சி. (பாது. மற்றும் உபாய கற்கை.), fndu, psc (2019.02.14 - 2019.12.31)
07. பல்க. மானி. ஆணைக்குழு பிரதிநிதி	**பேராசிரியர் பீ.எஸ்.எம். குணரத்ன** பீ.எச்டீ. (நிதி) Tsukuba பல்கலைக்கழகம் (ஜப்பான்), எம்.எஸ்சி. (நிதி) Tsukuba பல்கலைக். (ஜப்பான்), எம்.பீஏ. (கொழும்பு), பி.எஸ்சி. (கௌரவ) வியாபார நிருவாகம் (ஸ்ரீஜயவ), உப தவிசாளர் – பல்க. மானி. ஆணைக்குழு **பேராசி. மோஹான் த சில்வா** Ms, FRCS Edin, FCSSL தவிசாளர் – பல்க. மானியங்கள் ஆணைக்குழு - (2018.03.19)
08. பொதுத் திறைசேரி பிரதிநிதி	**திரு. பீ.பி.எஸ்.சி. நோனிஸ்** பி.எஸ்சி. (வியாபார நிருவா. சிறப்பு – கௌரவ பொது நிருவாக முதுமாணி, அவுஸ்திரேலியா LICA நிதிசார் கட்டுப்பாளர் நாயகம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு - (2018.06.07) **திருமதி எஸ்.ஏ.சி. குலதிலக்க**
09. பதிவாளர், பதில் கடமை - கொ.பா.ப.	**கேர்ணல் பீ.எஸ்.எஸ். சஞ்ஜீவ** RSP psc எம்.ஏ. (NPS, USA), எம்.எஸ்சி. (பங்களாதேஷ் பல்கலைக்கழகம்), எம். (பாது.) எஸ். (களனி பல்கலை.), IHR சார் திப்ளோமா (இலங்கை) (2018.03.09 முதல் இற்றைவரை)

1.4 பல்கலைக்கழகத்தின் மூதவை

பல்கலைக்கழகத்தின் மூதவை பின்வரும் அலுவலர்களை உள்ளடக்கியுள்ளது;

- உபவேந்தர்
- பணிப்பாளர் – தெற்கு வளாகம்
- பிரதி உபவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிர்வாகம்)
- பிரதி உபவேந்தர் (கல்வித் துறை)
- அங்கீகாரம் பெற்ற மற்றும் இணைந்த நிறுவனங்களின் தலைவர்கள்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பீடாதிபதி
- ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி
- நிலையங்களின் பணிப்பாளர்கள்
- இரண்டு சிரேட்ட பேராசிரியர்கள் / ஒவ்வொரு பீடத்தினதும் பேராசிரியர்கள்
- பதிவாளர்
- நூலகர்
- துணைவர்
- படைத் தளபதிகள்
- ஒவ்வொரு கற்கை துறையின் தலைவர்கள்
- பாதுகாப்பு மற்றும் உபாயக் கற்கைகள் பீடத்தின் தரம் II பதவிநிலை அலுவலர்
- துணை வேந்தரால் பரிந்துரைக்கப்பட்ட மொத்த பீடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விரிவுரையாளர்கள்.

2019 வருடத்தின்போது பதிமூன்று (13) மூதவை கூட்டங்கள் இடம்பெற்றன.

1.5 பல்கலைக்கழகத்தின் வேந்தர் மற்றும் பிரதான பதவியணியினர்

2019 சனவரி 01 முதல் 2019 திசம்பர் 31

வேந்தர்

அட்மிரல் தயா சந்தகிரி, RSP, VSV, USP, rcds, psc, எம்.எஸ்சி. (DS), FIMgt (ஐக்.இரா.), MNI (இலண்டன்), MRIN (இலண்டன்), சமாதான நீதவான் (இலங்கை)

பிரதம பதவியணி உத்தியோகத்தர்கள்

இராணுவம்

உப வேந்தர்

எயார் வைஸ் மார்ஷல் எச்.எம்.எஸ்.கே.பி. கொடகதெனிய WWV RWP RSP VSV USP எம்.எஸ்சி. (பாது. மற்றும் உபாய கற்கை.) fndu psc

பல்கலைக்கழகத் தலைவர் - தெற்கு வளாகம்

பிரிகேடி. ஏ.எஸ். ஹேவாவித்தாரன RSP USP

பிரிகேடி. டபிள்யூ.பீ.ஏ.கே. திலக்கரத்ன psc

பிரதி உப வேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிர்வாகம்)

மேஜர் ஜெனரல் ஐ.பீ. ரணசிங்ஹ RWP RSP ndu MDefs எம்.எஸ்சி. psc

பிரிகேடி. என். ஹத்துருசிங்ஹ psc IG Hdmc

பீடாதிபதி – பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம்

பிரிகேடியர் ஆர்.ஜீ.யூ. ராஜபக்ஷ RSP psc பி.எஸ்சி. (டீ.எஸ்.) KDA

எம்.எஸ்சி. (டீ.எஸ்.) களனி MASS (NDU) வாஷிங்டன் DC

பீடாதிபதி – பாதுகாப்பு மற்றும் உபாயக் கற்கைகள் பீடம்

பிரிகேடி. ஜே.எம்.சி. ஜயவீர RSP USP

பீடாதிபதி – இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்

லெப். கேர்னல் (டாக்டர்) எம்.டீ.ஏ.எஸ். குணதிலக்க

டாக்டர் டீ.யூ. கொட்டஹச்சி (சிவில்)

பதிவாளர் (பதில் கடமை)

கேர்னல் பீ.எஸ்.எஸ். சஞ்சீவ RSP psc VIR MA (NPS, யூ.எஸ்.ஏ.), எம்.எஸ்சி. (பங்களாதேஷ் பல்கலைக்.), M (Def.) S (களனி பல்கலை.), Dip in IHR (இலங்)

கட்டளையிடல் அதிகாரி (நிர்வாகம்)

லெப். கேர்ன. ஏ.கே. பீரிஸ் RSP

கட்டளையிடல் துணை அதிகாரி

லெப். கேர்ன. டபிள்யூ.எம்.என்.கே.டீ. பண்டார RWP RSP USP psc

சிவில்

பிரதி உப வேந்தர் (கற்கைசார்)

பேராசிரியர் எம்.எச்.ஜே. ஆரியரத்ன

எம்.பி.பி.எஸ். (கொழு.), எம்.எஸ்.(கொழு.), எப்.ஆர்.சி.எஸ். (எடின்பேர்க்)

எப்.ஆர்.சி.எஸ். (இங்கி.), சிரேஷ். கல்வியியலாளர்- பீ.ஜீ.ஐ.எம். (கொழு.),

எப்.சி.எஸ். (இலங்.)

பீடாதிபதி – மருத்துவ பீடம்

பேராசிரியர் எம்.எச்.ஜே. ஆரியரத்ன

எம்.பி.பி.எஸ். (கொழு.), எம்.எஸ்.(கொழு.), எப்.ஆர்.சி.எஸ். (எடின்பேர்க்)

எப்.ஆர்.சி.எஸ். (இங்கி.), சிரேஷ். கல்வியியலாளர்- பீ.ஜீ.ஐ.எம். (கொழு.),

எப்.சி.எஸ். (இலங்.)

பீடாதிபதி – பொறியியல் பீடம்

கலாநிதி (திருமதி) டபிள்யூ.சி.டீ.கே. பெர்னாந்து

கலாநிதி ரீ.எம்.டபிள்யூ.ஆர்.எம்.பி. சமரகோண் (2019.04.01)

பீடாதிபதி – சட்ட பீடம்

திரு. டபிள்யூ.எம். அமரதாச

பீடாதிபதி – முகாமைத்துவம், சமூகவியல் மற்றும் மானிடவியல் பீடம்

கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ரீ. சிறிசோமா

பீடாதிபதி - கட்டியெழுப்பட்ட சுற்றாடல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞானங்கள் பீடம்

கலாநிதி ஏ.ஆர். ரூபசிங்ஹ

பீடாதிபதி – கணினியியல் பீடம்

கொமதோ. ஜே.யூ. குணசீல USP psc

பீடாதிபதி – ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

சிரேஷ். பேராசி. எஸ்.ஆர். த அல்விஸ் செனவிரத்ன

பேராசி. சி.எல். குணசேக்கர

நூலகர் – பதில் கடமை

திருமதி ரீ.சி. ரணவெல்ல பி. எஸ்சி. (களனி), MLS (கொழு.), ASLLA

(கடமைகளை பதில் கவனித்தல்)

நிதிப் பொறுப்பாளர் (பதில் கடமை)

திரு. ஏ.கே.எஸ். ஆரியபால

1.6 2019 வருடத்தின் முன்னேற்றம்

01. நிறுவனத்தின் பொதுவான நோக்கு

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு அகடமி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதுடன் அதன் செயற்பாட்டு நோக்கம் பல அடுத்தடுத்த திருத்தங்களால் மேம்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் ஒரு அரச பல்கலைக்கழகம் ஆகும். இது பாதுகாப்பு அமைச்சின் கீழ் முகாமைத்துவ சபையொன்றினால் நிர்வகிக்கப்படும் ஒரு சுயாதீன நிறுவனமாக செயற்படுவதுடன், இது முப்படை வீரர்கள், நாட்டிலுள்ள தகுதியான இளைஞர்கள், வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் தனியார் மற்றும் பொதுத்துறை பணியாளர்களுக்கு அந்தந்த பாடப்பிரிவுகளில் இளங்கலைமானி மற்றும் முதுகலைமானி நிலைகளில் உயர் கல்வி வாய்ப்புகளை வழங்குகிறது.

02. நிதி முன்னேற்றம்

2019.07.31 அன்றுள்ளவாறு நிதி முன்னேற்றம்

விபரம்	2019 மதிப்பீட்டில் ஏற்பாடுகள் (ரூபா மில்.)	2019.08.31 வரை உண்மையான செலவினம் (ரூபா மில்.)	மொத்த ஒதுக்கீடு %
மீண்டெழும்	1,456,000,000.00	862,982,446.14	59.27
மூலதனம்	89,000,000.00	24,792,104.32	27.86
வட்டிக் கொடுப்பனவு - கொ.பா. பல்கலைக்கழக வைத்தியசாலை	4,160,000,000.00	1,971,296,775.89	47.39
மொத்தம் (மீண்டெழும் + மூலதனம்)	**5,705,000,000.00**	**2,859,071,326.35**	**50.12**

03. நிறுவனத்தின் முன்னேற்றம்

3.1 நிறுவனத்தின் பொதுவான நடவடிக்கைகளின் முன்னேற்றம்

3.1.1 பதிவாளரின் அலுவலகம்

பதவியணி	பட்டியலிடல்	இளைப்பாறல்	பதவி விலகல்	பதவி விலக்கல்	முடிவுறுத்துகை	ஊக்குவிப்பு	ஒப்பந்த காலத்தை நிறைவுசெய்	மரணம்
கல்விப் பகுதி	08	00	01	00	00	13	02	00
நிர்வாகம்	01	00	01	00	00	02	01	00
கல்வி ஒத்துழைப்பு	25	00	04	00	00	01	02	00
எழுதுநர் மற்றும் இணைந்த வகுப்புகள்	03	05	01	00	00	09	00	00
சிறிய வகுப்புகள்	43	03	10	03	00	16	00	00
மொத்தம்	**80**	**08**	**13**	**02**	**00**	**41**	**05**	**00**

3.1.2 கல்விப் பதவியணி எண்ணிக்கையின் அபிவிருத்தி

வருடம்	2019
பதவியணி எண்.	09

3.1.3 மாணவர் சனத்தொகையின் அபிவிருத்தி

வருடம்	பீடம்	மாணவர் எண்ணிக்கை
2019	மருத்தவ பீடம்	42
	பொறி. பீடம்	140
	சட்ட பீடம்	135
	சமூகவியல் மற்றும் மானிடவியல் பீடம்	231
	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	172
	கட்டியெழுப்பட்ட சுற்றாடல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞானங்கள் பீடம்	88
	கணினியியல் பீடம்	127



3.1.4 நூலகம்

KOHA திறந்த மூல மென்பொருளைப் பயன்படுத்தும் வலை அடிப்படையிலான நூலக முகாமைத்துவ முறைமை நூலக வலையமைப்பில் வெற்றிகரமாக நிறுவப்பட்டது. கொ.பா.ப. நூலகம், கொ.பா.ப. சேகரிப்புக்காக D.Space மென்பொருளைப் பயன்படுத்தி டிஜிட்டல் காப்பகத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

3.2 பிரதான மூலதன கருத்திட்டங்களின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மூலதனத் திட்டங்களாக அடையாளம் காணக்கூடிய மூன்று திட்டங்கள் உள்ளன. அவையான;

3.2.1 சூரியவெவவில் தெற்கு வளாகத்தினைத் தாபித்தல்.


3.2.2 வெரஹெரவில் பல்கலைக்கழக வைத்தியசாலையினை நிர்மாணித்தல்.

3.2.3 இரத்மலானையில் பொறியியல் பீட கட்டிடத்தினை நிர்மாணித்தல்.

3.2.1 சூரியவெவவில் தெற்கு வளாகத்தினைத் தாபித்தல்

கட்டுமானப் பணிகளுக்காக இலங்கை கடற்படை மற்றும் சாலை வலையமைப்பை நிர்மாணிப்பதற்காக இலங்கை இராணுவத்தின் பங்களிப்புடன் தெற்கு வளாகத்தை நிறுவுவது கொ.பா. பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் இறுதியில், கட்டம் (I) இன் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தன (90% இற்கும் அதிகமாக). 2015 மே 05 அன்று அதிமேதகு சனாதிபதி அவர்களால் வளாகத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைத்ததன் பின்னர் 2015 பெப்ரவரி மாதம் கட்டிட சூழல் மற்றும் இடவியல் விஞ்ஞான பீடம் மற்றும் கணிப்பொறி பீடத்தின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தெற்கு வளாகத்தின் மாணவர் தொகை பின்வருமாறு.



3.2.2 கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை நிர்மாணம்

பல்கலைக்கழக மருத்துவமனை, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக நிர்மாணத் திட்டம் பின்வரும் முக்கிய பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

அ. 9 மாடிகள் கொண்ட பிரதான மருத்துவமனை கட்டிடத்தில் 706 நோயாளிகளுக்கான படுக்கைகள், 70 தீவிர சிகிச்சை படுக்கைகள் மற்றும் 38 விபத்து மற்றும் அவசரகால படுக்கைகள் உள்ளன.

ஆ. வெளிநோயாளிகள் பிரிவு, மருத்துவ தியேட்டர் பிரிவுகள், விபத்து மற்றும் அவசரகால பிரிவுகள் மற்றும் சலவை, சமையலறை, மருந்தகம், சில்லறை விற்பனை பகுதி போன்ற பிற துணை சேவைகளை உள்ளடக்கிய நிர்வாக கட்டிடம்.



இ. பிரதான மருத்துவமனை கட்டிடத்தின் கட்டுமானம் விரைவுபடுத்தப்பட்ட செயல்பாட்டின் கீழ் செய்யப்படுகிறது மற்றும் ஏறக்குறைய 90% கட்டுமான பணிகள் ஒப்பந்ததாரர் பாலி டெக்னாலஜிஸ் இன்க் மூலம் முடிக்கப்பட்டது.

3.2.3 பொறியியல் பீட கட்டிட நிர்மாணம்

2013 ஆம் ஆண்டு 500 மில்லியன் ரூபா செலவில் பொறியியல் பீடத்திற்கான புதிய கட்டிடம் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டதுடன் நிர்மாணப் பணிகளுக்கு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டிடத்தின் முதல் கட்டம் மார்ச் 2015 இல் நிறைவடைந்ததுடன் இரண்டாம் கட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2016 இல் தொடர்ந்த அதேவேளை வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் வரையறை காரணமாக 2017 வரை மேற்கொள்ளப்பட்டன. புதிய கட்டிடத் தொகுதியானது பணிச்சூழலியல், பொருளாதாரம், ஆற்றல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் பொறியியல் பீடத்தின் திறன் மேம்பாடு ஆகியவற்றை எதிர்காலத்தில் மாணவர்களின் வலிமை அதிகரிப்பதற்கு ஏற்றவாறு நிறைவேற்றுவதுடன் பங்களிக்கிறது.

1.7 எதிர்கால திட்டங்கள்

<u>கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்</u>

- நான்கு (04) பட்டப்படிப்புகளுடன் இரண்டு துறைகளுடன் தொழில்நுட்ப பீடத்தை நிறுவுதல்.
- வசதிகள் அதிகரிப்புடன் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.
- சட்ட பீடம் மற்றும் முகாமைத்துவ, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானுடவியல் பீடம் என்பவற்றுக்கு சகல வசதிகளுடன் இரண்டு (02) புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல்.
- பல்கலைக்கழகத்தின் பிரதான கேட்போர் கூடத்தை நிறைவு செய்தல்.
- இரத்மலானை விடுதி வசதிகளை புனரமைத்தல்
- வாகனத் தரிப்பிடம், தங்குமிடம், பல்பொருள் அங்காடி, உணவகம் போன்றவை உட்பட ஊழியர்களுக்கான பல வசதிகள் கொண்ட கட்டிட வளாகத்தை நிர்மாணித்தல்.
- தற்போதைய கல்விக் கட்டிடத்திற்கு தலைமையகத்தை மாற்றுதல்.
- உடற்பயிற்சி கூடத்தின் விரிவாக்கம்.
- மிலோடா அகடமி கட்டிடத்தில் பெருநகர வளாகத்தை நிறுவுதல்.

<u>கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை</u>

- வெரஹராவில் பெண்களுக்கான தங்குமிடத்தை நிறைவு செய்தல்.
- மருத்துவமனை தகவல் முகாமைத்துவ அமைப்பை நிறுவுதல்.
- ரேடியோ தெரபி சிகிச்சைப் பிரிவை நிறுவுதல்.
- கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையில் ஹைப்ரிட் தியேட்டர் மற்றும் கேத் ஆய்வகத்தை நிறுவுதல்.
- கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையில் ஹைபோபரிக் அறையை நிறுவுதல்.
- விபத்து மற்றும் அவசரநிலை (A&E) பிரிவை நிறுவுதல்.

<u>தெற்கு வளாகம்</u>

- கல்வி, மாணவர், பிற தரவரிசைகள் மற்றும் ரெக்டரின் தங்குமிட வசதிகளின் விரிவாக்கம்.
- கணனியியல் பீடத்திற்கான புதிய கட்டிட நிர்மாணம்.

2. பல்கலைக் கழகத்தின் பீடங்கள் மற்றும் வளாகங்கள்

கொ.பா. பல்கலைக்கழகத்தின் பீடங்களும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும்

பாதுகாப்பு மற்றும் உபாயக் கற்கைகள் பீடம்

பட்ட மேற்படிப்புக் கற்கைகள் பீடம்

தத்துவக் கலாநிதி
முதுத்தத்துவமாணி
முகாமைத்துவம் சார் எம்.எஸ்சி.
இராணுவ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார் எம்.எஸ்சி.
ஈ-ஆட்சி சார் எம்.பிஏ.
தேவை விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவத்தில் எம்.பிஏ.
சட்ட முதுமாணி (எல்.எல்.எம்.)
முகாமைத்துவம் பி.எஸ்சி.

மருத்துவ பீடம்

மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல் இளமாணி (எம்.பி.பி.எஸ்.)

பொறியியல் பீடம்

பி.எஸ்சி. கௌரவ (விமானம்சார் பொறியில்)
பி.எஸ்சி. கௌரவ (விமானப் பராமரிப்பு பொறியியல்)
பி.எஸ்சி. கௌரவ (உயிர் மருத்துவ பொறியியல்)
பி.எஸ்சி. கௌரவ (சிவில் பொறியியல்)
பி.எஸ்சி. கௌரவ (மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல்)
பி.எஸ்சி. கௌரவ (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு)
பி.எஸ்சி. கௌரவ (கடல் சார் பொறியியல்)
பி.எஸ்சி. கௌரவ (எந்திர பொறியியல்)
பி.எஸ்சி. கௌரவ (எந்திர மின்னணு பொறியியல்)

கணினியியல் பீடம்

பி.எஸ்சி. கௌரவ (கணினி விஞ்ஞானங்கள்)
பி.எஸ்சி. கௌரவ (கணினி பொறியியல்)
பி.எஸ்சி. கௌரவ (மென்பொருள் பொறியியல்)
பி.எஸ்சி. கௌரவ (தகவல் தொழில்நுட்பம்)
பி.எஸ்சி. கௌரவ (தகவல் முறைமைகள்)

சட்ட பீடம்

சட்ட இளமாணி (எல்.எல்.பி.)

முகாமைத்துவம், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியல் பீடம்

பி.எஸ்சி. தேவை விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவம்
பி.எஸ்சி. முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானங்கள்
பி.எஸ்சி. சமூக விஞ்ஞானங்கள்

இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்

பி.எஸ்சி. கௌரவ (மருந்துவ ஆய்வுகூடவிஞ்ஞானங்கள்)
பி.எஸ்சி. கௌரவ (தாதியியல்)
பி. மருந்தகவியல்
பி.எஸ்சி. கௌரவ (இயன்மருத்துவம்)
பி.எஸ்சி. கௌரவ (ஊடுகதிர்ப்படமெடுப்பு)

கட்டியெழுப்பட்ட சுற்றாடல் மற்றும் இடஞ்சார்ந்த விஞ்ஞானங்கள் பீடம்

கட்டடக்கலைசார் இளமாணி
பி.எஸ்சி. கௌரவ (கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடல்)
பி.எஸ்சி. கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடல்
பி.எஸ்சி. கௌரவ (அளவையியல் விஞ்ஞானங்கள்)
பி.எஸ்சி. அளவையியல் விஞ்ஞானங்கள்
பி.எஸ்சி. கௌரவ (கணிய அளவையியல்)
பி.எஸ்சி. கணிய அளவையியல்

2.1 பீடங்கள்

2.1.1 பட்டப்படிப்பு கற்கைகள் பீடம்

அறிமுகம்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடமானது ஆரம்பத்தில் பட்டமேற்படிப்பு பிரிவாக 2001 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதுடன், முப்படை சேவையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு முகாமைத்துவம் (பாதுகாப்பு கற்கைகள்) சார் முதுமாணி பட்டத்தை கற்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுத்தது. முதலாவது எம்.எஸ்சி. முகாமைத்துவம் (பாதுகாப்பு கற்கைகள்) சார் பட்ட நிகழ்ச்சித்திட்டம் 2003 மார்ச் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், விஞ்ஞான இளமாணி முகாமைத்துவம் (பாதுகாப்பு கற்கைகள்) சார் பட்ட நிகழ்ச்சித்திட்டம் 2003 யூலை மாதம் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. உயர் கல்விசார் தரத்தை உறுதிசெய்யும் வகையிலும், பங்குபற்றுபவர்கள் தமது சேவையில் பணியாற்றும் போதே இரண்டு ஆண்டுகளில் பட்டதாரிக் கற்கை செயற்பாடுகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையிலும் இலங்கையின் கீர்த்திமிக்க பல்கலைக்கழக சிரேஷ்ட கல்வியாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோரைக் கொண்ட குழாம் மூலமாக இப் பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. பட்டப்பின்படிப்பு நிறுவகமானது (IPGS) 2007 ஆண்டில் உருவாக்கப்பட்டதுடன், பின்பு 2009 ஆம் ஆண்டில் பணியாளர் அபிவிருத்தி மற்றும் தொழில் முன்னேற்றப் பிரிவு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இறுதியாக, 2012 ஆம் ஆண்டில் இது பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடமாக (FGS) தரமுயத்தப்பட்டது.

பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடமானது, முப்படையிலுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய நிலையிலுள்ளவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் துறை நிறைவேற்று உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒரு இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தையும் மற்றும் பல திப்ளோமா/ சான்றிதழ் பாடநெறிகளையும் நடாத்திச் செல்வதில் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றது. பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம் (FGS), பரஸ்பர செயற்பாட்டு அமர்வுகள், சோதனை அடிப்படையிலான கற்றல், சுயாதீன ஆய்வுக் கருத்திட்டங்கள் போன்றன ஊடாக மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துகின்றது. மேலும், பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் மூலம் முப்படையில் உள்ள உத்தியோகத்தர்களுக்காக கணினி திப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள் பலவற்றை நடாத்திச்செல்வதுடன், கொ.பா.ப. தகவல் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் அபிவிருத்தி சேவைகள் (CTC) நிலையத்தின் மூலம் விரிவுரைகளுக்கு உதவியளிக்கும் கணினி பயிற்சி நிலையமொன்றையும் (CITS & DS) இது கொண்டுள்ளது.

நியமனங்கள் சார்பாக ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள்

2019 ஆம் ஆண்டு பகுதியில் நியமனங்கள் சார்பாக பின்வரும் மாற்றங்கள் ஏற்பட்டன.

- பதவிநிலை உத்தியோகத்தர் I பதவி சார்பாக, லெப். கேர்ன. எஸ்.எம். அத்துகோரல அவர்களுக்கு பதிலாக, லெப். கேர்ன. ரீ.எல்.எம். சந்திரசேக்கர அவர்கள் 2019.02.18 முதல் நியமிக்கப்பட்டார்.
- பதவிநிலை உத்தியோகத்தர் II பதவி சார்பாக, மேஜர் ஜீ.டீ.ஏ.என்.பீ. சமரநாயக்க அவர்களுக்கு பதிலாக மேஜர் ஆர்.எம்.எஸ். ரத்நாயக்க அவர்கள் 2019.02.11 முதல் நியமிக்கப்பட்டார்.
- பதவிநிலை உத்தியோகத்தர் II (நிருவாக.) பதவி சார்பாக மேஜர் யூ.கே.டீ.எல்.கே. உடுகம அவர்களுக்கு பதிலாக மேஜர் ஆர்.எம்.எச். கருணாரத்ன அவர்கள் 2019.01.27 முதல் நியமிக்கப்பட்டார்.
- உதவி பதிவாளர் பதவி சார்பாக Ms. டீ.எல்.சி. அலஹகோன் அவர்களுக்கு பதிலாக திருமதி ஐ.டீ.ஏ.ரீ. பிரியதர்ஷனி அவர்கள் 2019.02.18 முதல் நியமிக்கப்பட்டார்.

<u>பணியாளர் அபிவிருத்திச் செயற்பாடுகள்</u>

- FGS பீடத்திலுள்ள சகல பணியாளர்கள் அங்கத்தவர்கள் சார்பாக, அவர்களின் குழு கட்டமைப்பு மற்றும் தலைமைத்துவ திறன்களை விருத்தி செய்வதற்காக "குழு கட்டமைப்பும் தலைமைத்துவ அபிவிருத்தியும்" பற்றிய செயலமர்வொன்று 2019.02.01 திகதி நடாத்தப்பட்டது.

<u>விசேட நிகழ்வுகள்/ வைபவங்கள்</u>

- பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான தொடக்க வைபவம் 2019 மார்ச் 27 ஆம் திகதி FGS கேட்போர்கூடத்தில் நடைபெற்றதுடன், கீழே குறிப்பிடப்படும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் சார்பாக மொத்தமாக 198 மாணவர்கள் கற்கைகளை தொடங்கினர்.

தொ. இல.	நிகழ்ச்சித்திட்டம்	மாணவர்களின் எண்ணிக்கை
01	எம்.பீல்./பீ.எச்டீ. (MPhil/PhD)	18
02	முகாமைத்துவம் சார் எம்.எஸ்சி.	15
03	தேவை விநியோ. ஒழுங்கமை. முகாமை. சார் எம்.பிஏ.	52
04	சட்ட முதுமாணி	58
05	பாதுகாப்பு மற்றும் உபாயக் கற்கைகள் சார் எம்.எஸ்சி.	13
06	சிவில் மற்றும் கட்டமைப்பு பொறியியல் சார் எம்.எஸ்சி.	09
07	அனர்த்த அபாய குறைப்பும் அபிவிருத்தியும் சார் எம்.எஸ்சி.	12
08	முகாமைத்துவம் சார் பி.எஸ்சி.	21

- IT நிகழ்ச்சித்திட்டம் சார் திப்ளோமா – XVII சம்பந்தமான பட்டம் வழங்கும் வைபவம் பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தினால் 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

- கொ.பா.ப. இன் பாதுகாப்பு மற்றும் உபாயக் கற்கைகள் பீடத்தின் ஒத்துழைப்புடன் பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம், சர்வதேச ஆய்வு மாநாடு 2019 இல் பாதுகாப்பும்

உபாயக் கற்கைகளும் எனும் அமர்வை நடாத்தியது - 2019.09.11 மற்றும் 2019.09.12 திகதி.

- FGS பீடத்தில் உள்ள பட்டமேற்படிப்பு பாடநெறிகள் பற்றிய பொது மக்களது விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக பீடத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் சார் விரிவான விவரங்கள் கொண்ட கண்காட்சி கூடமொன்றை கொ.பா.ப. இன் திறந்த நாள் நிகழ்வின் போது ஒழுங்குசெய்ததன் மூலம் பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம் பங்களிப்புச் செய்தது. மேலும், திறந்த நாள் நடவடிக்கைக்களுக்காக கொ.பா.ப. பல்கலைக்கழக வைத்தியசாலை (UHKDU) மற்றும் கட்டியெழுப்பட்ட சுற்றாடல், இடஞ்சார்ந்த விஞ்ஞானங்கள் பீடம் ஆகியவற்றுக்கான இடவசதியை 2019.10.06 அன்று FGS பீடம் வழங்கியது.
- IT நிகழ்ச்சித்திட்டம் சார் திப்ளோமா - XVIII சம்பந்தமான பட்டம் வழங்கல் வைபவம் பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தினால் 2019 திசம்பர் 16 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- கொ.பா.ப. இன் பட்டமளிப்பு விழா - 2019, BMICH மண்டபத்தில் 2020.01.09 மற்றும் 2020.01.10 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டதுடன், FGS பீட பட்டமேற்படிப்பு மாணவர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்கள் மொத்தம் 98 பேருக்கு கீழே குறிப்பிடப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமாக அவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்பட்டன.

தொ. இல.	**நிகழ்ச்சித்திட்டம்**	**பட்டதாரிகளின் எண்ணிக்கை**
01	எம்.பீல்./பீ.எச்டீ. (MPhil/PhD)	01
02	முகாமைத்துவம் சார் எம்.எஸ்சி.	17
03	தேவை விநியோ. ஒழுங்கமை. முகாமை. சார் எம்.பிஏ.	16
04	ஈ-ஆட்சி சார் வியாபார நிருவாக முதுமாணி	05
05	சட்ட முதுமாணி	24
06	பாதுகாப்பு மற்றும் உபாயக் கற்கைகள் சார் எம்.எஸ்சி.	11
07	இலத்திரனி., தொலைத்தொடர். பொறியி. சார் எம்.எஸ்சி.	01
08	சிவில் மற்றும் கட்டமைப்பு பொறியியல் சார் எம்.எஸ்சி.	01
09	பாது. மற்றும் உபாய கற்கை. சார் பட். பின்படி. திப்ளோ.	01
10	தேவை விநி. ஒழு. முகாமை. சார் பட்டப்பின்படி. திப்ளோ.	01
11	சட்டம் சார் பட்டப்பின்படி. திப்ளோமா	01
12	இலத்திரனியல் பொறியி. சார் பட்டப்பின்படி. திப்ளோ.	01
13	முகாமைத்துவம் சார் பி.எஸ்சி.	18

2.1.2 பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைகள் பீடம்

அறிமுகம்

பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைகள், கொ.பா.ப. இன் மிக முக்கிய கற்கைத் துறை என்பதுடன், அதனது பொறுப்புக்கள் பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தரின் (பாதுகாப்பு மற்றும் நிருவாகம்) விடயப்பரப்பின் கீழ் உள்வருகின்ற பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைகள் பீடத்திடம் (FDSS) ஒப்படைக்கப்பட்டுள்ளது. FDSS பீடம், பயிலிளவல் அலுவலர்களுக்கும், அதேபோல் முப்படை சேவையிலுள்ளோர்களுக்கும் உயர் தரத்திலான இராணுவம் சார் கல்வி மற்றும் பயிற்சியை உறுதிசெய்வதற்காக பல்துறை சார்ந்த கற்கைகள் மற்றும் இராணுவ பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்புவாய்ந்த பாதுகாப்பு கற்கைகள் திணைக்களம் மற்றும் உபாயக் கற்கைகள் திணைக்களம் எனும் இரு கற்கைப் பிரிவுகளை கொண்டுள்ளது. பயிலிளவல் அலுவலர்கள் பயிற்சிக்கு புறம்பாக FDSS பீடமானது தனியார் மற்றும் அரசாங்க பாடசாலையிலுள்ளோர்களுக்கும் இலங்கை நிருவாக சேவையின் ஆட்களுக்கும் (SLAS) தலைமைத்துவ மற்றும் ஆளுமை விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்திவருகின்றது.

பாதுகாப்பு கற்கைகள் திணைக்களம்

பாதுகாப்பு கற்கைகள் திணைக்களம் (DDS) பயிலிளவல் அலுவலர்களின் ஒழுக்கம், இராணுவப் பயிற்சி மற்றும் நிருவாக அலுவல்கள் சகலவற்றுக்கும் பொறுப்பாகவும் நாள்முறை மாணவர்களின் நிருவாகம் சம்பந்தமாகவும் பொறுப்பாக இருக்கின்றது. பாதுகாப்பு கற்கைகள் திணைக்களம், உள்வாங்கல் 32, 33, 34, 35, 36 மற்றும் 37 என ஆறு (06) ஸ்குவாட்ரன் பிரிவுகளை கொண்டுள்ளதுடன், ஒவ்வொரு ஸ்குவாட்ரன் பிரிவும் பல்வேறு உள்வாங்கல்களுடன் தொடர்புபட்ட பயிலிளவல் அலுவலர்களை உள்ளடக்கி உருவாக்கப் பட்டுள்ளதுடன், ஏவுதல் மற்றும் கட்டுப்படுத்துதல் தொடர்பாக பல டீரூப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஸ்குவாட்ரன் பிரிவு ஏவுநர், முழு ஸ்குவாட்ரன் பிரிவுக்கும் பொறுப்பாக இருக்கும் அதேவேளை, டீரூப் பிரிவுகள் அவர்களுக்கு பொறுப்பாகவுள்ள அந்தந்த பிரிவு ஏவுநர்களின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றன.

பாதுகாப்பு கற்கைகள் பீடத்தின் அமைப்பு

அங்கீகரிக்கப்பட்ட அமைப்பானது ஆறு பயிலிளவல் அலுவலர் உள்வாங்கல்களை கொண்டுள்ளது. பாதுகாப்பு கற்கைகள் பீடத்தில் 2019 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான அமைப்பு பின்வருமாறு காணப்பட்டது.

பதவிகளில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள்

பாதுகாப்புக் கற்கைகள் பீட நியமனங்கள் சார்பாக பின்வரும் முக்கிய மாற்றங்கள் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்டன.

பெயர்	பதவி	கடமையேற்ற திகதி	
		முதல்	முதல்
லெப். கர்ண. MADR மங்கள RSP	பிரதி பீடாதிபதி -வேரஹெர	11.03.2018	இற்றை வரை
மேஜர் MAHS பெரேரா	SO – II	13.03.2018	30.06.2019
மேஜர் JPU குமார	பதில் கடமை SO - II	01.07.2019	04.08.2019
மேஜர் DJP திக்கும்புர RSP	SO – II	05.08.2019	இற்றை வரை
கப்டன் WJP விஜேசுந்தர	SO – III	2014	08.03.2019
கப்டன் KML குணசேக்கர		25.02.2019	இற்றை வரை

புதிய ஆட்சேர்ப்புக்கள் (இராணுவம்சார்):

2019 ஆண்டின் போது பாதுகாப்பு கற்கைகள் பீடத்தில் பின்வரும் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொ/ இல.	பெயர்	பதவி	கடமையேற்ற திகதி
1	லெப். கேர்ன. ரீ.எல்.எம். சந்திரசேக்கர RWP	பிரதி பீடாதிபதி - FDSS	13.11.2019

உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்/ புதிய கருத்திட்டங்கள்

பயிலிளவல் உணவகம் மற்றும் பயிலிளவல் தங்குமிடக் கட்டம் ஆகியவற்றுக்காக 2019 ஆண்டில் இரவு உணவு மேசைகள் 20, Bread Slices அதி குளிரூட்டி 02 மற்றும் உருக்கு லொக்கர்கள் (ஒற்றை) 175 என்பன பயிலிளவல் உணவக நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டன.

இராணுவ பயிற்சியளிப்பு நடவடிக்கைகள்

கற்றல் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடும் அதேவேளை பயிலிளவல் அலுவலர்கள் அனைவரும் அடிப்படை இராணுவப் பயிற்சி நடவடிக்கைகளிலும் பங்குபற்றுமாறு வேண்டப்படுத்தப்படுவர். ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைக்கு இணங்க, 2019 ஆம் ஆண்டிலும் பட்டதாரி நிகழ்ச்சித் திட்டமானது அண்ணளவாக கல்விசார் செயற்பாடுகளுக்கு 75% ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அடிப்படை இராணுவ பயிற்சிகளுக்கு மிகுதி 25% பயன்படுத்தப்பட்டுள்ளது.

பயிலிளவல் ஆட்சிக் குழு – கொ.பா.ப.

பயிலிளவல்கள் மத்தியில் சுய ஆட்சிப்படுத்தல் முறைமையை அறிமுகப் படுத்துவதற்காகவும் அவர்களின் தலைமைத்துவப் பண்புகளை செயற்படுத்தும் பயிற்சி மற்றும் மதிப்பாய்வு என்பவற்றுக்கான வாய்ப்பாகவும், உள்வாங்கல் 33, 34 மற்றும் 35 ஆகியவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையான பயிலிளவல் அலுவலர்கள் 2019 ஆம் ஆண்டுக்கான கொ.பா. பல்லைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர்களாக 53 வெற்றிடங்களுக்கு நியமனம் செய்யப்பட்டனர்.

தலைமைத்துவப் பயிற்சிகள்

பின்வரும் தலைமைத்துவப் பயிற்சிகள் கொ.பா.ப. மூலம் நடாத்தப்பட்டன.

அ. கொ .பா.பல்கலைக்கழகத்தில் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று 3 உள்வாங்கல்) 6 - நாள்முறை மாணவர்கள்201 (9 மார்ச் 03 மற்றும் 04 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

ஆ. தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 40 பேர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று 2019 மே 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

கொ.ப.ப. கழகங்கள்

பயிலிளவல் அலுவலர்கள் மற்றும் நாள்முறை மாணவர்கள் சகலரும் ஒவ்வொரு புதன் கிழமையும் கழகச் செயற்பாடுகளில் பங்குபற்றுவர்.

வெளியக செயற்பாடுகள்

பின்வரும் வெளியக செயற்பாடுகளில் கொ.பா.ப. இன் பயிலிளவல் அலுவலர்கள் பங்குபற்றினர்:

- 8 மைல் ஓட்டம் - 19.01.2019, 18.11.2019 & 20.12.2019 - உள்வாங்கல் 33,34,35,36
- 10 மைல் ஓட்டம் - 02.03.2019 - உள்வாங்கல் 33
- கடற்கரை அணிவகுப்பு - 11.08.2019 - உள்வாங்கல் 33,34,35,36
- வருடாந்த நீச்சல் போட்டி - 15.02.2019 & 16.02.2019 - உள்வாங்கல் 33
- வருடாந்த தகைமையுடைய பயிலிளவல் மற்றும் சிறந்த நீச்சல் வீரர் போட்டி - 16,17,18,19,20,21 & 23.09.2019 - உள்வாங்கல் 33
- துப்பாக்கி சுடுதல் – 24.08.2019 - உள்வாங்கல் 33
- துப்பாக்கி சுடுதல் – 09.02.2019 & 24.08.2019 - உள்வாங்கல் 34
- துப்பாக்கி சுடுதல் – 23.06.2019 & 29.09.2019 - உள்வாங்கல் 35
- துப்பாக்கி சுடுதல் – 09,10.03.2019 & 14,15.09.2019 - உள்வாங்கல் 36
- தாங்கும் ஆற்றல் அணிவகுப்பு – 22.06.2019 - உள்வாங்கல் 33,34,35,36

கௌரவ வாள் மற்றும் விசேட உயர் வகுப்பு விருது வழங்கப்பட்டவை

2019 ஆம் ஆண்டில் கௌரவ வாள் வழங்கப்பட்டது.

4599 2/லெப். ஜே.ஏ.டீ. வீரசிங்ஹ

பட்டமளிப்பு இரவு விருந்துபசாரம்

உள்வாங்கல் 32 மற்றும் உள்வாங்கல் 33 இன் பட்டம் பெற்றுக்கொண்டோர்களுக்கான பட்டமளிப்பு இரவு விருந்துபசாரம் 2020 சனவரி மாதம் 12 ஆம் திகதி மவுன்ட் லேவனியா ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

விசேட நிகழ்வுகள்/ வைபவங்கள்புற / பாடவிதான செயற்பாடுகள்

2019 ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டன.

- 2019 பெப்பிரவரி 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் வருடாந்த நீச்சல் போட்டி கொ.பா.ப. வளவில் நடாத்தப்பட்டது.
- 2019 மார்ச் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டன.
- காலஞ்சென்ற சேர் ஜோன் கொத்தலாவல அவர்களின் 122வது பிறந்த நாள் நினைவு கூறல் 2019 ஏப்பிரல் 4 ஆம் திகதி கொண்டாடப்பட்டது.
- உள்வாங்கல் 36 பிரிவினரின் பெற்றோர் தினம் 2019 ஏப்பிரல் 6 நடாத்தப்பட்டது.
- புத்தாண்டு வைபவம் 2019 ஏப்பிரல் 12 ஆம் திகதி கொண்டாடப்பட்டது.
- வெசாக் கூடு போட்டி 2019 மே 18, 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.
- ஜுலை போல் 2019 யூலை 25 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- சர்வதேச ஆராய்ச்சி மாநாடு 2019 செப்ரெம்பர் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.
- கொ.பா.ப. இன் திறந்த நாள் (Open Day) 2019 அக்டோபர் 06 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல அவர்களின் 39வது ஆண்டு மறைந்த தின ஞாபகார்த்தமாக பிரித் பாராயணமும் அன்னதானமும் 2019 அக்டோபர் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் கொ.பா.ப. வளவில் நடாத்தப்பட்டது.
- ஆண்டு காலப்பகுதியில் ஒவ்வொரு போயா தினமும் "தர்ம போதனைகள்" நடாத்தப்பட்டன.

வருடாந்த விளையாட்டுப் போட்டி – 2019

பயிலிளவல் அலுவலர்கள் மற்றும் நாள்முறை மாணவர்கள் அனைவரும் விளையாட்டுதுறை சார் செயற்பாடுகளில் அதிகமாக ஈடுபடுவதை உறுதிசெய்வதற்காக 2019.03.15 மற்றும் 2019.03.16 ஆகிய தினங்களில் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. சகல பயிலிளவல் அலுவலர்களும் நாள்முறை மாணவர்களும் கெமுனு, கஜபா, பெரகும், விஜயபா, மஹசேன் மற்றும் வலகம்பா எனும் ஆறு இல்லங்களாக குழுவாக்கப்பட்டு, இவ் ஆறு குழுக்களுக்கும் இடையே மெய்வல்லுநர் போட்டிகளுடன் விளையாட்டுப் போட்டிகளும் நடாத்தப்பட்டன. வெற்றி பெற்ற ஸ்குவாட்ரன் அணியும் அவற்றின் புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன.

- கெமுனு - 415 புள்ளிகள்
- கஜபா - 316 புள்ளிகள்
- மஹசேன் - 194 புள்ளிகள்
- விஜயபா - 176 புள்ளிகள்
- பெரகும் - 157 புள்ளிகள்
- வலகம்பா - 112 புள்ளிகள்

விளையாட்டுசார் செயற்பாடுகள் மூலம் பெற்ற அடைவுகள்

பௌதிக மற்றும் உள உறுதிப்பாடு, வலிமை மற்றும் ஆற்றல் என்பன கடமையாற்றும் வாழ்க்கையின் போது இருக்கவேண்டியதன் முக்கியத்துவத்தைக் கவனத்தில் கொண்டு, கடந்த வருடங்களில் நடாத்தப்பட்டது போல இவ்வாண்டும் பயிலிளவல் அலுவலர்கள் அனைவருக்கும் விளையாட்டு மற்றும் தேகாப்பியாச செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபடுவதற்கு ஊக்கமளிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தில் இருக்கும் காலப்பகுதியில் குறைந்தபட்சம் குழு முறை சார்ந்த விளையாட்டு ஒன்றிலாவது முழு ஈடுபாட்டுடன் பங்குகொள்வது கட்டாயமானதாகும். பயிலிளவல் அலுவலர்கள் மற்றும் நாள்முறை மாணவர்கள் விளையாட்டுக்களில் பங்குபற்றுவதற்காக ஊக்குவிப்புச் செய்யப்படுவதுடன், அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் வழங்கப்படுகின்றன.

விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்குசெய்து நடாத்துவது விளையாட்டுத் துறை உத்தியோகத்தரின் பொறுப்பாகும். பயிலிளவல் அலுவலர்களையும் நாள்முறை மாணவர்களையும் ஏனைய பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளியக நிறுவனங்கள் என்பன தெரிந்து கொள்வதற்காகவும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும் ஏனைய பல்கலைக்கழகங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றுக்கு எதிராக போட்டிகள் நடாத்தப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் விளையாட்டுத்துறை சார் அடைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

"கொ.பா.ப. வர்ணங்கள் பெற்றுக்கொண்டோர்" எண்ணிக்கை:

கொ.பா.ப. மட்டத்தில் செயலாற்றல்	: 143
தேசிய மட்டத்தில் செயலாற்றல்	: 15
சர்வதேச மட்டத்தில் செயலாற்றல்	: 01

2.1.3 மருத்துவ பீடம்

அறிமுகம்

கொ.பா.ப. இல், 2009 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட மருத்துவ பீடமானது, இலங்கையின் மருத்துவக் கல்வித் துறையில் மேன்மைமிக்கதாக துரித வளர்ச்சியை கண்டுவருகின்றது. மருத்துவ பீடத்தின் மூலம் வழங்கப்படும் எம்.பி.பி.எஸ். (MBBS) பட்ட நிகழ்ச்சித்திட்டமானது, இராணுவ மருத்துவ பயிலிளவல் அலுவலர்கள் மற்றும் கட்டணம் செலுத்துதல் அடிப்படையில் வெளிநாட்டு சிவில் மருத்துவ மாணவர்கள் மாத்திரமே பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது. இப் பீடத்தில், முன் சிகிச்சை விஞ்ஞானங்கள் திணைக்களம், இணை சிகிச்சை விஞ்ஞானங்கள் திணைக்களம், சிகிச்சையக விஞ்ஞானங்கள் மற்றும் மருத்துவக் கல்வித் திணைக்களம் எனும் நான்கு பிரதான திணைக்களங்கள் காணப்படுகின்றன. கொ.பா.ப. மருத்துவ பீடம், பட்டமேற்படிப்பு பயிற்சியளித்தல் நிறுவனமொன்றாக கொழும்பு, மருத்துவப் பட்டமேற்படிப்பு நிறுவகத்தின் மூலமும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள சிறந்த அனுபவமிக்க கல்வியாளர்கள் மற்றும் மருத்துவ தொழில்வாண்மையாளர்கள் மூலம் எம்.பி.பி.எஸ். பட்ட நிகழ்ச்சித்திட்டமானது நடாத்தப்படுகிறது.

புதிய கருத்திட்டங்கள்

ஆய்வுக் கருத்திட்டங்கள்/ மேற்பார்வை பற்றிய விபரம்

தொ. இல.	பணியாட்தொகுதி உறுப்பினரின் பெயர்	ஆய்வுக் கருத்திட்டத்தின் தலைப்பு
01	பேராசி. டபிள்யூ. அபயவிக்கிரம	• ஆய்வு மானிய முன்மொழிவொன்று குறிப்பிடப்பட்டுள்ள முறையில் NSF நிதியளிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
02	சிரேஷ்டி. பேராசி. எஸ். ஆர். த அல்விஸ் செனவிரத்ன	• UHKDU வைத்தியசாலை குடும்ப மருத்துவ சிகிச்சையகத்தில், குடும்ப மருத்துவ சிகிச்சையக சந்திப்பின் போது மேற்படி தொடர்பாடல் சார்பான பின்னூட்டலை செய்வதற்காக, மாணவர் – நோயாளி தொடர்புகள் சார் காணொலி பதிவுக்கான காணொலி கெமரா மற்றும் தொலையியக்கி கட்டுப்பாட்டு பதிவுசெய்தல் முறைமையுடனான தொடர்பாடல் திறன்கள் பயிற்சி ஆய்வுகூடமொன்று (Communication Skills Training Laboratory - CSTL) அமைக்கப்பட்டது. மேலும், PPD நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மருத்துவ மாணவர்களின் தொடர்பாடல் திறன்கள் பயிற்சிக்காகவும் பயன்படுத்த முடியும்.
03	பேராசி. சி.எல். குணசேக்கர	• கருத்திட்டம் - *Tragia involucrata* L. மீதான இரசாயன உராய்வு மற்றும் hyperglycaemic உள்ள நோயாளர்கள் மீதான விளைவை இனங்காணுதல். 2014 - UGC ஆய்வு மானியம் மூலம் நிதியளிப்பு செய்யப்பட்டது. பேராசி. சி.எல். குணசேக்கர – இணை மேற்பார்வையாளர்,

		பீ.எச்.டீ. மாணவர் டாக்டர் மும்தாஸ் ஷிபா பால்லே - 2014 முதல் மேற்கொள்ளப் பட்டுவருகிறது. • கருத்திட்டம் - டெங்குக்கு எதிராக ஒரு பரந்தளவில் எதிர்வினை நடுநிலைப்படுத்தும் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட JEV தடுப்பூசி அபேட்சகர்களை முன்னேற்றமடையச் செய்தல். போட்டிசார் NSF ஆய்வு மானியம் 2015 மூலம் நிதியளிப்பு செய்யப்பட்டது பேராசி. சி.எல். குணசேக்கர - பிரதான மேற்பார்வையாளர், எம்.பீல் (MPhil) மாணவர் - திரு. பிரதீப் தர்ஷன - 2014 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. • கருத்திட்டம் – மரபணு பொருளைக் கண்டறிவதற்கான ஒரு புதிய முறையை நிறுவுதல்: டெங்கு வைரஸ் மற்றும் கிளமிடியா டிராக்கோமாடிக்ஸ் சார்பான லூப் மத்தியஸ்த ஐசோதர்மல் பெருக்கம் சார் (LAMP) மதிப்பீடுகள். ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக ஆய்வு மானியம், பேராசி. சி.எல். குணசேக்கர - இணை மேற்பார்வையாளர், எம்.பீல் (MPhil) மாணவி - Ms. ஹெமாலி அத்தநாயக்க - 2017 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. • கருத்திட்டம் - இலங்கையின் பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் தெரிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையான தாவரங்களின் டெங்கு வைரசுக்கு எதிரான செயற்பாடு. ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக ஆய்வு மானியம், பேராசி. சி.எல். குணசேக்கர - இணை மேற்பார்வையாளர், எம்.பீல் (MPhil) மாணவி - Ms. கலனி பெரேரா - 2017 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது
04	பிரிகேடி. டாக்டர் ஆ.பீமகுலொலுவ	• USJP பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தில் பதிவு செய்வதன் ஊடாக, 2019 யூலையில் எம்.பீல் கற்கைநெறி பீ.எச்டீ. இற்கு உயர்த்தப்பட்டது. கற்கைநெறியின் தலைப்பு: புற்றுநோய் வலி சார் முழுமையான மதிப்பீடு: புற்றுநோய் வலியுள்ள நோயாளர்களிடையே 4-ம் வகை வலி சார் தொடர் பின்கவனிப்பு மூலம் வளர்ச்சி மற்றும் சரிபார்ப்பு பற்றிய மதிப்பீட்டு நாட்குறிப்பு.
05	டாக்டர் எம்.பீ.ஏ.பி. அபயசிங்ஹ	• UHKDU வைத்தியசாலையின் மருத்துவ சட்ட பணிகளை, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையிடம் தற்காலிகமாக கையளிப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரி

		ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்தப் பட்டது. 600 இற்கும் மேற்பட்ட புதிய மாணவர்கள் உள்வாங்கப்பட்டதைத் தொடர்ந்து, அதிகப்படியான கல்விசார் பணிகளை எதிர்கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. • ஹொரணை தள வைத்தியசாலையில் புதிதாக மருத்துவ சட்ட பயிற்சி அலகொன்றை அமைத்ததுடன், பயிற்சியை மேற்பார்வையும் செய்யப்பட்டது.
06	டாக்டர் எச்.எம்.எஸ். வைத்யதிலக்க	• UH KDU வைத்தியசாலை குருதியியல் ஆய்வுகூடத்தில் மேலதிகமாக பிரதான பகுதி பணிகள் சேர்க்கப்பட்டது. நான்கு MLS-களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் பற்றி பயிற்சியளித்ததுடன், அதற்கான ஆவணங்களை தயாரித்தது. • ஆய்வுகூடத்தில் நிகழ்த்தப்படும் ஒவ்வொரு சோதனைக்கும் நிலையான தொழிற்பாட்டு நடைமுறைகள் (SOP) தயாரிக்கப்பட்டன. • 2019 அக்டோபர் முதல் புதிய சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன – எலும்புமச்சை இரும்பு கறை, ரெட்டிகுலோசைட் எண்ணிக்கை (Bonemarrow Iron stain, Reticulocyte count). • வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் படையினர் ஆகியோரின் சாதாரண பிளாஸ்மா தொகுப்பு (Pool Normal plasma) தயாரிக்கப்பட்டது - 2019.03.05 ஆம் திகதி. குருதி நன்கொடையாளிகளுக்கு FBC, PT, APTT அறிக்கைகளும் மற்றும் தேவைப்படுவோருக்கு மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.
07	மேஜர் (டாக்டர்) டபிள்யூ. எம்.எம். எஸ். பண்டார	• கருத்திட்டம் – குருதியியல் சார்பாக உயிரியல் அடையாளம் (Biomarker) கண்டுபிடிப்பு – மைலோடிஸ்பிளாஸ்டிக் (Myelodysplastic) நோய்க்குறி மானிய இல. RPHS/2016/C04 – தேசிய விஞ்ஞான மன்றம் – சுகாதார விஞ்ஞானம் பற்றிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் – 2016/2017 இணை ஆராய்ச்சியாளர்கள் – டாக்டர் டபிள்யூ.எம்.எம். எஸ். பண்டார மற்றும் டாக்டர் ஏ.ஜே.ஐ.எஸ். ரத்நாயக்க
08	டாக்டர் கே.எஸ்.ஆர். புஷ்பகுமார	• UH KDU வைத்தியசாலை, நரம்பியல் அறுவை சிகிச்சை பிரிவை அபிவிருத்தி செய்யும் பணிகளில் தொடர்ந்து ஈடுபடல் மற்றும் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளுக்கு உதவி செய்தல். • நியமனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து டாக்டர் புஷ்பகுமார, நரம்பியல் அறுவைசிகிச்சை உபகரணங்கள் மற்றும் கருவிகளை சத்திரசிகிச்சை கூடத்திற்கு கொள்வனவு செய்தலை விரைவுபடுத்துவது சார்பாக

		கடுமையாக பணியாற்றினார்.
09	டாக்டர் ரீ.ஐ. விதானவசம்	• UH KDU வைத்தியசாலை இரத்த வங்கியை இலங்கை NBTS உடன் கூட்டிணைத்தல் மற்றும் கொழும்பு வலயத்தின் வைத்தியசாலை இரத்த வங்கியாக செயற்படுதல்.
10	டாக்டர் ரீ.வீ. சஞ்ஜீவனி	• இலங்கையில் மீண்டும் மீண்டும் ஆப்ஃதோஸ் வாய்ப்புண் (aphthous stomatitis) ஏற்படும் நோயாளர்களின் விட்டமின் டீ (25 Hydroxy) மட்டம்.
11	டாக்டர் ஏ.ஜே.ஐ.எஸ். ரத்நாயக்க	• கருத்திட்டம் – குருதியியல் சார்பாக உயிரியல் அடையாளம் (Biomarker) கண்டுபிடிப்பு – மைலோடிஸ்பிளாஸ்டிக் (Myelodysplastic) நோய்க்குறி மானிய இல. RPHS/2016/C04 – தேசிய விஞ்ஞான மன்றம் – சுகாதார விஞ்ஞானம் பற்றிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் – 2016/2017 இணை ஆராய்ச்சியாளர்கள் – டாக்டர் டபிள்யூ.எம்.எம். எஸ். பண்டார மற்றும் டாக்டர் ஏ.ஜே.ஐ.எஸ். ரத்நாயக்க
12	டாக்டர் வை.எஸ்.எச். ரீ.டீ. சில்வா	• கருத்திட்டம் – டெங்கு நோய்த்தொற்று சார்பாக நாளங்களில் கசிவை ஏற்படுத்துவதில் அழற்சி நொதிகள், இலிப்பிட்டு கடத்திகள், சைட்டோகைன்கள், லுகோட்ரியன்கள் மற்றும் ஹிஸ்டமைன் ஆகியவற்றின் பங்களிப்பை ஆராய்தல். பீ.எச்டீ. மாணவர் - டாக்டர் வை.எஸ்.எச்.ரீ.டீ. சில்வா (ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக, மருத்துவ பீடத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.)

<u>பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்/ அடைவுகள் / பிரசுரங்கள்</u>

முன் சிசிச்சைசார் விஞ்ஞானங்கள் திணைக்களம்

பேராசி. சி.எல். குணசேக்கர

<u>பிரசுரங்கள்</u>

- குருப்பு ஏ.ஐ., பரணகம பீ., குணசேக்கர சி.எல். (2019) - இலங்கையில் பாரம்பரிய மருத்துவ சூத்திரத்தில் புற்றுநோய்க்கு எதிராக பொருவாக பயன்படுத்தப்படும் மருத்துவ தாவரங்கள். சவுதி பாஃமா J. 27: 565-573.

<u>மாநாட்டில் பிரசுரிக்கப்பட்டவை</u>

- நடுகல எம்.என்., பிரேமரத்ன பீ.எச்., குணசேக்கர சி.எல். (2019). – பாரா நைட்ரோ ஃபைனிலலனைனுடன் மாற்றியமைக்கப்பட்ட டெங்கு புரத பெப்டைட்களின் நோயெதிர்ப்புத் திறன். 27-வது FAOBMB மற்றும் 44-வது MSBMB மாநாடு, 2019 ஆகஸ்ட் 19-22, கோலாலம்பூர், மலேசியா.

<u>அடைவுகள்</u>

- பேராசி. சி.எல் குணசேக்கர, "டெங்குக்கு எதிராக ஒரு பரந்தளவில் எதிர்வினை நடுநிலைப் படுத்தும் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட தடுப்பூசி அபேட்சகர்களை முன்னேற்றமடையச் செய்தல்" எனும் கருத்திட்ட ஆராய்ச்சிப் பணியை

மேற்கொண்டதற்காக உயிரியல் தொழில்நுட்பப் பிரிவின் கீழ், NSF ஆராய்ச்சி விருதை வென்றெடுத்தார். இது 2017 இல் பூர்த்திசெய்யப்பட்டது.

பேராசி. ஏ.எல்.எஸ். மென்டிஸ்

பயிற்சியளித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்:

- கல்விசார் மாநாடுகள் பலவற்றுக்கு பிரதம அதிதியாகவும் மற்றும் பிரதான பேச்சாளராகவும் அழைக்கப்பட்டிருந்தார்.
  இலங்கை மயக்கமருந்தியல் மருத்துவர்கள் மற்றும் தீவிர பராமரிப்பு மருத்துவர்களின் கல்லூரி - வலி மருத்துவ பீடம்
  இலங்கை பல்கலைக்கழக நூலகங்களின் சர்வதேச மாநாடு.

பேராசி. ரீ.ஆர் வீரசூரிய

பயிற்சியளித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்:

- அபயகுணவர்தன எச்., மயூரன் எஸ்., ஜயவர்தன ஜே., விஜேசிங்ஹ ஆர்.ஏ.என்.கே., நவரத்ன பீ.பி.வீ., பாலசூரிய ஏ., த சில்வா ஏ.டீ., 2019. இரு வணிக நொதி இணைக்கப்பட்ட இம்யூனோசார்பன்ட் மதிப்பீடுகளைப் பயன்படுத்தி DENV IgG அல்லது கடந்த DENV நோய்த்தொற்றை கண்டறிதல் (Detection of anti-DENV IgG or past DENV infection using two commercial enzyme-linked immunosorbant assays). நுண்ணுயிரியல் சார் இலங்கை சங்கத்தின் (SSM) 8-வது வருடாந்த மாநாடு மற்றும் விஞ்ஞானபூர்வ அமர்வுகள் – 2019 இல் வாய்மூல சமர்ப்பித்தல், தொகு. 07, ISSN 2345-9646, பக். 5.
- திசாநாயக்க சி., அபயகுணவர்தன எச்., கருணாரத்ன எச்.எம்.எஸ்., சேனாநாயக்க என்.பீ., 2019. மூன்றாம் நிலை பராமரிப்பு வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களிடையே வட்டநுண்ணுயிரி ஆரியஸ் நாசிசார்ந்து கடத்தும் மற்றும் நுண்ணுயிர்க்கொல்லி நோய்ப்பாதிப்பு தன்மை பாங்கு (Staphylococcus aureus nasal carriage and the antibiotic susceptipility pattern among hospitalized patients at a tertiary care hospital.) நுண்ணுயிரியல் சார் இலங்கை சங்கத்தின் (SSM) 8-வது வருடாந்த மாநாடு மற்றும் விஞ்ஞானபூர்வ அமர்வுகள் – 2019 இல் சுவரொட்டி சமர்ப்பித்தல், தொகு. 07, ISSN 2345-9646, பக். 29.
- என்.பீ. சேனாநாயக்க, எப்.எஸ். சாலி, எச். அபயகுணவர்தன, எச்.எம்.எஸ். கருணாரத்ன, என்.எஸ். சந்திரசிறி. – இலங்கையில் உள்ள மூன்றாம் நிலை பராமரிப்பு வைத்தியசாலையொன்றில் மெதிசிலின் எதிர்ப்பு வட்டநுண்ணுயிரி ஆரியஸ்-சுக்கு வான்கோமைசின் குறைந்தபட்ச தடுப்பு செறிவு (Minimum Inhibitory Concentration of Vancomycin to Methicillin Resistant Staphylococcus aureus at a Tertiary Care Hospital in Sri Lanka), மருத்துவ விஞ்ஞானங்கள் சார் சிலோன் சஞ்சிகை (Journal), 2019, தொகு. 56 (வெளியீடு 2) – பிரசுரித்தலை எதிர்நோக்கியிருக்கிறது.

2.1.4 பொறியியல் பீடம்

அறிமுகம்

பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் ஆறு திணைக்களங்களைக் கொண்டுள்ளது. அவை, விமானம் சார் பொறியியல் திணைக்களம், சிவில் பொறியியல் திணைக்களம், மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம், கடல் சார் பொறியியல் திணைக்களம், எந்திரப் பொறியியல் திணைக்களம் மற்றும் கணிதவியல் திணைக்களம் மற்றும் கைத்தொழில் பயிற்சி அலகு என்பனவாகும். பீடமானது, பயிலிளவல் அலுவலர்கள் சார்பாக நான்கு வருடமும் ஆறு மாதக் காலப்பகுதியையும், நாள்முறை மாணவர்கள் சார்பாக நான்கு வேறுபட்ட துறைகளில் நான்கு வருட காலப்பகுதியையும் கொண்ட விஞ்ஞான இளமாணி (பி.எஸ்சி.) பட்டத்தை வழங்குகின்றது. பொறியியல் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒன்றுசேர்த்து உள்வாங்கப்படுகின்றனர். கொ.பா.ப. கட்டணம் செலுத்தும் அடிப்படையில் சார்க் (SAARC) பிராந்தியத்திலுள்ள வெளிநாட்டு மாணவ, மாணவிகளுக்கும் பட்டப்படிப்பை வழங்குவதில் ஈடுபட்டுள்ளதுடன், தற்போது சகல நட்பு நாடுகளுக்கும் இவ் வாய்ப்பானது திறந்துவிடப் பட்டுள்ளது. 2013 ஆண்டில் இப் பீடம், மின்னணுவியல் சார் பி.எஸ்சி. பொறியியல், உயிரியல் மருத்துவம் சார் பி.எஸ்சி பொறியியல் மற்றும் விமானப் பராமரிப்பு சார் பி.எஸ்சி பொறியியல் ஆகிய மூன்று புதிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கத் தொடங்கியுள்ளது.

முப்படைகள் தொடர்பாக கல்விசார் தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்களை உருவாக்குவதற்காக பொறியியல் பீடத்தினால் ஆற்றப்படும் பணி மிக முக்கியமானதாகும். பீடத்தின் மூலம் எல்லா கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவது மாத்திரமன்றி, பல்கலைக்கழகத்தின் இணை பாடவிதான மற்றும் புற பாடவிதான செயற்பாடுகளுக்கு நவீன மாற்றங்களை அறிமுகம் செய்து, இளம் பயிலிளவல் அலுவலர்கள் தொடர்பாக புலமை சார்ந்து முன்னேற்றுவதற்கான பணியில் ஈடுபட்டுள்ளது.

கொ.பா.ப. மூலம் நடாத்தப்படும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் ஏனைய கீர்த்திமிக்க பல்கலைக்கழகங்களுக்கு இணைவாக மிக உயர் தரத்துடன் பேணிச்செல்லப்படுகின்றது. கற்கைசார் நிகழ்ச்சித்திட்டங்கள் சுயாதீனமாக நடாத்திச் செல்லும் நோக்கத்துடன் கொத்தலாவல பல்கலைக்கழகம் சார்பாகவே தகுதிபெற்ற கல்விசார் பணியாட்தொகுதியினரைக் கொண்டுள்ளதுடன், மொரட்டுவை பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்தும், அதேபோல் முப்படை மற்றும் கைத்தொழில்துறை ஆகியவற்றைச் சேர்ந்த வருகைதரும் விரிவுரையாளர்கள்/ போதானாசிரியர்கள் சேவைகளைப் பெறும் சிறப்புரிமையை பெற்றுக்கொண்டுள்ளது.

பதவிகளில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் (இராணுவம் சார்/ கல்விசார்)

சிவில் பொறியியல் திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி ரீ.எம்.டபிள்யூ.ஆர்.எம்.பி. சமரகோன், பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக 2019.04.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் நியமிக்கப்பட்டார்.

- கலாநிதி டபிள்யூ.சி.டீ.கே. பெர்னாந்து, பொறியியல் பீடத்தின் பீடாதிபதி நியமனத்தை 2019 மார்ச் 31 ஆம் திகதி முடித்துக்கொண்டார்.
- எந்திரப் பொறியியல் திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் பதவிக் காலத்தை 2019 பெப்பிரவரி 28 ஆம் திகதி, திருமதி பீ.பீ.எஸ்.எஸ். புஷ்சபிட்டிய நிறைவுசெய்தார்.
- எந்திரப் பொறியியல் திணைக்களத்தின் புதிய திணைக்களத் தலைவராக திரு. டபிள்யூ.எஸ்.பீ. பெர்னாந்து, 2019 மார்ச் 01 முதல் 2019 ஆகஸ்ட் 31 வரை ஆறு மாத காலங்களுக்கு நியமிக்கப்பட்டார்.
- எந்திரப் பொறியியல் திணைக்களத்தின் புதிய திணைக்களத் தலைவராக கப்டன் (E) எம்.சி.பீ. திஸாநாயக்க, 2019 செப்ரெம்பர் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் நியமிக்கப்பட்டார்.
- விமானம் சார் பொறியியல் திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் பதவிக் காலத்தை 2019 ஆகஸ்ட் 1 ஆம் திகதி, குரூப் கப்டன் சி.ஜே. ஹெட்டிஆரச்சி நிறைவுசெய்தார்.
- விமானம் சார் பொறியியல் திணைக்களத்தின் புதிய திணைக்களத் தலைவராக விங். கொமதோ. யூ.டீ.எல்.பீ. குணசிங்ஹ, 2019 ஆகஸ்ட் 06 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் நியமிக்கப்பட்டார்.
- கடல் சார் பொறியியல் திணைக்களத்தின் புதிய திணைக்களத் தலைவராக கப்டன் (E) எம்.சி.பீ. திஸாநாயக்க, 2019 ஆகஸ்ட் 04 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் நியமிக்கப்பட்டார்.
- சிவில் பொறியியல் திணைக்களத்தின் புதிய திணைக்களத் தலைவராக கலாநிதி ஆர்.பீ. கருணாநாயக்க, 20190.05.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் நியமிக்கப்பட்டார்.
- பொறியியல் பீட தர உத்தரவாத குழுவின் (Quality Assurance Cell) தவிசாளர்களாக கலாநிதி ஆர்.பீ. குமாநாயக்க, சிரேஷ்ட விரிவுரையாளர் (2019 சனவரி – ஏப்பிரல்) மற்றும் கலாநிதி ரீ.டபிள்யூ.கே.ஐ.எம். டயஸ், சிரேஷ்ட விரிவுரையாளர் (2019 மே முதல்) ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.
- சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி டீ.டீ.ரீ.கே. குலதுங்க, 2019 இற்கான பொறியியல் பீட ஆராய்ச்சித் குழுவின் தவிசாளராக நியமிக்கப்பட்டார்.

புதிய ஆட்சேர்ப்புக்கள் (இராணுவம் சார்/ கல்விசார்)

பெயர்	பதவி	கடமையேற்ற திகதி
கடல்சார் பொறியியல் திணைக்களம்		
இராணுவம் சார்		
LCdr SSUK பெர்னாந்து	விரிவுரையாளர்	2019.08.29
எந்திரப் பொறியியல் திணைக்களம்		
இராணுவம் சார்		
கப்டன் SAAAK அத்துகோரல		15.03.2019

உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்/ புதிய கருத்திட்டங்கள்

விமானம் சார் பொறியியல் திணைக்களம்

- விமான உதிரிப்பாகங்கள் சம்பந்தமான கண்காட்சிக் கூடமொன்று நிர்மாணிக்கப்பட்டது.

மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம்

- புதிய பொறியியல் பீட (FOE) கட்டத்தில் பின்வரும் ஆய்வுகூடங்கள் தொடங்கப்பட்டன.
  a. டிஜிடல் முறைமை வடிவமைப்பு ஆய்வகம்
  b. வலு இலத்திரனியல் ஆய்வகம்
  c. தொடர்பாடல் ஆய்வகம்
  d. உயிரியல் இயக்கவியல்
  e. இழையம்சார் பொறியியல்
  f. உயிரியல் மருத்துவ கருவிமயமாக்கல் ஆய்வகம்

- FOE இன் புதிய HV ஆய்வுகூடம் தொடங்கப்பட்டதுடன், செயன்முறைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

கடல்சார் பொறியியல் திணைக்களம்

பொறியியல் பயிற்சிப் பட்டறை

இடவசதியை ஏற்படுத்துதல் மற்றும் வேலைத் தளத்தை மறுசீரமைப்பு செய்தல் போன்றவை மூலமாக, பொறியியல் பயிற்சி பட்டறையின் பயிற்சி வசதிகள் பின்வருமாறு மேம்படுத்தப்பட்டுள்ளன:

- பட்டறைக்கு வர்ணப்பூச்சு பூசப்பட்டதுடன், பட்டறையில் பாதுகாப்பு சுவரொட்டிகள்/ அறிவுறுத்தல் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டன.
- சகல மரத்திலான பொருட்கள் மற்றும் மரத்திலான லாக்கர்கள் பழுதுபார்க்கப்பட்டு, வர்ணப்பூச்சு பூசப்பட்டன.
- மின்குமிழ்கள் அனைத்தும் LED இற்கு பதிலீடு செய்யப்பட்டன.
- பயிற்சி நோக்கத்திற்காக கருவி அறிவுறுத்தல் பலகையொன்று அமைக்கப்பட்டது.
- லாக்கர் திறப்புக்களை தொங்கவிடுதல் பலகை தயாரிக்கப்பட்டது.
- பட்டறையின் தரை மீது பாதுகாப்பு எல்லைக்கோடுகள் வரையப்பட்டன.
- வேல்டிங் கியுபிகல் (cubical) வேல்டிங் திரைச்சீலைகள் பொருத்தப்பட்டன.
- தீயணைக்கும் கருவிகளை தொங்கவிடும் சாதனங்கள் அமைக்கப்பட்டன.
- பணி முறைக்காக எயர் கொம்பிரஸ்சர் பழுதுபார்க்கப்பட்டது

பணியாளர் அபிவிருத்திச் செயற்பாடுகள்

விமானம் சார் பொறியியல் திணைக்களம்

- பணியாளர் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்படும் CTHE நிகழ்ச்சித் திட்டத்தில் குரூ. கப்ட. சி.ஜே. ஹெட்டிஆரச்சி பங்குபற்றினார்.

சிவில் பொறியியல் திணைக்களம்

- திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி டீ.டீ.ரீ.கே. குலதுங்க, கலாநிதி ரீ.டபிள்யூ.கே.ஐ.எம். டயஸ் மற்றும் திரு. பி.எச்.ஜே. புஷ்பகுமார ஆகியோர் உயர் கல்வி கற்பிப்பதற்கான சான்றிதழை (CTHE நிகழ்ச்சித்திட்டத்தை) பூர்த்திசெய்தனர்.

மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம்

- ஓரெல் கோப்பரேசன் (M/s Orel Corporation) மூலம் நடாத்தப்பட்ட NI-Elvis பற்றிய செயலமர்வொன்றில் திணைக்களத்தின் பணியாளர் அங்கத்தவர்கள் பங்குபற்றினர்.
- திணைக்களத்தின் பணியாளர் அங்கத்தவர்கள், ஓரெல் கோப்பரேசன் (M/s Orel Corporation) மூலம் நடாத்தப்பட்ட ரோபோடிக்ஸ் கட்டுப்பாடுகள் பற்றிய செயலமர்வொன்றில் பங்குபற்றினர்.

கடல்சார் பொறியியல் திணைக்களம்

- பணியாளர் அங்கத்தவர்கள் கொ.பா.ப. மூலம் தேவைக்கேற்றவாறு காலத்திற்கு காலம் ஏற்பாடு செய்யப்பட்ட அதிதி சொற்பொழிவுகளில் பங்குபற்றினர்.

பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்/ அடைவுகள்

விமானம் சார் பொறியியல் திணைக்களம்

- திரு. எஸ்.எல்.எம்.டீ. ரங்கஜீவ, சிரேஷ்ட விரிவுரையாளர் - 'ஒருங்கும் விரிவிக்கும் முனை வழியாக ஓட்டத்தை பகுப்பாய்வு செய்வதற்காக மென்பொருளின் அபிவிருத்தி' – (Development of a Software foe Analyse Flow through Convergent – Divergent Nozzle) எனும் பத்திரமொன்றை, இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினது 113 வது வருடாந்த அமர்வு நடவடிக்கைகளின் போது சமர்ப்பித்தார், இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தின் (IESL) 113-வது வருடாந்த மாநாடு.
- கொ.பா.ப. இல் 2019 பெப்பிரவரி 28 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொறியியல் பீட ஆராய்ச்சி கருத்தரங்கில், KF – செயல்படுத்தப்பட்ட பறக்கும் பிரிவின் முன்னேற்றகரமான மாதிரி உருவாக்கம் பற்றிய ஆய்வுப் பத்திரமொன்றை போதானாசிரியர் திரு. டபிள்யூ.டீ.ரீ. பெர்னாந்து சமர்ப்பித்தார்.

சிவில் பொறியியல் திணைக்களம்

- உள்வாங்கல் 32 ஐச் சேர்ந்த Ms. நிம்மி குருகுலசூரிய, – "பியகம நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குப் பொருத்தமான இரும்பு குறைப்பு முறைமை சம்பந்தமான வடிவமைப்பு" (Design of a suitable iron reduction method for Biyagama Water Treatment Plant) எனும் அவரது ஆய்வுகாக 'வளர்ந்துவரும் சிவில் பொறியியலாளர் – 2019' ஆனார். இலங்கையின் எதிர்கால சிவில் பொறியியலாளர்களை ஊக்குவிப்பதற்கும் ஆதரவளிப்பதற்காகவும் இலங்கை சிவில் பொறியியலாளர்களின் நிறுவகத்தினது சங்கத்தின் மூலம் (SLAICE) ஏற்பாடு செய்யப்படும் வருடாந்த போட்டியில் வளர்ந்துவரும் சிவில் பொறியியலாளர் விருது வழங்கப்படுகிறது.
- சிவில் பொறியியல் திணைக்களத்தைச் சேர்ந்த உள்வாங்கல் 33 இன் மாணவர் பீ.எஸ். ஷானக மற்றும் கலாநிதி டீ.டீ.ரீ.கே. குலதுங்க ஆகியோரால்

சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி பத்திரத்திரமானது, கொ.பா.ப. - 2019 இன் 12-வது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டு பொறியியல் அமர்வுகளில் சிறந்த வாய்மூல சமர்ப்பித்தலாக தெரிவுசெய்யப்பட்டது.

- இலங்கை சிவில் பொறியியலாளர்களின் நிறுவகத்தினது சங்கத்தின் (SLAICE) மூலம் ஒழுங்செய்யப்பட்ட, சிறந்த பட்டதாரி மாணவர் பொறியியல் ஆராய்ச்சி கருத்திட்டம் 2019 – தனிநபர் பிரிவு சார்பான மணம்பேரி விருது (பொறியியல்) இறுதிச் சுற்றுக்காக உள்வாங்கல் 32 இன் எஸ்.ஏ.ஐ.ஏ. சுரவீர மற்றும் எம்.ஜே. த சில்வா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்

<u>கடல்சார் பொறியியல் திணைக்களம்</u>

- பொறியியல் மற்றும் MTS பயிலிளவல் அலுவலர்களுக்கான சம்பந்தப்பட்ட பாடங்கள் பற்றிய விரிவுரைகள், செயன்முறைகள், செயல்விளக்கங்கள் மற்றும் தனிப்பட்ட/ குழு ஒப்படைப்புக்கள் ஆகியன நடாத்தப்பட்டன.

<u>எந்திரப் பொறியியல் திணைக்களம்</u>

- கலாநிதி ஆர்.எம்.பீ.எஸ். பண்டார மற்றும் கப்டன் எம்.பீ. ரத்நாயக்க - திரவ இயங்காற்றலை பயன்படுத்தி கவச ஆட்களை ஏற்றிச் செல்லும் வாகனத்தின் காற்றியக்கவியலின் செயல்திறனை அதிகரிக்கச்செய்தல் (Enhancing aerodynamic performance of an armoured personal carrier using computational fluid dynamics), விஞ்ஞானம் சார் மேம்பாட்டுக்கான இலங்கை அமைப்பின் 75வது வருடாந்த அமர்வின் பிரித்தெடுப்பு, கொழும்பு, 2019 திசம்பர்.
- எஸ்.டீ. விதானகே, எச்.எம்.எச். சேனாரத்ன, ரீ.டீ.ஜீ. ஏக்கநாயக்க, எப்.பி.வை.ஆர். த சில்வா மற்றும் கலாநிதி ஆர்.எம்.பீ.எஸ். பண்டார – இலங்கையில் வெவ்வேறு இயக்க நிலைமைகளின் கீழ் செறிவூட்டப்பட்ட ஒளிமின்னழுத்த முறைமையின் சக்தி வெளியீடு சார் பகுப்பாய்வு, விஞ்ஞானம் சார் மேம்பாட்டுக்கான இலங்கை அமைப்பின் 75-வது வருடாந்த அமர்வின் பிரித்தெடுப்பு, கொழும்பு, 2019 திசம்பர்.
- எப்.பி.வை.ஆர். த சில்வா, ஆர்.ஏ. அட்டலகே, ஆர்.எம்.பீ.எஸ். பண்டார மற்றும் டீ.டீ. ஆனந்த நாமல் – இலங்கையில் வான் ஒளிர்வு சார் நிலையான வகைப்படுத்துதல் மற்றும் பகிர்வுசெய்தல் ஆகியவற்றை கண்டறிவதற்கான கணித மாதிரியின் (நிகழ்தகழ்வு நரம்பியல் வலையமைப்பு) உருவாக்கம், விஞ்ஞானம் சார் மேம்பாட்டுக்கான இலங்கை அமைப்பின் 75 ஆவது வருடாந்த அமர்வின் பிரித்தெடுப்பு, கொழும்பு, 2019 திசம்பர்.
- கலாநிதி ஆர்.எம்.பீ.எஸ். பண்டார, பீ.எச்.வீ. நிமர்ஷன மற்றும் ஆர்.ஏ. அட்டலகே – இலங்கை பல்கலைக்கழகமொன்றினது விரிவுரை மண்டபமொன்றின் உள்ளக சூழல் சார் தரம் குறித்த எண் ரீதியான மற்றும் சோதனைசார்ந்த ஆய்வு, இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினது 113 ஆவது வருடாந்த அமர்வின் நடவடிக்கைகள் (பகுதி பி) போது சமர்ப்பித்தார், கொழும்பு, 2019 அக்டோபர், 11-12, பக். 601 – 608.
- கலாநிதி ஆர்.எம்.பீ.எஸ். பண்டார மற்றும் டபிள்யூ.சி.டீ.கே. பெர்னாந்து – பொறியியல் பட்டதாரி மாணவர்களின் கணினியியல் சார் மொடலிங் ஆற்றல் திறன்களை மதிப்பீடு செய்வதற்காக வெவ்வேறு மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்துதல், மொறட்டுவை பல்கலைக்கழக பணியாளர் அபிவிருத்தி நிலையம்

மற்றும் உயர் கல்வி சார் செயல்திறனை முன்னேற்றுவதற்கான இலங்கை சங்கம் (SLAIHEE) ஆகியவற்றின் மூலம் கூட்டாக ஒழுங்குசெய்யப்பட்ட இலங்கையின் உயர் கல்வி பற்றிய 15 ஆவது வருடாந்த சர்வதேச மாநாட்டு கூட்ட நடவடிக்கைகள், கொழும்பு, 2019 யூலை – பக். 1- 4.

ஒழுங்குசெய்யப்பட்ட பயணங்கள்/ சுற்றுலாக்கள்

<u>விமானம் சார் பொறியியல் திணைக்களம்</u>

- உள்வாங்கல் 33 இன் விமானப் பொறியியல் மற்றும் வானூர்தி பராமரிப்பு பொறியியல் மாணவர்களுக்காக, 2019 யூன் 25 ஆம் திகதி, பொல்கஸ்ஓவிட்ட, வேத்தறயில் உள்ள ஹை-ரே இன்ஜினியரிங் (Hi-ray Engineering) (பிரை.) லிமி. நிறுவனம் சார்ந்ததாக கள சுற்றுப்பயணம் ஒழுங்குசெய்யப்பட்டது.
- உள்வாங்கல் 35 இன் விமானப் பொறியியல் மற்றும் வானூர்தி பராமரிப்பு பொறியியல் மாணவர்களுக்காக, 2019 நவம்பர் 6 ஆம் திகதி, கட்டுநாயக்காவிலுள் பிட்ஸ் எயார் ஏவியேஷன் (Fits Air Aviation) (பிரை.) லிமி. நிறுவனம் சார்ந்ததாக கள சுற்றுப்பயணம் ஒழுங்குசெய்யப்பட்டது.

<u>சிவில் பொறியியல் திணைக்களம்</u>

- 2019 பெப்பிரவரி 6 - 18 ஆம் திகதி வரை, உள்வாங்கல் 34 இன் சிவில் பொறியியல் மாணவர்களுக்கான அளவையியல் முகாமொன்று அம்பாறையிலுள்ள விமானப் படை தளத்தில் நடாத்தப்பட்டது.
- 2019 அக்டோபர் 14 – 30 ஆம் திகதி திகதி வரை, உள்வாங்கல் 35 இன் சிவில் பொறியியல் மாணவர்களுக்கான அளவையியல் முகாமொன்று தியத்தலாவை மார்க்ஸ்மன்சிப் மற்றும் ஸ்நைபர் (Marksmanship and Sniper) பயிற்சி பாடசாலையில் (MSTS) நடாத்தப்பட்டது.

<u>மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம்</u>

- உள்வாங்கல் 34 இன் மின், இலத்திரனியல் (EE) பட்டதாரி மாணவர்கள், கள பயணமாக பலாங்கொடையிலுள்ள சமனலவெவ நீர் மின் நிலையத்துக்கு 2019 மார்ச் 08 ஆம் திகதி பார்வையிடச் சென்றனர்.
- உள்வாங்கல் 35 இன் EE பட்டதாரி மாணவர்கள், கள பயணமாக பலாங்கொடையில் அமைந்துள்ள சமனலவெவ நீர் மின் நிலையத்துக்கு 2019 நவம்பர் 13 ஆம் திகதி பார்வையிடச் சென்றனர்.

<u>கடல்சார் பொறியியல் திணைக்களம்</u>

- உள்வாங்கல் 35 இன் பட்டதாரி மாணவர்கள் இரத்மலானை புகையிரத பராமரிப்பு தளத்தை பார்வையிடச் சென்றனர்.
- உள்வாங்கல் 33 இன் பட்டதாரி மாணவர்கள் வெலிசற இலங்கை கடற்படையின் (SLN) படகு நிர்மானித்தல் தளத்தை பார்வையிடச் சென்றனர்.

<u>எந்திரப் பொறியியல் திணைக்களம்</u>

- உள்வாங்கல் 34 இன் எந்திர பொறியியல் மாணவர்களுக்கு, 2019 யூலை 01 முதல் 2019 திசம்பர் 13 வரை அவர்களுக்கான கைத்தொழில்துறைப் பயிற்சி நடாத்தப்பட்டன.

நலன்புரி செயற்பாடுகள்

<u>கடல்சார் பொறியியல் திணைக்களம்</u>

- கடல் சார் பொறியியல் திணைக்களத்தின் அங்கத்தவர்கள் புத்தாண்டு விழா, ஜுலை போல் நிகழ்ச்சி போன்ற கொ.பா.ப. மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட சகல நலன்புரி செயற்பாடுகளிலும் பங்குபற்றினர்.

விசேட நிகழ்வுகள்/ வைபவங்கள்

<u>விமானம் சார் பொறியியல் திணைக்களம்</u>

- சர்வதேச ஆராய்ச்சி மாநாடு - 2019
  கே.கே.எஸ்.பீ. உபசேன, யூ.ஐ. வீரதுங்க மற்றும் **ஜே.ஐ. அபயகுணவர்தன** ஆகியோர், "அற்புதமான ஃப்ரிகேட் பறவையால் ஈர்க்கப்பட்டு ஒரு புதிய விமானப் பிரிவின் வடிவமைப்பு" ("Design of a new Aircraft wing inspired by the Magnificent Frigate Bird") எனும் பத்திரமொன்றை, 2019 செப்ரெம்பர் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெற்ற, கொ.பா.ப. - 12 வது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டு அமர்வு நடவடிக்கைகளின் போது சமர்ப்பித்தனர்.
- இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினது (IESL) 113-வது வருடாந்த அமர்வு நடவடிக்கைகளின் போது, எம்.ஏ.ரீ. சந்திம, பீ.வீ.சி. கோமிஸ் மற்றும் எஸ்.எல்.எம்.டீ. ரங்கஜீவ ஆகியோர், "சிறகுக்குப் பின்னாலுள்ள விளிம்பின் வடிவமைப்பை மாற்றுவதன் மூலம் இரைச்சலை இல்லாதொழித்தல்"(Noise Suppression by Varying the Trailing Edge Design of the Wing) பற்றிய பத்திரமொன்றைச் சமர்ப்பித்தனர், 2019 அக்டோபர்.

<u>சிவில் பொறியியல் திணைக்களம்</u>

- IRC – 2019 இன் முழுமையான அமர்வின் போது, 'பொறியியல் முன்னேற்றத்துடன் மனிதகுலம் எதிர்கொள்ளும் சவால்கள்" எனும் கருப்பொருளின் கீழ், உயரமான கட்டடங்களின் கட்டமைப்புசார் வடிவமைப்பு பற்றிய தகவல் ரீதியான சொற்பொழிவொன்றை இலங்கை பசுமை கட்டடங்கள் சார் கவுன்சிலின் உப தலைவர், பொறியியலாளர் ஷிரொமல் பெர்னாந்து வழங்கினார். அத்துடன், பேராசி. யூ.ஜீ. புஷ்வேவல மற்றும் கலாநிதி டபிள்யூ.சி.டீ.கே. பெர்னாந்து ஆகியோரை தவிசாளர்களாக கொண்ட இரண்டு தொழில்நுட்ப அமர்வுகளும் சிவில் பொறியியல் திணைக்களத்தின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்டன. திணைக்களத்தின் கல்விசார் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஏராளமானோர் வாய்மொழி மற்றும் சுவரொட்டி அமர்வுகளில் ஆராய்ச்சிப் பத்திரங்களை சமர்ப்பித்தனர்.

மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம்

- இலங்கை பொறியியலாளர் நிறுவகம் (IESL), ET பட்ட நிகழ்ச்சித்திட்டம் சார்பான மதிப்பீட்டை மேற்கொண்டது.
- கொ.பா.ப. திறந்த நாள் 2019 அக்டோபர் 13 ஆம் திகதி நடைபெற்றது.
- உள்வாங்கல் 33-இன் இறுதியாண்டு கருத்திட்ட கண்காட்சி -2019 திசம்பர் 13-ம் திகதி.

கடல்சார் பொறியியல் திணைக்களம்

- கொ.பா.ப. இன் வளி சீராக்கி (Air Condition) தொடர்பான வெப்பம் சார்ந்த சில கணிப்புகள், TEC மதிப்பீடுகள் ஆகியவற்றிற்கு திணைக்களம் உதவியது.

எந்திரப் பொறியியல் திணைக்களம்

- உள்வாங்கல் 33 இன் பொறியியல் மாணவர்கள், அவர்களது இறுதி ஆண்டு ஆய்வு கருத்திட்டம் சார் கண்காட்சியொன்றை 2019 திசம்பர் 13 ஆம் திகதி ஒழுங்குசெய்தனர்.

கடல்சார் பொறியியல் திணைக்களம்

- கொ.பா.ப. இன் வளி சீராக்கி (Air Condition) தொடர்பான வெப்பம் சார்ந்த சில கணிப்புகள், TEC மதிப்பீடுகள் ஆகியவற்றிற்கு திணைக்களம் உதவியது.

நிறுவன சமூகப் பொறுப்புசார் (CSR) நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரம்

சிவில் பொறியியல் திணைக்களம்

- பொறியியல் பீடத்தின் சிவில் பொறியியல் சங்கத்தின் மூலம் "அத்வெல" - வருடாந்த சமுதாய சேவை நிகழ்ச்சித்திட்டம் 2019 திசம்பர் 7 ஆம் திகதி ஒழுங்குசெய்து நடாத்தப்பட்டது. கிராமப்புறங்களில் உள்ள குறைந்த சலுகைகளையுடைய மாணவர்களுக்கு சென்றடையச் செய்வதே இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். இக் கருத்திட்டத்தின் கீழ், கம்பளை, புபுரெச்ச, க/ஸ்டெலன்பேர்க் தமிழ் வித்தியாலயத்தின் மாணவ மாணவிகளுக்கு எதிர்வரும் ஆண்டின் பாடசாலை பருவத்திற்குத் தேவையான எழுதுபொருட்கள் மற்றும் பாடசாலை புத்தகப்பைகள் என்பன பரிசளிக்கப்பட்டன.

கடல்சார் பொறியியல் திணைக்களம்

- பொறியியல் பயிற்சிப் பட்டறை, கடல் சார் பொறியியல் ஆய்வுகூடம் மற்றும் கந்தவலை குளத்தில் உள்ள கரையோர பாதுகாப்பு படகு (P 129) என்பன 'திறந்த நாள்' நிகழ்வு தினத்தன்று பொது மக்கள் பார்வையிடுவதற்காக வசதி செய்யப்பட்டிருந்ததுடன், திணைக்கள பணியாளர்கள் பார்வையிடவருவோரை அறிவூட்டுவதற்காக செயல்ரீதியாக பங்களிப்பை வழங்கினர்.

ஏனைய முக்கிய தகவல்கள்

மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம்

அ. கிளப் ஹவுஸ், பொறியியல் பீடக் கட்டிடம், உப வேந்தரின் வாசஸ்தலம், உப வேந்தரின் அலுவலகம், உப வேந்தரின் மாநாட்டு மண்டபம் போன்ற பல்வேறு விதமான நிர்மான கருத்திட்டங்களின் மின் சம்பந்தமான விடயங்கள் இத் திணைக்கள பணியாட்தொகுதி உறுப்பினர்களினால் பொறுப்பேற்கப்பட்டது.

2.1.5 சட்ட பீடம்

அறிமுகம்

பயிலிளவல் அலுவலர்களை இலங்கையின் முப்படையிலும் சட்ட உத்தியோகத்தர்களாக ஆக்குவதற்குத் தேவையான சட்டம் சார்ந்த கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் 2011 ஆண்டில் சட்ட பீடம் உருவாக்கப்பட்டது. பின்னர், கொ.பா.ப. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நாள்முறை மாணவர்களுக்கும் திறந்துவிடப்பட்டதுடன், சட்ட பீடமும் கட்டணம் செலுத்தல் அடிப்படையில் எல்.எல்.பி. பட்டத்தை பயிலுவதற்காக நாள்முறை மாணவர்களை இணைத்துக் கொள்ளத் தொடங்கியது. தற்போது பயிலிளவல் அலுவலர்கள் மற்றும் நாள்முறை மாணவர்கள் உட்பட பீடத்தில் 478 மாணவர்களுக்கு கற்பதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இப் பீடமானது, சட்ட இளமாணிப் பட்டம் மற்றும் பட்டமேற்படிப்பு பட்டம் ஆகியவற்றை வழங்கி வருவதுடன், பயிலிளவல் அலுவலர்கள் மற்றும் இராணுவத்தைச்சாராத மாணவர்கள் சட்டத்துறையில் கல்விசார்ந்த வகையிலும் தொழில்சார்ந்த ரீதியாகவும் தகைமையினைக் கொண்டவர்களாக ஆக்குவதற்கான பயிற்சியை வழங்குவதே இந் நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கமாகும்.

சட்ட பீடமானது, சிவில் சட்டத் திணைக்களம் மற்றும் இராணுவச் சட்டத் திணைக்களம் என இரு திணைக்களங்களைக் கொண்டுள்ளது. மேலும், சட்டப் பீடத்தினால் பின்வரும் வருடாந்த செயலமர்வுகள் நடாத்தப்படுகின்றன. மொரகொட சர்வதேச சட்ட தாபனத்துடன் இணைந்து சர்வதேச சட்டம் தொடர்பாக செயலமர்வு மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துடன் (ICRC) இணைந்து சர்வதேச மனிதாபிமான சட்டம் தொடர்பான செயலமர்வு என்பனவாகும். அத்துடன், பீடத்தின் மூலம் பட்டதாரி மாணவர்களுக்கு சட்டசார்ந்த பிரச்சினையொன்று பற்றிய அனுபவத்தை பெற்றுக்கொடுப்பதற்காக எதிர் தரப்பின் முன்பு தனது நிலைப்பாட்டை முன்வைத்து வாதிட மாதிரி நீதிமன்ற விவாதங்களை நடாத்துகின்றது.

கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக பீடத்தின் மூலம் பின்வரும் சேவைகளும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. நீதி உதவி நிலையம்; தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் மூலம் அனுகூலங்களற்ற சிறப்புரிமைபெற்றில்லாத மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக சட்ட ஆலோசனை மற்றும் உளவள ஆலோசனை பெற்றுக்கொடுத்தல், மத்தியஸ்திற்கான வசதிகளை வழங்குதல் மூலமாக உதவிகளைப் பெற்றுக்கொடுக்கின்றது. சட்ட பீட உசாவுகை சேவைகள் மூலமாக தனி நபர்கள் மற்றும் நிறுவன உரிமங்கள் என்பவற்றுக்கு ஆலோசனை வழங்குதல், சிக்கல்மிக்க சட்ட வினாக்கள் தொடர்பாக வழக்குத் தொடருவதற்கு உதவுதல் போன்ற பல்வேறு வகையான சட்டச் சேவைகளை வழங்குகின்றது. மேலும், தமது கட்சிகாரர்களின் விசேட சூழல்சார் நிலைமைகளுக்கு ஏற்றவாறு தொடர்ச்சியான உயர் தரத்திலான சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொடுப்பதை உறுதிசெய்யும் நோக்கத்துடன் பயனுறுதியான, புதுமையான, செயல்படுத்தக்கூடிய மற்றும் செலவு பலனளிக்கத்தக்க தீர்வுகளை அதன் மூலமாக தன் கட்சிக்காரர்களுக்கு வழங்குகின்றது.

பயிற்சி விடயங்களில் ஈடுபடுதல் / அடைவுகள்

- Ms. என்.கே.கே. முதலிகே (விரிவுரையாளர், தகுதிகாண்), 2015.05.05 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் விரிவுரையாளர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டார்.
- Ms. ஜே.ஏ.டீ. ஜயக்கொடி (விரிவுரையாளர்), 2018.10.09 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II பதவிக்கு தரமுயர்த்தப்பட்டார்.
- Ms. பி.கே.எம். ஜயசேக்கர (விரிவுரையாளர்), 2018.12.09 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II பதவிக்கு தரமுயர்த்தப்பட்டார்.

பிரசுரங்கள்

Ms. பீ.கே.எம். ஜயசேக்கர – திணைக்களத் தலைவர் – குடியியல் சட்ட திணைக்களம், சிரேஷ்ட விரிவுரையாளர் II

- இலங்கையின் தகவலுக்கான உரிமைச் சட்டம்: உரிமையை மறுப்பதற்கான ஓர் சட்டவாக்கம். – ஐந்தாவது ரஜரட்ட சர்வதேச ஆய்வு மாநாடு 2019 (RIRC 2019), ரஜரட்ட பல்கலைக்கழகம், இலங்கை.
- "Beating around the bush" (புதரைச் சுற்றி அடிப்பது): இலங்கையின் தகவலுக்கான உரிமைச் சட்டம் சார் பகுப்பாய்வு, 4-வது வருடாந்த ஆராய்ச்சி மாநாடு (TRInCo-2019), திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
- "ஆசியாவில் சர்வதேச சார்பற்ற ஆயுத மோதல்களில் பெண்களின் சுகாதார உரிமைகளைப் பாதுகாக்கும் துணைப்பொறி: குறைபாடுகள் மற்றும் தடைகள்" – ஆசியாவின் பெண்கள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சர்வதேச மாநாடு, 2019 ஆகஸ்ட், 29-31, காத்மாண்டு, நேபாளம்.

Ms. எம்.பீ.சி. விஜேசூரிய - விரிவுரையாளர்

- "கழிவுகளுடனான ஓர் சுவர்க்கம்: மாசுபடுத்துவர் செலுத்துதல் கோட்பாட்டுனுள் கழிவின் மூலம் மனிதனால் உருவாக்கப்பட்ட சூழல் மாசுபடுத்தலுக்கு பயன்படுத்துதல்"- ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக, வனவியல் மற்றும் சூழல்சார் விஞ்ஞான திணைக்களத்தின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட 24-வது சர்வதேச வனவியல் மற்றும் சூழல்சார் சிம்போசியம், நுகேகொடை

Ms. வை.பீ. விஜேரத்ன – விரிவுரையாளர் (தகுதிகாண்)

- 'யார் மாசுபடுத்துகிறாரோ அவர் – விலையைச் செலுத்தட்டும்: இலங்கை, இந்தியா மற்றும் சர்வதேச சட்டத்தில் மாசுபடுத்துபவர் – கட்டணம் செலுத்தல் கோட்பாட்டைப் பிரயோகித்தல் பற்றிய பகுப்பாய்வு" - ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் (பதிப்.), 12-வது சர்வதேச

ஆராய்ச்சி மாநாட்டு கூட்ட நடவடிக்கைகள் (ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், 2019 செப்ரெம்பர்.)

- Ms ஏ.ஏ. எதிரிசிங்ஹ அவர்களுடன் இணை பதிப்பு பத்திரம்.

<u>விசேட நிகழ்வுகள்/ வைபவங்கள்</u>

- **<u>சர்வதேச ஆய்வு மாநாடு - 2019</u>**

  சட்டம் சம்பந்தப்பட்ட முழுமையான அமர்வு, 'புதிய தொழில்நுட்ப முகத்தில் மனிதகுலம்: சட்டம் சார் சவால்களும் அபிலாஷைகளும்' ('Humankind in the Face of New Technology: Challenges and Aspirations in Law') எனும் கருப்பொருளின் கீழ் நடாத்தப்பட்டதுடன், பேராசிரியர் காமெனா குணரத்ன (சிரேஷ்ட விரிவுரையாளர், சட்டக் கற்கைகள் திணைக்களம், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல) அவர்கள் அதில் தலைமை வகிகத்தார்.

  அமர்வின் ஏனைய பேச்சாளர்களாக பேராசிரியர் வசந்த செனவிரத்ன (சிரேஷ்ட விரிவுரையாளர், பொது மற்றும் சர்வதேச சட்டத் திணைக்களம், சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), கலாநிதி ஜேம்ஸ் கிரிஃபின் (சிரேஷ்ட விரிவுரையாளர், சட்டப் பாடசாலை, எக்ஸிடெர் பல்கலைக்கழகம்), பேராசிரியர் அரவிந் ஜஸ்ரோடியா (சட்டத் திணைக்களம், ஜம்மு பல்கலைக்கழகம்), Ms ஷியாமலி ரனராஜா (வருகைதரும் விரிவுரையாளர், சட்டத் திணைக்களம், கலைப் பீடம், பேராதெனியா பல்கலைக்கழகம்) ஆகியோர்களாகும்.

  சட்டம் சார்ந்த தொழில்நுட்ப அமர்வுகள் 'தொழில்நுட்பம், வணிகம் மற்றும் வர்த்தகம்: சட்டத்திலுள்ள சிக்கல்கள் மற்றும் வாய்ப்புக்கள்' (Technology, Trade and Commerce: Issues and Prospects in Law), 'சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நீதி சார்பான சட்டம்' (Law towards Social, Political and Economic Justice), 'மனித உரிமைகள் சவாலுக்குள்ளானதா? சட்டப் பதிலளிப்புக்கள் (Human Rights Challenged? Legal Responses)' மற்றும் 'பொதுச் சட்டத்தின் தற்கால சவால்களும் வாய்ப்புக்களும் (Contemporary Challenges and Opportunities in Public Law)' எனும் கருப்பொருள்களின் கீழ் நடாத்தப்பட்டன.

  தொழில்நுட்ப அமர்வுகளில் கலாநிதி ஜேம்ஸ் கிரிஃபின் (சிரேஷ்ட விரிவுரையாளர், சட்டப் பாடசாலை, எக்ஸிடெர் பல்கலைக்கழகம்), கலாநிதி ஷமில தலகல (சிரேஷ்ட விரிவுரையாளர், சட்ட பீடம், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்), கலாநிதி தயானி பனாகொட (சிரேஷ்ட தொழில்நுட்ப நிபுணர், சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்கச் செயல்பாடு (SCORE)/ உலகளாவிய சமூகங்கள் (Social Cohesion and Reconciliation Activity (SCORE)/ Global Communities) – USAID) மற்றும் பேராசிரியர் அரவிந் ஜஸ்ரோடியா (சட்டத் திணைக்களம், ஜம்மு பல்கலைக்கழகம்) ஆகியோர் தலைமை வகித்தனர்.

இது தவிர, சுவரொட்டி சமர்ப்பித்தல்கள் அமர்வும் இடம்பெற்றன. இதில் சட்ட தொழில்வாண்மையாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் அதேபோல் மாணவர்களும் இவ் அமர்வுகளில் சமர்ப்பித்தல்களை மேற்கொண்டனர்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக, சட்ட பீட, இராணுவ சட்ட திணைக்களத் தலைவர், மேஜர் டீ.பீ. அலுத்கே அவர்களின் "கவனிக்கப்படாத ஆளுகை சுற்றுச்சூழல் அமைப்புக்களை வீழ்த்துவதற்கு வழிவகுக்கிறது: மனிதரல்லாத உயிரினங்களுடனான மனித தொடர்புகள் பற்றிய விமர்சன ரீதியான பகுப்பாய்வு" ("Unheeded Governance Leads to Falling off Ecosystems: Critical Analysis on Human Interactions with Nonhuman Organisms") எனும் தலைப்புடைய ஆராய்ச்சி சமர்ப்பித்தலுக்கு சிறந்த வாய்மூல சமர்ப்பித்தலுக்கான பரிசு வழங்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழக, சட்ட பீட, பொது மற்றும் சர்வதேச சட்டத் திணைக்களத்தின் செல்வராஜ் புவனிதா அவர்களின், "உள்ளூர் சனநாயகம்: இலங்கையின் உள்ளூராட்சி அதிகார சபைகளின் தேர்தல் முறைமை சார் யதார்த்தம்" ("Local Democracy: The Reality of the Electoral System of Local Authorities in Sri Lanka") எனும் தலைப்புடைய ஆராய்ச்சி சமர்ப்பித்தலுக்கு சிறந்த சுவரொட்டி சமர்ப்பித்தலுக்கான பரிசு வழங்கப்பட்டது.

- **<u>மாநாட்டுக்கு முன்னரான – புலமைச் சொத்து சட்டம் சார் செயலமர்வு 2019</u>**

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (கொ.பா.ப.) சட்ட பீடம், தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களில் இருந்து அழைப்புவிடுக்கப்பட்ட 50 பங்கேற்பாளர்களுக்காக, "புலமைச் சொத்து மற்றும் அறிவு பொருளாதாரம்" (Intellectual Property and the Knowledge Economy) பற்றிய ஒரு நாள் செயலமர்வொன்றை, 2019 செப்ரெம்பர் 10 ஆம் திகதி மு.ப. 08.00 முதல் பி.ப. 05.00 வரை கொ.பா.ப. இல் ஒழுங்குசெய்து நடாத்தியது.

நான்கு அமர்வுகளைக் கொண்ட இச் செயலமர்வானது, புலமைச் சொத்து சட்டம் சார் பின்வரும் உள்ளூர் மற்றும் சர்வதேச நிபுணர்களால் நடாத்தப்பட்டன:

1. கலாநிதி ஜேம்ஸ் கிரிஃபின் (சிரேஷ்ட விரிவுரையாளர், எக்ஸிடெர் பல்கலைக்கழகம்)
2. கலாநிதி ஷமில தலகல (சிரேஷ்ட விரிவுரையாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்)
3. கலாநிதி தர்ஷன சுமனதாச (சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்)
4. கலாநிதி துசித அபயசேக்கர (சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)

செயலமர்வின் குறிக்கோள்களாவன:

1. புலமைச் சொத்து சட்டம் சார் பகுதி தகவல்களை பரப்புதல் மற்றும் விழிப்புணர்வையும் அறிவையும் அதிகரித்தல்.
2. புலமைச் சொத்து சட்டம் தொடர்பான முக்கிய சட்ட சிக்கல்களை கோட்பாடு ரீதியான எண்ணக்கருக்கள் மற்றும் கொள்கைகள் ஊடாக கலந்துரையாடுவதன் மூலம் குறித்த பகுப்பாய்வு சொற்பொழிவை அதிகரிக்கச்செய்தல்.
3. சம்பந்தப்பட்ட துறைகளில் ஈடுபட்டுள்ள நிபுணர்களிடையே புதுமுறையான சிந்தனைக் கலாச்சாரத்தை ஊக்குவித்தல்.

- **திறந்த நாள் 2019**

கொ.பா.ப. திறந்த நாள் 2019 நிகழ்ச்சி, இரத்மலானையில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில், 2019 அக்டோபர் 6 ஆம் திகதி வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. கொ.பா.ப. சட்ட பீடத்தினால், கொ.பா.ப. இன் சட்டம் மற்றும் பட்டதாரி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான சில நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. எதிர்காலத்தில் வருகைதரவுள்ள மாணவ, மாணவிகளுக்கு, பல்கலைக்கழக சூழலையும் மாணவர் வாழ்க்கையையும் அறிந்துகொள்ளவும், எல்.எல்.பி. பட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் எல்.எல்.எம். பட்ட நிகழ்ச்சித்திட்டம் பற்றி பீடத்தின் மூலம் நேரடியாக தகவல்களை பெற்றுக்கொள்ளவும் வாய்ப்புக்கிடைத்தது. தற்போதய மாணவர்கள், மேடை நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், குறும்படம் என்பன ஊடாக தங்களது திறமைகளை வெளிப்படுத்தியதுடன், தங்களது அனுபவங்களை வருகை தரவுள்ள மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். மாணவர்களது முன்மாதிரியான செயற்திறன்களை கண்டு கொ.பா.ப. இன் உப வேந்தர் அவர்கள் மிகவும் ஈர்க்கப்பட்டார்.

கல்விசார் பணியாளர்களின் அடைவுகள்

சட்ட பீடத்தின் விரிவுரையாளர்களான, Ms. எல்.எம். த சில்வா மற்றும் Ms. ஏ.ஏ. எதிரிசிங்ஹ ஆகியோர் 2019 இல், முறையே புலமைச் சொத்து சட்டம் மற்றும் சுற்றாடல் சட்டம் சார்பாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் தத்துவ முதுமாணி பட்டங்களை பூர்த்திசெய்தனர்.

2.1.6 முகாமைத்துவ, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியல் பீடம்

அறிமுகம்

முகாமைத்துவ, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியல் பீடம் (FMSH), முகாமைத்துவம் மற்றும் நிதி திணைக்களம், சமூக விஞ்ஞானங்கள் திணைக்களம் மற்றும் மொழிகள் திணைக்களம் எனும் கற்கைசார் மூன்று திணைக்களங்களை கொண்டுள்ளதுடன், இத் திணைக்களங்கள் பீடத்துடன் தொடர்புபட்ட முகாமைத்துவம், சமூக விஞ்ஞானங்கள், மானிடவியல் மற்றும் மொழிகள் எனும் துறைகளில் பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை நடாத்துகின்றன.

பல்கலைக்கழகத்தின் செயற்பணி கூற்றுக்கு இணங்கவே பீடத்தின் செயற்பணி கூற்று அமைக்கப்பட்டுள்ளது. அதாவது சர்வதேச தரத்தின்படி மனித வளத்தை உற்பத்தியாக்கு வதற்காக விஞ்ஞானரீதியான மற்றும் தொழில்நுட்பமும் சார்ந்த முகாமைத்துவ, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியல் எனும் துறைகளில் அறிவினைப் பெற்றுக்கொள்ளல், உருவாக்குதல் மற்றும் பரப்புதல் ஊடாக பல்கலைக்கழகத்தின் செயற்பணியை அடைந்து கொள்வதற்காக குழுவொன்றாக பணியாற்றுவதாகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முகாமைத்துவ, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியல் பீடத்தின் மூன்று திணைக்களங்களும் 31 அங்கத்தவர்களை கொண்டமைந்துள்ளது. ஒவ்வொரு கற்கைத் திணைக்களங்களுக்கும் தமது கற்கை விடயம் மற்றும் சிறப்பம்சம் என்பவற்றுக்கேற்ப பட்டங்களை வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தவிர, பாதுகாப்பு சேவை கட்டளைகள் மற்றும் பணியாளர் கல்லூரி, கடற்படை கடல்சார் அகடமி, வான்படை அகடமி, இராணுவ லொஜிஸ்டிக்ஸ் பாடசாலை மற்றும் இலங்கை இராணுவ அகடமி போன்ற இராணுவ அகடமிகள் மற்றும் கொ.பா.ப. இன் பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம் ஆகியவற்றில் கற்பித்தல், ஆய்வு மேற்பார்வைகள் மற்றும் பாடத்திட்ட அபிவிருத்தி போன்ற சேவைகளை FMSH பீடம் வழங்கிவருகின்றது.

பதவிகளில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் (இராணுவம் சார்/கல்விசார்)

பீடாதிபதி

முகாமைத்துவ, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியல் பீடத்தின் பீடாதிபதியாக நியமனம் செய்யப்பட்ட கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ரி. சிறிசோமா (சிரேஷ்ட விரிவுரையாளர் – தரம் I) அவர்களின் நியமனம், 2019.09.12 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்வகையில் மேலும் ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத் தலைவர்கள்

தொ. இல	பெயர்	பதவி	திணைக்களம்	அமு. வரு. திகதி	காலப்ப குதி
01	கலாநிதி யூ.ஜீ.	திணைக். தலைவர்/	முகாமைத்து.	13.08.2019	ஒரு

	ராஜபக்ஷ	சிரேஷ். விரி. -தர. II	மற்றும் நிதி		வருடம் (01)
02	கலாநிதி டபிள்யூ.எம். ஏ.ஜீ.எச்.ஏ. பிரேமரத்ன	திணைக். தலைவர்/ சிரேஷ். விரி. -தர. II	சமூக விஞ்ஞானம்	12.09.2019	ஒரு வருடம் (01)
03	திரு. டபிள்யூ.ஏ.ஏ.கே. அமரதுங்க	திணைக். தலைவர்/ சிரேஷ். விரி. -தர. I	மொழிகள்	20.04.2019	ஒரு வருடம் (01)

ஆட்சேர்ப்புக்கள் (இராணுவம் சார்/கல்விசார்)

புதிய ஆட்சேர்ப்புக்கள் - பொருத்தமற்றது

பதவி உயர்வுகள்

தொ. இல	பெயர்	முன்பிருந்த பதவி	புதிய நியமனம்	அமுலுக்கு வரும் திகதி	திணைக்களம்
01	திருமதி ஐ.டீ. வத்துஹேவா	சிரேஷ். விரிவு. - தரம் II	சிரேஷ். விரிவு. - தரம் I	28.03.2017	முகாமைத்துவம் மற்றும் நிதி
02	திரு. ஜே.எம்.டபிள்யூ. பிரேமரத்ன	சிரேஷ். விரிவு. - தரம் II	சிரேஷ். விரிவு. - தரம் I	10.04.2018	
03	Ms. டீ.ஆர். பெரேரா	விரிவுரையாளர் (நிரந்தரமா.பட்.)	சிரேஷ். விரிவு. - தரம் II	10.01.2018	
04	கலாநிதி (திருமதி) கே.ஆர். அம்பிட்டிய	விரிவுரையாளர் (நிரந்தரமா.பட்.)	சிரேஷ். விரிவு. - தரம் II	02.06.2019	
05	திரு. எம்.எம்.எல்.சி. குணதிலக்க	விரிவுரையாளர் (தகுதிகாண்)	விரிவுரையாளர்	05.05.2015	
06	திருமதி டபிள்யூ.எம். யூத.எஸ்.கே. வலிசுந்தர	விரிவுரையாளர் (தகுதிகாண்)	சிரேஷ். விரிவு. - தரம் II	12.11.2018	மொழிகள்

பதவி விலகல்கள்

தொ. இல	பெயர்	நியமனம்	விலகிய திகதி	திணைக்களம்
01	கலாநிதி என்.டபிள்யூ. எம்.யூ.சி.பி. விஜேதிலக்க	சிரேஷ். விரிவு. - தரம் II	08.07.2019	முகாமைத்துவம் மற்றும் நிதி
02	திருமதி டீ.ஆர். ரத்னஜீவ	விரிவுரையாளர் (தகுதிகாண்)	14.03.2019	முகாமைத்துவம் மற்றும் நிதி

பணியாளர் அபிவிருத்திச் செயற்பாடுகள்

தொ. இல.	பட்டமேற்படிப்பு பாடநெறிகள் (பூர்த்தியாக்கப்பட்டவை)	பட்டமேற்படிப்பு பாடநெறிகள் (தொடர்ந்து கொண்டிருப்பவை)

	பெயர்	பூர்த்தியாக்கப்பட்ட பாடநெறி	பெயர்	தொடர்ந்து கொண்டிருக்கும் பாடநெறி
01	திருமதி கே.ஆர். அம்பேபிட்டிய	தொழில்முயற்சியாண்மை சார் பீ.எச்டீ.	திரு. ஜே.எம்.டபிள்யூ. பிரேமரத்ன	எஸ்.சி.எம். சார் பீ.எச்டீ.
02	திருமதி ரீ.டீ. கொத்தலாவல	மொழியியல் சார் எம்.பில்.	Ms. ஆர்.எம்.சி.எல். கே. ரத்நாயக்க	பீ.எச்டீ.
03	Ms. டீ.டீ.எல். வில்லாரச்சி	ஆங்கில கற்கைகள் சார் எம்.ஏ.	Ms. டீ.டீ. லொக்குகே	பீ.எச்டீ.
04	Ms. பீ. லங்கேஷ்வர	வியாபார புள்ளிவிபர. சார் பீ.ஜீ.டீ.	திருமதி வீ.யூ. ஜயசிங்ஹ	எம்.பில்./பீ.எச்டீ.
05	திருமதி ஜே.ஏ.டீ. யூ.என். ஜயசூரிய	ஆங்கில கற்கைகள் சார் எம்.ஏ.	திருமதி டபிள்யூ.எம். எம்.எம்.ஜே.ரீ. வீரரத்ன	எம்.பில்./பீ.எச்டீ.
06	Ms. டபிள்யூ.டீ.எச். த மெல்	எம்.பி.ஏ.	திருமதி பீ. லங்கேஷ்வர	வியாபார புள்ளிவிப. சார் எம்.எஸ்சி.

பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்/ அடைவுகள்

<u>பிரசுரங்கள்</u>

- ஜயவர்தன, எம்.எம்., அமரதுங்க, டபிள்யூ.ஏ.ஏ.கே. (2019) – சமூக விஞ்ஞான ஆராய்ச்சிக்கான தத்துவரீதியான அடிப்படையாக விளக்கமளிக்கும் பௌத்தம்சார் முன்னோக்கு (The Buddhist Perspective of Interpritivism as a Philosophical Base for Social Science Research), விஞ்ஞானம் மற்றும் ஆராய்ச்சி சார் சர்வதேச ஜெர்னல் (IJSR).
- கொத்தலாவல, சி.ஜே. மற்றும் கொத்தலாவல, ரீ.டீ. (2019) – ஆட்களுக்கிடையில் நுண்ணறிவு அடிப்படையிலான பாடங்கள் ஊடாக பட்டதாரி மாணவர்களின் ஆங்கில கட்டுரை எழுதுதல் திறனை மேம்படுத்தல் (Undergraduates' English Essay Writing Skill Development through Interpersonal Intelligence based Lessons), பல்துறைசார் அணுகுமுறைகள் பற்றிய 6வது சர்வதேச மாநாட்டின் கூட்ட நடவடிக்கைள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், 2019 நவம்., 26.
- வீ.யூ. ஜயசிங்ஹ மற்றும் என்.டீ. ரனசிங்ஹ – "ELT, நல்லிணக்கத்திற்கான ஒரு விணையூக்கி: இலங்கையில் மூன்றாம்நிலை கல்வியில் கலாச்சாரங்களுக்கு இடையிலான தொடர்பு திறன் குறித்த இலக்கியம் சார் மீளாய்வு" (ELT, A Catalyst For Reconciliation: A Review Of Literature On Intercultural Communicative Competence In Tertiary Education In Sri Lanka), உயர் ஆராய்ச்சி சார் சர்வதேச ஜெர்னல் (IJAR), இந்தியா, தொகு. 7, வெளியீடு 7, 2019 யூலை.
- வலிசுந்தர, டபிள்யூ.எம்.யூ.எஸ்.கே. (2019), - ESL கற்பவர்களின் கல்விசார் எழுதுதல் திறன்களை வளர்ச்சியடையச் செய்வதற்காக தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல் (Integrating Technology for Developing ESL Learners' Academic Writing Skills). தொழில்நுட்ப கல்வி சார் 6 வது சர்வதேச மாநாடு. கிங் மோங்க்குட்ஸ் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், தாய்லாந்து.
- வீரரத்ன, ஜே.ரீ. (2019), - பட்டதாரி மாணவர்களது தர்க்கரீதியான மற்றும் பகுப்பாய்வு ரீதியான திறன்களை விருத்திசெய்வதில் சிக்கல் அடிப்படையிலான கற்றலை விருத்திசெய்வதன் தாக்கம் (Impact of Developing Problem-based Learning in Developing

Logical and Analytical Skills of Undergraduates), கல்வியின் எதிர்காலம் பற்றிய 2 வது சர்வதேச மாநாட்டு கூட்ட நடவடிக்கைகள்.

- ரீ. சில்வா, என். சிறிசோமா மற்றும் பீ.சி. திசாநாயக்க, - கண்டியில் விமான ஓடுபாதை அமைப்பதற்கான விமானசேவை சார் கேள்வி (Aviation Demand for the Construction of a Runway in Kandy), 2019 - கொ.பா.ப. சர்வதேச ஆய்வு மாநாடு, 2019 ஆகஸ்ட்.
- கே.பீ.டீ. தம்சார, ஆர்.எம்.என்.ரீ. சிறிசோமா, - இரயில் போக்குவரத்தில் நேரம் தவறாமை பற்றிய பகுப்பாய்வு: கடலோர இரயில் பாதை, இலங்கை (Analysis on Punctuality in Railway Transportation; Coastal Railway line, Sri Lanka), பரிமாற்றங்கள் 2019 பகுதி பி – தொழில்நுட்ப பத்திரங்கள், இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகம், 2019 அக்டோபர்.
- ஜே.ஏ.டீ.யூ.என். ஜயசூரிய, "இலங்கையில் சமூக வலையமைப்பு பயனாளிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளில் பயன்படுத்தப்படும் (Para) மொழியியல் அம்சங்கள் சார் பாலின இயக்கவியல் பற்றிய பகுப்பாய்வு" (An Analysis on Gender Dynamics of (Para) linguistic features used by a Selected Sample of Social Network Users in Sri Lanka), ரஜரட்டை சர்வதேச ஆராய்ச்சி சிம்போசியத்தில் பத்திரமொன்றை சமர்ப்பித்ததுடன், பிரித்தெடுப்பொன்றையும் பிரசுரித்தார்.

<u>பாடநெறிகள் நடாத்தப்பட்டவை</u>

- திருகோணமலை, லொஜிஸ்டிக்ஸ் பாடசாலையில் 2019/2020 சார்பாக முதுமாணி பாடநெறிக்கு அனுமதிக்கப்பட்ட இடைநிலை உத்தியோகத்தர்களுக்கான மூன்று மாத முன் அமர்வு ஆங்கில பாடநெறியொன்று மொழிகள் திணைக்களம் நடாத்தியது.
- பதவிநிலை கல்லூரியில் (DSCSC) 2020 கல்வியாண்டுக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் சார்பாக மூன்று மாத முன் அமர்வு ஆங்கில பாடநெறியொன்று மொழிகள் திணைக்களம் நடாத்தியது.

ஏனைய பங்களிப்புக்கள் / அடைவுகள்

<u>பகிரங்க சொற்பொழிவுகள்</u>

- கலாநிதி நாமலி சிறிசோமா, பனாகொடையில், இலங்கை இலகு காலாட்படையின் பயிற்சியளிப்பு தினத்தில், புதிய தொழில்நுட்பங்களுடன் இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி சார்பான சவால்கள் (Challenges in Future Development in Sri Lanka with new Technologies) பற்றிய அதிதி உரையாற்றினார், 2019 நவம்பர்.

<u>பதிப்புசார் பணிகள்</u>

- ஆக்கம்சார் பத்திர மீளாய்வாளர், இலங்கையின் தேசிய விஞ்ஞான பவுன்டேஷன் ஜேர்னல், 2019.
- பத்திரங்கள் சார் மீளாய்வாளர், ஸ்மார்ட் கணினியல் மற்றும் முறைமைப் பொறியியல் (Smart Computing and Systems Engineering) பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, IEEE இலங்கைப் பிரிவு அனுசரனை வழங்கியது. களனி பல்கலைக்கழகம், 2019.

அவதானிப்பாளர்

- கலாநிதி (திருமதி) கே.ஆர். அம்பேபிட்டிய, சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II, சீனா, ஹாங்க்ஸோன் நகரில், 2019 அக்டோபர் 8 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையிலான, தொழிலுருமைத்துவம் சார் கல்வி பற்றிய 8 வது UNESCO – APEID கூட்டத்தில் அவதானிப்பாளராக பங்குபற்றினார்.செயலமர்வுகள்
- திருமதி வீ.யூ. ஜயசிங்ஹ, இலங்கை திறந்த பல்கலைக்கழக PGIE இல் - அளவுசார் தரவுப் பகுப்பாய்வு பற்றிய நான்கு நாள் செயலமர்வொன்றில் பங்குபற்றினார்.
- திருமதி வீ.யூ. ஜயசிங்ஹ, இலங்கை, NSF இல் - அளவுசார் மற்றும் தரம்சார் தரவுப் பகுப்பாய்வுக்கான அறிமுகம் எனும் இரண்டு நாள் செயலமர்வொன்றில் பங்குபற்றினார்.
- திருமதி டபிள்யூ.எம்.யூ.எஸ்.கே. வலிசுந்தர, உயர் கல்விக்கான தேசிய நிலையத்தில் புள்ளிவிவரவியல் பகுப்பாய்வுக்கான SPSS அறிமுகம் பற்றிய சான்றிதழ் பாடநெறியை பூர்த்திசெய்தார்.
- Ms. டீ.டீ.எல். வில்லாரச்சி, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில பட்டமேற்படிப்பு நிறுவகத்தினால் நடாத்தபட்ட, தரம்சார் தரவுப் பகுப்பாய்வு பற்றிய குறுகிய பாடநெறியில் பங்குபற்றினார்.
- திருமதி ஜே.ஏ.டீ.யூ.என். ஜயசூரிய, திறந்த பல்கலைக்கழகத்தில், தரம்சார் தரவுப் பகுப்பாய்வு பற்றிய குறுகிய பாடநெறியை பயின்றார்.

விருதுகள்

- Ms. டீ.டீ.எல். வில்லாரச்சி, 2019 செப்ரெம்பர் 05 ஆம் திகதி நடைபெற்ற கொடகே தேசிய இலக்கிய விருதுகள் நிகழ்வில், சிறந்த கவிதை தொகுப்பு 2018 சார்பாக (Bherunda புத்தகத்துக்காக) லக்தாச விக்கிரமசிங்ஹ நினைவு விருதை வென்றெடுத்தார்.

அங்கத்துவம்

- Ms. டீ.டீ. லொக்குகே, திரு. எம்.எம்.எல்.சி. குணதிலக்க, Ms. பீ. லங்கேஷ்வர மற்றும் Ms. டபிள்யூ.டீ.எச். த மெல் ஆகியோர், ஒழுங்கமைப்பு விநியோகம் (லொஜிஸ்டிக்ஸ்) மற்றும் போக்குவரத்து சார் பட்டய நிறுவகத்தின் (MILT) அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டனர்.

- கலாநிதி நாமலி சிறிசோமா, நெடுஞ்சாலை பொறியியல் சங்கத்தின் ஆயுட்கால அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டார்.

அங்கீகாரங்கள்

- முகாமைத்துவம் மற்றும் நிதி திணைக்களமானது, ஒழுங்கமைப்பு விநியோக (லொஜிஸ்டிக்ஸ்) முகாமைத்துவம் சார் எம்.பிஏ. மற்றும் ஒழுங்கமைப்பு விநியோக (லொஜிஸ்டிக்ஸ்) முகாமைத்துவம் சார் பி.எஸ்சி. ஆகிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் சார்பாக, ஐக்கிய இராச்சியத்தின், ஒழுங்கமைப்பு விநியோக (லொஜிஸ்டிக்ஸ்) மற்றும் போக்குவரத்து சார் பட்டய நிறுவகத்தின் (CILT) அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது.

ஒழுங்குசெய்யப்பட்ட பயணங்கள்/ சுற்றுலாக்கள்

இடம்	பயணம் செய்த திகதி	பங்குபற்றல்
முகாமைத்துவம் மற்றும் நிதி திணைக்களம்		
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் – கட்டுநாயக்க	மார்ச், 07	உள்வாங்கல் 35 - LM (TPM)
இலங்கை துறைமுக அதிகார சபை	மார்ச், 21 மற்றும் 27	உள்வாங்கல் 35 – LM
றோயல் செரமிக் லங்கா லிமி., எஹலியகொடை ஹபுகஸ்தென்ன தேயிலை எஸ்டேட், இரத்தினபுரி	ஆகஸ்ட், 29	உள்வாங்கல் 35 - LM
லக்விஜய மின் நிலையம் – நுரைச்சோலை Siam சிட்டி சிமென்ட் லங்கா லிமி., புத்தளம்	ஆகஸ்ட், 30	உள்வாங்கல் 35 - MTS
சமூக விஞ்ஞானங்கள் திணைக்களம்		
பியகமையில் உள்ள Silueta (பிரை.) லிமி. மற்றும் Stretchline ஹோல்டிங்ஸ்	ஆகஸ்ட், 23	உள்வாங்கல் 36
வானிலை திணைக்களம் மற்றும் NBRO	அக்டோபர், 11	உள்வாங்கல் 36

விசேட நிகழ்வுகள்/ வைபவங்கள்

நிகழ்வுகள்/ வைபவங்கள்	திகதி
"கொ.பா.ப. லொஜிஸ்டிக்ஸ் தினம் – 2019"	2019 ஏப்பிரல், 05
"கொ.பா.ப. இளம் தொழில்முயற்சியாளர்களின் கண்காட்சி – 2019"	2019 ஏப்பிரல், 05
"FMSH தொழில்வாய்ப்புச் சந்தை – 2019"	2019 யூன், 06
"இடர் முகாமைத்துவக் கண்காட்சி – 2019"	2019 செப்ரெம்பர், 27

நிறுவன சமூகப் பொறுப்புசார் (CSR) நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெற்றவை பற்றிய விபரம்

இடம்	திகதி	நோக்கம்	பங்குபற்றியோர் எண்ணிக்கை
அங்கொக்காவல ஸ்ரீசுமங்கல மகா வித்தியாலயம்	திசம்பர், 14	வருடாந்த விடயக் கற்கை சுற்றுலாவின் ஓர் பகுதியாக	74 (உள்வாங்கல் -35)

2.1.7 இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் (FAHS)

அறிமுகம்

இணை சுகாதார தொழில்சார் திறன்மிக்க பட்டதாரிகளை உருவாக்குவதற்காக இணை சுகாதார விஞ்ஞானங்கள் பீடமானது (FAHS), 2012 ஆண்டின் இறுதிப் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது அமைக்கப்படவிருந்த கொ.பா.ப. இன் பல்கலைக்கழக வைத்தியசாலையில் சேவையாற்றுவதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டது. தாதியியல், இயன்மருத்துவம், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள், ஊடுகதிர்படயியல் மற்றும் மருந்தகவியல் ஆகிய பி.எஸ்சி. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஐந்து துறைகள் சார்பாக 200 மாணவ, மாணவிகள் அதனது முதலாவது உள்வாங்கலுக்காக 2013 சனவரியில் பீடத்தினால் சேர்த்துக்கொண்டது. தற்போது மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை 600 இற்கும் மேல் உயர்வடைந்துள்ளது.

பீடமானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள், இலங்கையின் இணை சுகாதார தொழில்வாண்மையாளர்களின் தரத்தை உயர்வடையச்செய்யும் தேசிய பொறுப்பை நிறைவேற்றும் வகையில், பாடநெறி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்பவர்களுக்கு பி.எஸ்சி. பட்டங்களை வழங்குவதற்காக பக்கவாட்டு அனுமதித் திட்டத்தின் ஊடாக ஆயுதப் படைகள் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றில் இணைப்புச் செய்யப்பட்டிருந்த திப்ளோமாதாரிகளை சேர்த்துக்கொள்ளத் தொடங்கியது. சுகாதார கவனிப்புசார் உலகளாவிய சிக்கல்கள் குறித்த சர்வதேச கண்ணோட்டத்தை உறுதிப்படுத்துவதற்காக FAHS பீடத்தில் வழங்கப்படும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்கனவே வெளிநாட்டு மாணவர்களுக்காக திறந்துவிடப்பட்டுள்ளன. உலகளாவிய தொழில்வாய்ப்புக்கான பன்முகத் திறன்களைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கும் அதன் அர்ப்பணிப்பு சார்பாக கொ.பா.ப. வரலாற்றில் மற்றொரு மைல்கல்லைக் குறிக்கும் வகையில், வெரஹெரவில் உள்ள பல்கலைக்கழக வைத்தியசாலை கட்டடத்தொகுதியில் அதி நவீன வசதிகளுடன் FAHS பீட கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதுடன், 2014 திசம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் காலத்தில், சுகாதார கவனிப்பும் சூழலும் சார் நவீன மற்றும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் தேவைகளுடன் சவால்களை எதிர்கொள்ள ஆற்றலுடைய பட்டதாரிகளை உருவாக்கும் இலங்கையின் இணை சுகாதார விஞ்ஞானங்கள் பீடமாக ஆகுவதற்கு கொ.பா.ப. இன் FAHS பீடம் எதிர்பார்க்கிறது. பட்டதாரிகளுக்கு அவர்களது எதிர்கால தொழிலை உலகின் எப்பாகத்திலும் மேற்கொள்ளத் தயார்படுத்துவதற்காக எல்லா முயற்சிகளையும் பீடமொன்று எனும் வகையில் நாம் மேற்கொள்கின்றோம். பீடமானது, அதன் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஏழு கற்கைத் திணைக்களங்களின் கீழ் அபிவிருத்தி செய்துள்ளது.

- தாதியியல் மற்றும் மருத்துவச்சிசார் திணைக்களம்
- இயன்மருத்துவம் மற்றும் தொழில்சார் மருத்துவம் திணைக்களம்
- ஊடுகதிர்படயியல் மற்றும் ஊடுகதிர்சிகிச்சை திணைக்களம்
- மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் திணைக்களம்
- மருந்தகவியல் திணைக்களம்
- அடிப்படை விஞ்ஞானங்கள் திணைக்களம்
- பல துறை சார் விஞ்ஞானங்கள் திணைக்களம்

மேலும், FAHS இல் உள்ள பி.எஸ்சி/பி.மருந்தகவியல் (BSc/BPharm) பட்ட

நிகழ்ச்சித்திட்டங்கள் திறமை பெறுமான (credit) அடிப்படையிலானது என்பதுடன், பாடநெறி தொகுதிகளை (modules) பூர்த்தியாக்குவற்கு குறைந்தபட்சம் 120 திறமை பெறுமான (credit) ஒதுக்கீட்டினைக் கொண்ட 4 வருட காலப்பகுதிக்கு வடிவமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களது கற்றல்சார் மதிப்பாய்வை மேற்கொள்வதற்காக GPA (தரப் புள்ளி சராசரி) அடிப்படையிலான மதிப்பீடுகள் கல்விப்பருவங்களின் இறுதியில் நடாத்தப்படுகின்றன. பாடநெறி வேலைகளை வெற்றிகரமாக பூர்த்திசெய்ததும், பி.எஸ்சி. (கௌரவ)/ பி.மருந்தகவியல் (கௌரவ) பட்டங்கள் கொ.பா.ப. மூலம் பின்வருமாறு வழங்கப்படுகின்றன.

- பி.எஸ்சி. (கௌரவ) மருந்துவ ஆய்வுகூடவிஞ்ஞானங்கள்
- பி.எஸ்சி. (கௌரவ) தாதியியல்
- பி.மருந்தகவியல் (கௌரவ)
- பி.எஸ்சி. (கௌரவ) இயன்மருத்துவம்
- பி.எஸ்சி. (கௌரவ) ஊடுகதிர்ப்படயியல்
- பி.எஸ்சி. (கௌரவ) ஊடுகதிர்சிகிச்சை

முக்கிய பதவிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் (இராணுவம் சார்/கல்விசார்)

பீடாதிபதி

- டாக்டர் டீ.யூ. கொட்டஹச்சி (சிரேஷ்ட விரிவுரையாளர்) – 2019-08-13 முதல் அமுலுக்கு வரும் வகையில் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

திணைக்களத் தலைவர்கள்

- திணைக்களத் தலைவர் - மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் – டாக்டர் ஜே.எம்.கே.பி. ஜயசேக்கர (2019/08/13 முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளது)
- திணைக்களத் தலைவர் - ஊடுகதிர்படயியல் மற்றும் ஊடுகதிர் சிகிச்சை - டாக்டர். ஆர். விஜிதா (2019/01/29 முதல் நீடிக்கப்பட்டுள்ளது)
- திணைக்களத் தலைவர் - இயன்மருத்துவம் மற்றும் தொழில்சார் மருத்துவம் - Ms ஜீ.ஏ.டீ. பெரேரா (2019/02/27 முதல் நீடிக்கப்பட்டுள்ளது)
- திணைக்களத் தலைவர் - தாதியியல் மற்றும் மருத்துவச்சிசார் - Ms எச்.எஸ்.எம்.எஸ்.கே. விஜேசிறி (2019/03/03 முதல் நீடிக்கப்பட்டுள்ளது)
- திணைக்களத் தலைவர் – மருந்தகவியல் - Ms எஸ்.யூ. கங்கானம்கே (2019/08/01 முதல் நீடிக்கப்பட்டுள்ளது)
- திணைக்களத் தலைவர் – அடிப்படை விஞ்ஞானங்கள் - டாக்டர் கே.டீ.கே.பீ. குமாரி (2019/11/04 முதல் நீடிக்கப்பட்டுள்ளது)

புதிய ஆட்சேர்ப்புக்கள் (இராணுவம் சார்/கல்விசார்)

பெயர்	பதவி	கடமையேற்ற திகதி
கல்விசார் துணை பணியாளர்கள்		
Ms எச்.ஈ.எச். பெரேரா	தற்காலிக போதனாசிரியர்	03-05-2019
Ms ஆர்.எஸ். மத்துமகே	தற்காலிக போதனாசிரியர்	03-05-2019
Ms எல்.பீ.ஜீ.ஐ. லியனகே	தற்காலிக போதனாசிரியர்	03-06-2019

Ms கே.எல்.கே.ரீ.டீ. சந்தரேனு	தற்காலிக போதனாசிரியர்	03-06-2019

உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்/ புதிய கருத்திட்டங்கள்

உள்ளடக்கப்பட்டுள்ள விபரம்: இடம், கிரயம், பூர்த்திசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி, பெறுபேறு.

- இணைந்த சுகாதார பட்டதாரிகளுக்கு ஆய்வு வசதிகள் மற்றும் பட்டமேற்படிப்பு வாய்ப்புக்களை வழங்குவதற்காக, வேரஹெர பகுதியில் புதிய ஆய்வுகூட கட்டடத்தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கான கருத்திட்ட முன்மொழிவொன்று கொ.பா.ப. - உப வேந்தரவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பணியாளர் அபிவிருத்தி செயற்பாடுகள்

- FAHS இன் கல்விசார் பணியாளர்களது பொது உடற்தகைமையை மேம்படுத்துவதற்காக, இயன்மருத்துவம் மற்றும் தொழில்சார் மருத்துவத் திணைக்களத்தின் மூலம் சுகாதாரமும் உடற்தகைமையும் சார்பான நிகழ்ச்சித்திட்டமொன்று 2019 அக்டோபர் முதல் ஆரம்பிக்கப்பட்டது.
- மத்திய மாகாண கண்டி ஆயுர்வேத மருத்துவ சங்கத்திற்காக, 2019 செப்ரெம்பர் 08 ஆம் திகதி, மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் திணைக்களத்தின் கல்விசார் பணியாளர் அங்கத்தவர்களால் கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது.
- கல்விசார் பணியாளர்கள் மற்றும் இறுதி வருட பட்டதாரி மாணவர்களுக்காக, தரவுப் பகுப்பாய்வு பற்றிய செயலமர்வொன்று 2019 அக்டோபரில் நடாத்தப்பட்டது. இலங்கையின் பிரயோக புள்ளிவிவரவியல் நிறுவகத்திலிருந்து நான்கு வளவாளர்கள் பங்குபற்றினர்.
- Ms என்.ஏ. சஞ்ஜீவனி, ஐக்கிய இராச்சியத்தின் பணியாளர்கள் மற்றும் கல்விசார் அபிவிருத்தி சங்கத்திலிருந்து SEDA அங்கீகாரச் சான்றிதழை பெற்றுக்கொண்டார்.

பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்/ அடைவுகள்

- ஆராய்ச்சி மற்றும் பிரசுரத்திற்கான சனாதிபதி விருது – 2017, பிரசுரிக்கப்பட்ட ஆண்டு 2019, ஆகஸ்ட் – கலாநிதி ஜே.எம்.கே.பி. ஜயசேக்கர
- கலாநிதி எஸ்.பீ. சேனாநாயக்க, விரிவுரையாளர் (தகுதிகாண்) (அடிப்படை விஞ்ஞானங்கள் திணைக்களம்), ஐக்கிய இராச்சியம், வேல்ஸ், ஸ்வான்சீ பல்கலைக்கழகத்தில், விளையாட்டு விஞ்ஞானம் (உடற்பயிற்சி உடலியல்) சார் பீ.எச்டீ. பட்டத்தை பூர்த்திசெய்தார்.
- Ms. என்.ஏ. சஞ்ஜீவனி, விரிவுரையாளர் (மருந்தகவியல் திணைக்களம்), பேராதெனியா பல்கலைக்கழகத்தில் எம்.பீல் பட்டமேற்படிப்பு பட்டத்தை பூர்த்திசெய்தார்.

- Ms. எச்.எஸ். நிரோஷினி, அவரது பீ.எச்டீ. பட்டத்தை கற்பதற்காக ஜப்பான், டோக்கியோ மெட்ரோபொலிடன் பல்கலைக்கழகத்திலிருந்து (TMU) ஓர் புலமைப்பரிசிலை பெற்றுக்கொண்டார்.

- Ms. சோனாலி லெனதுவ (போதனாசிரியர்) அவர்களுக்கு, ஐக்கிய அமெரிக்காவின் முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்று சார்பாக ஃபுல்பிரைட் புலமைப்பரிசிலொன்று வழங்கப்பட்டது.
- சுவீடன், கிரிஸ்டியன்ஸ்டட் பல்கலைக்கழகம் சார்பான மாணவர்/ விரிவுரையாளர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டம்: கிரிஸ்டியன்ஸ்டட் பல்கலைக்கழகத்தில் இரு கல்விசார் பணியாளர் உறுப்பினர்கள் பரிமாறல் விரிவுரையாளர்களாக 3 வார காலப்பகுதி கற்பித்தல் செயற்பாடுகளில் பின்வருவோர் ஈடுபட்டனர் (2019, அக்டோபர் – நவம்பர்)
  - திருமதி எச்.எஸ்.எம்.எஸ்.கே. விஜேசிறி (விரிவுரையாளர்)
  - திருமதி டீ.எம்.என்.டீ.எஸ். மெனிக்கே (விரிவுரையாளர், தகுதிகாண்)
- கொ.பா.ப., இணை சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் தாதியியல் மற்றும் மருத்துவச்சிசார் திணைக்களம் மற்றும் சுவீடன், கிரிஸ்டியன்ஸ்டட் பல்கலைக்கழக சுகாதார விஞ்ஞானங்கள் திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையிலான மாணவர் / விரிவுரையாளர் பரிமாறல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 03 மாத (2019 ஆகஸ்ட் – நவம்பர்) காலப்பகுதி கிரிஸ்டியன்ஸ்டட் பல்கலைக்கழகத்தில் பரிமாறல் மாணவர்களாக கற்றல் நடவடிக்கைகளில் உள்வாங்கல் 33 இன் இரு மாணவர்கள் ஈடுபட்டனர்.
  - எச்.எல்.சி. உஷார
  - எச்.சி.சி. செவ்வந்திகா
- வெலிசர, கடற்படை தாதிகள் பயிற்சி பாடசாலையுடன் இணைந்து தாதியில் திப்ளோமா பாடநெறிக்கான கல்விசார் நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன.

ஒழுங்குசெய்யப்பட்ட பயணங்கள்/ சுற்றுலாக்கள்

இடம்	பயணம் செய்த திகதி	நோக்கம்	பங்குபற்றிய மாணவர் எண்.
Agder பல்கலைக்கழகம் (கிரிஸ்டியன்ஸட், நோர்வே)	2019 ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை	மாணவர் பரிமாறல் நிகழ்ச்சித்திட்டம்	02
கிரிஸ்டியன்ஸ்டட் பல்கலைக்கழகம், சுவீடன்	2019 ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை	மாணவர் பரிமாறல் நிகழ்ச்சித்திட்டம்	02

நலன்புரி செயற்பாடுகள்

- FAHS பீட உள்வாங்கல் 35 இன் மாணவர்களால் இரத்த தான நிகழ்ச்சியொன்று ஏற்பாடுசெய்து நடாத்தப்பட்டது.

விசேட நிகழ்வுகள்/ வைபவங்கள்

- உள்வாங்கல் 34 இன் பி.எஸ்சி. தாதியியல் பட்டதாரி மாணவ மாணவிகளுக்கான சத்தியப்பிரமானம் எடுக்கும் வைபவம் 2019 ஏப்பிரல் 05 ஆம் திகதி, 0930 மணி முதல் 1200 மணி வரை வேரஹேர, UH-KDU வைத்தியசாலையில் நடைப்பெற்றது. மேற்படி

நிகழ்வின் பிரதம அதிதியாக, சுவீடன், கிரிஸ்டியன்ஸ்டட் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி கேர்ஸ்டின் சமரசிங்ஹ அவர்கள் பங்குபற்றினார்.

- பிரித் பாராயணம் வைபவம் மற்றும் "தஹம் வாரம்"
  இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் (FAHS) 6 வது ஆண்டு நிறைவை கொண்டாடும் வகையில் பிரித் பாராயண வைபவமும் "தஹம் வாரமும்", 2019 அக்டோபர் 08 ஆம் திகதி முதல் 2019 அக்டோபர் 12 ஆம் திகதி வரை, இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் உள்வாங்கல் 34 இன் மாணவர்களால் FAHS வளவில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.
- *Ipanella* 2019 "*Rallen Rallata"*
iv. மீளாய்வு ஆண்டில் மொத்த செலவினம் ரூ. 8,419,516,506 ஆக இருந்ததுடன் முந்திய ஆண்டின் போது அது ரூ. 7,350,079,011 ஆக இருந்தது. அதன் படி மொத்த செலவினம் மீளாய்வு ஆண்டின் போது ரூ. 1,069,437,495 ஆல், அதாவது சுமார் நூற்றுக்கு 14.55 ஆல் அதிகரிப்பை காட்டுகிறது. மீளாய்வு ஆண்டில் மொத்த செலவினத்தில் கடன் ஆகுசெலவு ரூ. 4,532,466,004 ஆக, அதாவது நூற்றுக்கு 53.83 ஆக இருந்ததுடன், அக் கடன் ஆகுசெலவில் ரூ.4,489,904,804 தொகை பல்கலைக்கழக வைத்தியசாலை தொடர்பானது என்பது தெளிவாக தெரிந்தது.

v. **சுழற்சி விகிதம்**

கடன் மூலதனத்திற்கான உரிமை மூலதனம் வகிக்கும் விகிதம் 2018 ஆண்டின் போது 3.96:1 ஆக இருந்ததுடன், மீளாய்வு ஆண்டின் போதும் அது 3.93:1 எனும் பெறுமானத்தைக் கொண்டிருந்தது. நிறுவகம் சம்பந்தமாக தொடர்ந்தும் கூடிய சுழற்சி நிலைமையொன்று நிலவியது என்பது அவதானிக்கப்பட்டது.

vi. **நடைமுறை விகிதம்**

பொதுவாக உகந்த நடைமுறை விகிதமாக நடைமுறை சொத்துக்களுக்கான நடைமுறைப் பொறுப்புக்கள் 2:1 என்பதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பல்கலைக்கழகம் தொடர்பாக அவ் விகிதம் 2018 ஆண்டின் போது 1.9:1 ஆக இருந்ததுடன், மீளாய்வு ஆண்டின் போது அது 2.6:1 ஆக இருந்தது.

vii. **உரிமை மூலதனத்தின் மீதான அனுகூல விகிதம்**

2018 ஆண்டுக்கான உரிமை மூலதனத்தின் மீதான அனுகூல விகிதம் நூற்றுக்கு எதிர்மறை 20.82 ஆக இருந்ததுடன், மீளாய்வு ஆண்டில் அது நூற்றுக்கு எதிர்மறை 2.11 ஆக இருந்தது.

viii. **ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் மீதான அனுகூல விகிதம்**

2018 ஆண்டு சார்பாக ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் மீதான அனுகூலம் நூற்றுக்கு எதிர்மறை 4.20 ஆக இருந்ததுடன், மீளாய்வு ஆண்டின் போது அது நூற்றுக்கு எதிர்மறை 0.43 ஆக இருந்தது.

ix. **பாதீட்டு ஆவணம் சார் கட்டுப்பாடு**

மீளாய்வு ஆண்டினுள் 06 செலவின விடயங்கள் பாதீடு படுத்தப்பட்ட செலவும் மற்றும் உள்ளபடியான செலவு ஆகியவற்றுக்கு இடையில் நூற்றுக்கு 14 முதல் நூற்றுக்கு 246 வரையிலான இடைவெளி கொண்ட மாறுதல்கள் ஏற்பட்டதால் பாதீட்டு ஆவணம் பயனுறுதியான கட்டுப்பாட்டு காரணியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அட்டுறுச் செலவின் கீழ் 01 முதல் 03 வருடங்களுக்கு இடையில் தீர்க்கப்படாத தொகை ரூ. 6,857,090 ஆக இருந்ததுடன், ஏனைய கடன்கொடுநரின் கீழ் 01 முதல் 05 வருடங்களுக்கு இடையில் தீர்க்கப்படாத நிலுவைகள் ரூ. 45,076,279 ஆக இருந்தது.

(இ) வைத்தியசாலையின் கடன் மீதி நிதி முதலீட்டு வட்டி ரூ. 59,658,003 தொகை, வைத்தியசாலை சம்பந்தமான வட்டி வருமானமொன்றாக

இனங்காணப்படாமல் சுய பண நிதியத்தின் வட்டி வருமானமொன்றாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஈ) பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கு உணவுக்காக வழங்கப்படும் உணவு பங்கீட்டுத் தொகையில் எஞ்சிய ரூ. 24,402,260 தொகை 03 வங்கிக் கணக்குகளில் இருந்தது.

(உ) பல்கலைக்கழகத்தில் பதவிப் பெயர்கள் 76 சார்பாக இருக்கவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் 907 பேர் என்ற போதிலும் பணியாட்தொகுதியினர் உள்ளபடியாக இருப்பது 812 பேர் மாத்திரமே ஆகும். இதில், கல்விசார் பணியாட்தொகுதியில் வெற்றிடங்கள் 40 உம், துணை மற்றும் தற்காலிக கல்விசார் பணியாட்தொகுதியில் வெற்றிடங்கள் 65 உம் காணப்பட்டன.

பல்கலைக்கழகத்திற்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ள தெற்காசிய மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் 149 இருக்கவேண்டிய போதிலும் பணியாட்தொகுதியினர் உள்ளபடியாக இருப்பது 33 மாத்திரமே ஆகும். முக்கியமாக இங்கு கல்விசார் பணியாட்தொகுதியில் அங்கீகரிக்கப்பட்டோர் எண்ணிக்கை 52 என்ற போதிலும் உள்ளபடியாக இருப்பவர்களின் எண்ணிக்கை 02 ஆகும்.

(ஊ) 2016 ஆண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு வெளிநாட்டு மாணவர்கள் 44 பேர் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை முறையே 39, 29 மற்றும் 29 ஆகும். அதற்கேற்ப, வெளிநாட்டு மாணவர்கள் அனுமதிக்கப்படும் எண்ணிக்கையில் வீழ்ச்சியடையும் போக்கொன்று காணப்படுகிறது என்பது அவதானிக்கப்பட்டது.

(எ) பல்கலைக்கழகத்தின் தெற்கத்திய வளாகத்தினது பணியாட்தொகுதியினருக்கு 2019 ஆண்டுக்கான சம்பளம் மற்றும் வேதனங்கள் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுக்காக ரூ. 121,620,313 ஆன செலவினமொன்று செய்யப்பட்டிருந்த போதிலும், அச் செலவு தெற்கத்திய வளாகத்தின் செலவினமொன்றாக இனங்காணப்படாமல் பல்கலைக்கழகத்தின் கீழ் கணக்குகளில் பதியப்பட்டடிருந்தது.

(ஏ) கட்புலணாகாத சொத்துக்கள் என தெற்கத்திய வளாகம் மற்றும் பல்கலைக்கழக போதனா வைத்தியசாலை ஆகியவற்றின் கீழ் காணி அபிவிருத்திச் செலவாக முறையே ரூ. 5,343,822 மற்றும் ரூ. 1,240,350,381 என்பன நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. இக் காணிகளின் உரிமையானது 2019 திசம்பர் 31-ஆம் திகதி வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு கையேற்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தெற்கத்திய வளாகம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

i. பல்கலைக்கழக தெற்கத்திய வளாகத்தினது கல்விசார் பணியாட்தொகுதியில் பதவி பெயர் 12 இற்கு அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் 154 பேர் இருக்கவேண்டிய போதிலும், 2019 திசம்பர் 31-ஆம் திகதியில் பணியாட்தொகுதியில் உள்ளபடியாக 56 பேர்

மாத்திரமே காணப்பட்டனர். பேராசிரியர், ஆலோசகர் 1-வது தரம், கணினி நிகழ்ச்சித்திட்டமும் முறைமை பகுப்பாய்வும் மற்றும் வலையமைப்பு கட்டுப்பாட்டாளர் ஆகிய பதவிப் பெயர்களின் கீழ் இருக்கவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் சார்பாக எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோல், ஏனைய பதவிப் பெயர்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விடவும் குறைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

ii. கல்விசாராத பணியாட்தொகுதியில் பதவிகள் 29 சார்பாக இருக்கவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் 376 என்ற போதிலும், 2019 திசம்பர் 31-ஆம் திகதியில் பணியாட்தொகுதியில் உள்ளபடியாக 100 பேர் மாத்திரமே காணப்பட்டனர். அத்துடன், அதிலுள்ள பதவி பெயர் 17 சார்பாக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியில் எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோல், மிகுதி பதவி பெயர் 12 சார்பாக பணியாட்தொகுதிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினரில் அரைவாசியை விடவும் குறைவாகவாகும்.

iii. தெற்கத்திய வளாகத்தின் நிர்மாணிப்பு பணிகள் 03 கட்டடங்களின் கீழ் பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், வளாகத்திற்குரிய நூலக நிர்மாணிப்பு அதன் 03-வது கட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், இதுவரை நூலகம் நிர்மாணிக்கப்-படவில்லை. தற்போது மாணவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கென நூலகமொன்றாக பயன்படுத்துவதற்கு 36 X 32 அளவிலான நீளம் மற்றும் அகலத்தை கொண்ட முன்கூட்டியே கட்டப்பட்ட கட்டடமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2015 ஆண்டிலிருந்து வளாகத்தின் கற்கை நெறிகளுக்காக வருடாந்தம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்-பட்டிருந்ததுடன், 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் 512 பேர் ஏற்கனவே வளாகத்தில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

iv. 2015 பெப்பிரவரி 11 முதல் 2019 திசம்பர் 31 வரை விடுதிகளில் மாணவர்களுக்காக 604 கட்டில்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அத் தினத்தில் விடுதியில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 460 மாத்திரமேயாகும்.

v. தெற்கத்திய வளாகம் அமைக்கப்பட்டிருந்த வளவினுள் இதுவரை வளாகத்திற்கு கையேற்புச் செய்யப்படாத காணித் துண்டுகள் 02 காணப்பட்டன. அவை முறையே 5.1363 ஹெக்டேயர் மற்றும் 7.6836 ஹெக்டேயர் அளவினதாகும். 7.6836 ஹெக்டேயர் கொண்ட காணியில் ஏற்கனவே மாணவ விடுதி அமைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றினது பெறுமதி ரூ. 399,195,246 ஆகும். இக் காணித் துண்டு அரசாங்கத்தின் வேரோரு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒன்றாகும். எவ்வாறிருப்பினும், இக் கட்டடங்களின் பெறுமதி வருடாந்த நிதிக்

கூற்றுக்களில் உரிமையுடைய சொத்தொன்றாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(ஒ) போதனா வைத்தியசாலை சம்பந்தமான அவதானிப்புக்கள்

i. போதனா வைத்தியசாலை மருத்துவ பணியாட்தொகுதியினர்

வைத்தியசாலை மருத்துவ பணியாட்தொகுதியினருக்கான பதவிப் பெயர் 58 சார்பாக இருக்கவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் 1,375 என்ற போதிலும், 2019 திசம்பர் 31-ஆம் திகதியில் பதவிப் பெயர் 19 சார்பாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த பணியாட்தொகுதியினர் 427 பேர் மாத்திரமே இருந்ததுடன், மிகுதி பதவிப் பெயர் 39 சம்பந்தமாக எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. நிருவாக பணியாட்தொகுதியினர்

வைத்தியசாலையின் நிருவாக பணியாட்தொகுதியில் பதவிப் பெயர் 77 சார்பாக இருக்கவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் 501 என்ற போதிலும், 2019 திசம்பர் 31-ஆம் திகதியில் பதவிப் பெயர் 06 சார்பாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது 32 பேர் மாத்திரமே என்பதுடன் மிகுதி பதவிப் பெயர் சம்பந்தமாக எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

iii. பணியாட்தொகுதியினர் விலகிச் செல்லல்

வைத்தியசாலையில் பதவிப் பெயர் 16 சார்பாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த பணியாட்தொகுதியினரில் 123 பேர் விலகிச் சென்றிருந்ததுடன், அதில் சேவையை விட்டு விலகிச் சென்றிருந்தோர் எண்ணிக்கை 30 ஆகவும், விலகிச் செல்லல் 66 ஆகவும் மற்றும் பிணை உத்தரவாத ஒப்பந்தத்திலிருந்து விடுகை பெற்றுச்சென்றோரின் எண்ணிக்கை 27 ஆகவும் காணப்பட்டது.

ஒப்பந்த அடிப்படையில் தற்போதுள்ள மருத்துவ மற்றும் நிருவாக பணியாட்தொகுதியினரின் எண்ணிக்கை 459 ஆக காணப்படுவதுடன், 2018 சனவரி 01-ஆம் திகதி முதல் 2019 திசம்பர் 31-ஆம் திகதி வரை விலகிச் சென்றோரின் எண்ணிக்கை 123 ஆகும்.

iv. ஆட்சேர்ப்புச் செய்தல் நடைமுறையை உருவாக்குதல்.

2019 திசம்பர் 31-ஆம் திகதியின் போது மருத்துவ பணியாட்தொகுதியில் பதவி பெயர் 08 சார்பாக மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்தல் நடைமுறைக்கு அங்கீகரிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(கையொப்பம்)
என்.ஆர்.எம். தர்மசிறி
பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமையதிபதி சார்பாக.

KDU/IAD/UA/01/2020( )

கணக்காய்வாளர் தலைமையதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்
இலக்கம்: 306/72
பொல்துவ வீதி
பத்தரமுல்லை 2020 ஆகஸ்ட், 14 ஆம் திகதி

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 2019 திசம்பர் 31-ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை (வரைவு)

DEF/A/KDU/1/2019/11 இலக்கமும் 2020 ஆகஸ்ட், 14-ஆம் திகதியும் கொண்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு விசாரணையுடன் தொடர்புபட்டது.

1. அனுப்பிவைக்கப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணையில் அவதானிப்பு செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பாக அவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரிவுகளிலிருந்து தகவல்கள் கோரப்பட்டதுடன், அவற்றுக்கான பதில் அறிக்கையானது பணிவுடன் தங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

கணக்காய்வு அவதானிப்பு இல. 1.2 - அபிப்பிராயத்திற்கான அடிப்படை

கணக்காய்வு பந்தி (அ)

திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

கணக்காய்வு பந்தி (ஆ)

திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

கணக்காய்வு பந்தி (இ)

சமுதாய மண்டபத்தினது வருமானம் தற்போது பல்கலைக்கழகத்தின் வருமானமாக இனங்காணப்படாததுடன், பெறவேண்டிய வருமானத்தின் ஓர் பகுதி எதிர்வரும் காலத்தில் சுய பண நிதியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வெதும்பகத்தின் வருமானம் தற்போது பல்கலைக்கழகத்தின் வருமானமாக இனங்-காணப்படாததுடன், பெறவேண்டிய வருமானத்தின் ஓர் பகுதி எதிர்வரும் காலத்தில் சுய பண நிதியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் சிற்றுண்டிச்சாலையின் வருமானம் தற்போது பல்கலைக்கழகத்தின் வருமானமாக இனங்காணப்படாததுடன், பெறவேண்டிய வருமானத்தின் ஓர் பகுதி எதிர்வரும் காலத்தில் சுய பண நிதியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பயிலிளவல் உத்தியோகத்தர்களது உணவகத்தின் தொழிற்பாடுகளினால் பெற்றுக்-கொள்ளப்படும் இலாபத்தின் ஓர் பகுதியும் இடத்திற்கான நில வாடகை வருமானமும் எதிர்வரும் காலத்தில் பல்கலைக்கழக கணக்குக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

கணக்காய்வு பந்தி (ஈ)

எதிர்வரும் காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கணக்காய்வு பந்தி (உ)

நி.ஒழு. 571(3)-இன் கீழ் 2020.03.31-ஆம் திகதி வருமானமொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

கணக்காய்வு பந்தி (ஊ)

இதில் பல்கலைக்கழகக் கணக்கில் பெறவேண்டிய பெறுமதியொன்றாக காட்டப்பட்டுள்ள ரூ. 26,250/-, 2020.06.10 ஆம் திகதி பற்றுச்சீட்டு இலக்கம் 435 இன் கீழ் தீர்க்கப்பட்டுள்ளதுடன், சுய பண நிதியத்தின் கீழ் ஏனைய கடன்கொடுநர்களாக காட்டப்பட்டுள்ள ரூ. 500,060/- தொகை 2020.03.31 ஆம் திகதி நாட்குறிப்பு இல. 13 இன் கீழ் வருமானமொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

கணக்காய்வு பந்தி (எ)

2019.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது கணக்கீட்டுப் பிரிவுக்கு இத் தகவல்கள் கிடைக்கப்பெறாததனால், 2019 ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. எதிர்வரும் காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கணக்காய்வு அவதானிப்பு இல. 2

கணக்காய்வு பந்தி (அ)

மேலே குறிப்பிடப்பட்ட தீர்க்கப்படாத முற்பணத் தொகைகளுக்கு உரிய கால பகுப்பாய்வு கீழே தரப்படுகிறது.

ஆண்டு	பல்கலைக்கழகம்	பட்டமேற்படி. கற்கை. பீடம்	சுய பண நிதியம்	தெற்கத்திய வளாகம்	மொத்தம்
கொள்வனவு முற்பணம்					
2013	164,458.10				164,458.10
2015		47,678.00	-	382,321.30	429,999.30
2016				147,400.00	147,400.00
சில்லறை காசு முற்பணம்					
2019	25,000.00				25,000.00
ஏனைய முற்பணம்					
2014			22,500.00		22,500.00
மொத்தம்	**189,458.10**	**47,678.00**	**22,500.00**	**529,721.30**	**789,357.40**

கணக்காய்வு பந்தி (ஆ)

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணை சுகாதார மருத்துவ பீடத்தில் பட்டதாரி பாடநெறிகளை கற்பதற்காக பிணை உத்தரவாதங்களின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவ, மாணவிகளில் பல்கலைக்கழகத்தில் சேவையில் ஈடுபடாத ஆட்கள் சம்பந்தமாக ஏற்கனவே சட்டம் சார்ந்த விடயங்கள் பற்றிய தகவல்கள் கோரப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக 2020 யூலை மாதம் 20-ஆம் திகதி வரையிலும் 43 பேர் சேவையை விட்டு விலகிச் சென்றுள்ளதுடன், அவர்களுக்கு உரிய சேவை முடிவுறுத்துதல் கடிதங்கள் பல்கலைக்கழக வைத்தியசாலை மனித வளப் பிரிவின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஏற்கனவே இதனுடன் தொடர்புபட்ட மாணவர்கள் 23 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக வழக்குத் தொடர்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மிகுதி மாணவர்கள் தொடர்பான சட்டம் சார்ந்த செயற்பாடுகளின் ஆரம்ப கட்டமாக அவர்களுக்கும் அவர்களது பிணை உத்தரவாதிகளுக்கும் பிணை உத்தரவாதங்களைச் செலுத்துமாறு அறிவிப்புச் செய்யும் கடிதங்களை அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கணக்காய்வு பந்தி (இ)

2018 ஆண்டு வரை வெளிநாட்டு மாணவர்களுக்கான உணவு மற்றும் விடுதி வசதி ஆகியவற்றுக்கான அறவீடுகள் உப வேந்தர் நலன்புரி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2018.12.31 ஆம் திகதி உப வேந்தர் நலன்புரி நிதியத்தின் மூலம் கிடைக்கவேண்டிய உணவு மற்றும் விடுதி வசதி கட்டணங்களாக அமெரிக்கா டொலர் 43,902 பெறுமதி சுய பண நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அதற்கேற்ப, ரூபா. 8,021,334.42 பெறுமதியான தொகை பெறவேண்டியுள்ளதாக கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

எனினும், ஏற்கனவே சுய பண நிதியத்துக்கு செலுத்தப்பட்டிருந்த ரூ. 2,268,040.50 மற்றும் அமெரிக்கா டொலர் 5,645 தொகைகள் மேற்படி பெறவேண்டிய பெறுமதியை கணக்கிடும் போது கவனத்தில் கொள்ளப்படவில்லை. அப் பெறுவனவுகள் பெறுமதி இரண்டும் பேரேட்டில் வருமானமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

இது தவிர, மேற்படி பெறவேண்டிய அமெரிக்கா டொலர் 43,902 ஐ கணிக்கும் போது மாணவர்கள் விடுமுறையில் சென்ற காலப்பகுதிகள் தொடர்பாக கழிக்கப்படவேண்டிய பெறுமதியான அமெரிக்கா டொலர் 3,969.75 தொகை கழிக்கப்பட்டிருக்கவில்லை.

அதற்கேற்ப, 2019.12.31 திகதியில் சரியான பெறவேண்டிய பெறுமதியானது (2019 ஆண்டில் கிடைத்த தொகையை கழித்ததன் பின்பு ரூபா 3,943,096.58 (USD 21,725.05 x 181.50) ஆன தொகை மாத்திரமேயாகும்.

எனவே, தற்போது பேரேட்டில் காட்டப்பட்டுள்ள பெறுமதியான ரூ. 11,191,653.00 (USD 61,662 x 181.50) மற்றும் சரியான பெறுமதியான ரூ. 3,943,096.58 (USD 21,725.05 x 181.50) ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடான ரூ. 7,248,558.42 (USD 39,936.95x181.50) தொகை எதிர்வரும் காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

- 613-வது முகாமைத்துவ சபையின் முடிவுகளுக்கு இணங்க, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் அதே முறையில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து, அதற்கிணங்க எதிர்வரும் கால செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான முகாமைத்துவ சபை முடிவுகள் **இணைப்பு '1'**- எனும் வகையில் தரப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையமான மேலதிக நடவடிக்கைகளை செய்து தருமாறு KDU/L/27( ) 2020 மே 15 எனும் கடிதத்தின் மூலம் பாதுகாப்பு அமைச்சிடம் கேட்கப்பட்டுள்ளது. அது சம்பந்தமான கடிதம் **இணைப்பு '2'** எனும் வகையில் தரப்பட்டுள்ளது.

கணக்காய்வு பந்தி (அ)

வைத்தியசாலை மருத்துவ உபகரண களஞ்சியம் தொடர்பாக எதிர்பார்க்கப்படும் விபர அறிக்கை இத்துடன் **இணைப்பு '3'** எனும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரவர்களுக்கு 2020 ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதம் **இணைப்பு '4'** எனும் வகையில் தரப்பட்டுள்ளது.

கணக்காய்வு பந்தி (ஆ)

2020 ஆண்டினுள் சுய பண நிதியத்தின் கீழ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு பந்தி (இ)

2020 ஆண்டினுள் சுய பண நிதியத்தின் கீழ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு பந்தி (ஈ)

அவதானிப்பு சம்பந்தமான கடிதத்தின் படி வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அலகுகள் தற்போது தொழிற்பாட்டு நடவடிக்கைகளை தொடங்காமைக்கான காரணம், அவசியமானவாறு பணியாட்தொகுதியினர் மற்றும் மருத்துவ உபகரணங்கள் இன்மை என்பதை சுட்டிக்காட்டுவதுடன், 2019 ஆண்டு சம்பந்தமாக மேலே குறிப்பிடப்பட்ட அலகுகளில் பல் மருத்துவ அலகை (Dental Unit) ஆரம்பிப்பதற்காக நிரந்தர மருத்துவரொருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், உரிய மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்தல் நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டுகிறேன். மேலும் இவ் அலகுகளில், குருதி மாற்றல் அலகின் (Dialysis Unit) தொழிற்பாட்டு நடவடிக்கைகள் 2020 ஆகஸ்ட் மாத இறுதியில் தொடங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

03. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள் சார் பந்திகள்

கணக்காய்வு பந்தி (அ) i

மீளாய்வு ஆண்டின் போது பற்றாக்குறை குறைவடைவதற்கு அரசாங்க மீண்டுவரும் கிடைப்பனவு அதிகரிப்பு மற்றும் பாடநெறிக் கட்டண வருமானம் அதிகரிப்பு என்பன காரணமாகியுள்ளது.

கணக்காய்வு பந்தி (அ) ii

பல்கலைக்கழக வைத்திசாலை சார்பாக தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கடன் தொகைக்காக செலுத்தப்பட்ட வட்டி செலவினத்திற்கு சார்புரீதியாக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த மீண்டுவரும் வருமான அதிகரிப்பு பிரதானமாக மீளாய்வு ஆண்டில் வருமானம் அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளது.

கணக்காய்வு பந்தி (அ) iii

2018 ஆண்டில் தெற்காசிய மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்திலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவ, மாணவிகளது பாடநெறிக் கட்டண வருமானம் இறுதி 04 மாதங்கள் சார்பாக மாத்திரம் சம்பந்தப்பட்டதாக இருந்ததுடன், மீளாய்வு ஆண்டின் முழு வருடம் சார்பாகவும் வருமானத்தை இனங்காணுதல் பாடநெறிக் கட்டணம் அதிகரித்திருப்பதற்கு காரணமாகியது.

கணக்காய்வு பந்தி (அ) iv

பல்கலைக்கழக வைத்தியசாலை தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் ஆகுசெலவு அதிகரிப்பினால் மொத்த செலவினம் அதிகரிப்பதற்கு ஏதுவாகியுள்ளது.

கணக்காய்வு பந்தி (அ) v

2019 ஆண்டில் கடன் மூலதனம் 35,260,740,364.00 என திருத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கேற்ப சுழற்சி விகிதம் 3.65:1 ஆகும். பல்கலைக்கழக வைத்தியசாலை சார்பாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன் மூலதனம் கூடிய சுழற்சி நிலைமையொன்று நிலவுவதற்கு காரணமாகியுள்ளது.

கணக்காய்வு பந்தி (அ) vi

நடைமுறை சொத்துக்கள் குறைவடைந்ததை விட கூடுதலான வீதத்தில் நடைமுறைப் பொறுப்புக்கள் குறைவடைந்தமை, நடைமுறை விகிதம் அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளது.

கணக்காய்வு பந்தி (அ) vii

மீளாய்வு ஆண்டில் தேறிய பற்றாக்குறை முந்திய வருடத்துக்கு சார்புரீதியாக குறைவடைந்தமை இதற்கு காரணமாகியுள்ளது.

கணக்காய்வு பந்தி (அ) viii

மீளாய்வு ஆண்டில் தேறிய பற்றாக்குறை முந்திய வருடத்துக்கு சார்புரீதியாக குறைவடைந்தமை இதற்கு காரணமாகியுள்ளது.

கணக்காய்வு பந்தி (அ) ix

2019 ஆண்டில் வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு திறைசேரியிலிருந்து பெறப்பட்ட நிதியின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில், உள்ளபடியான செலவினம் சுய பண நிதியத்தின் மூலம் செய்யப்பட்ட செலவினங்களையும் உள்ளடக்கியுள்ளது.

கணக்காய்வு பந்தி (ஆ)

நி.ஒழு. 571(3)-இன் கீழ் 2020.03.31-ஆம் திகதி வருமானமொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

கணக்காய்வு பந்தி (இ)

எதிர்வரும் காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கணக்காய்வு பந்தி (ஈ)

இப் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெறுகின்ற ஆண்/பெண் பயிலிளவல் அலுவலர்களது ஒவ்வொரு மாதத்திற்குரிய உணவுக்கான நிதி முப்படையின் மூலமாக மேற்படி பயிலிளவல் அலுவலர் இல்லக் கணக்குக்கு நிச்சயமாகக் கிடைப்பதுடன், அந்த நிதி பயிலிளவல் அலுவலர்களின் நலன்புரி செயற்பாடுகளுக்காக பயிலிளவல் அலுவலர் இல்லக் கணக்கு எனும் பெயரில் மக்கள் வங்கியின் இரத்மலானை கிளையில் கணக்கு இலக்கம் 080100171101250 எனும் நடைமுறைக் கணக்கில் இற்றைவரை பேணிச்செல்லப்படுகின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி நடைமுறைக் கணக்கின் ஊடாக பணத்திற்கான வட்டி வீதமொன்று கிடைக்காத காரணத்தினால், வங்கியில் பணம் முதலீடு செய்வதால் கிடைக்கும் வட்டி வீத பணத்தின் மூலம் பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களின் சகல நலன்புரி செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக மக்கள் வங்கியின் இரத்மலானை கிளையில் கணக்கு இலக்கம் 0806001000073779 எனும் கணக்கில் 2013 செப்ரெம்பர் மாதம் 04-ஆம் திகதி ரூ. 2,000,000.00 தொகையும், தேசிய சேமிப்பு வங்கியின் மொறட்டுவை கிளையின் கணக்கு இலக்கம் 200201168495 எனும் கணக்கில் 2002 செப்ரெம்பர் 14-ஆம் திகதி ரூ. 394,100.00 தொகையும் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், 2019 யூன் 02 ஆம் திகதி மேற்குறிப்பிட்ட முதலீட்டு கணக்கில் ரூ. 5,416,880.78 தொகை இருந்ததுடன், அது தொடர்பாக வங்கிக் கிளையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முதலீடு பற்றிய கூற்றின் பிரதியொன்று (**இணைப்பு '5'**) தங்களது அலுவலகத்தின் எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கணக்காய்வு பந்தி (உ)

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினது 2019 திசம்பர் 31 ஆம் திகதியின் படி ஆளணியினர் பற்றிய விபரம் வருமாறு.

பணியாட்தொகுதியினர்	பதவிப் பெயர் எண்.	அங்கீகரிக்-கப்பட்ட ஆளணி.	உள்ளபடி ஆளணி.	வெற்றிடம்
கல்விசார் பணியாளர்கள்	05	223	183	40
துணை (கல்விசார் துணை) பணியாளர்கள்	06	43	22	21
தற்காலிக (கல்விசார் துணை) பணியாளர்கள்	02	49	27	32
நிருவாக பணியாளர்கள்	19	26	20	06
நூலகப் பணியாளர்கள்	05	21	19	02
எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தர பணியாளர்கள்	11	174	147	27
சிற்றூழிய பணியாளர்கள்	24	367	336	29
மொத்தம்		**903**	**743**	**169**

எவ்வாறிருப்பினும், 2020.08.19 ஆம் திகதியின் போது மேற்படி பதவிகளின் உள்ளபடியான எண்ணிக்கை பின்வருமாறு மாற்றமடைந்துள்ளது.

பணியாட்தொகுதியினர்	பதவிப் பெயர் எண்.	அங்கீகரிக்-கப்பட்ட ஆளணி.	உள்ளபடி ஆளணி.	வெற்றிடம்
கல்விசார் பணியாளர்கள்	05	223	179	44
துணை (கல்விசார் துணை) பணியாளர்கள்	06	43	23	20
தற்காலிக (கல்விசார் துணை) பணியாளர்கள்	02	49	29	29
நிருவாக பணியாளர்கள்	19	26	22	04
நூலகப் பணியாளர்கள்	05	21	19	02
எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தர பணியாளர்கள்	11	177	149	28
சிற்றூழிய பணியாளர்கள்	24	367	335	32
மொத்தம்		**903**	**743**	**169**

<u>கல்விசார் பணியாளர்கள்</u>

01. கல்விசார் பணியாளர்களில் தற்போது வெற்றிடங்களாக நிலவும் பதவிகளின் எண்ணிக்கையான 44 இல் 31 வெற்றிடங்கள் பேராசிரியர் பதவிகளுக்கானது என்பதுடன், அப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஒவ்வொரு வருடமும் புதினப் பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்ட போதிலும், தகைமையைக் கொண்ட விண்ணப்பங்கள் கிடைப்பது குறைவாகவே காணப்படுகிறது. 2019 ஆண்டின் போது

பிரசுரிக்கப்பட்ட புதினப்பத்திரிகை விளம்பரத்திற்கு ஏற்ப விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் சார் மதிப்பாய்வு நடவடிக்கைகளில் இருந்து (Professor evaluation – UGC Circular No. 916 & 04/2010) ஒரு விண்ணப்பதாரியின் மதிப்பீட்டு நடவடிக்கை மாத்திரம் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுவருவதுடன், திறன்கள் சார் பதவி உயர்வு (on merit promotion) அடிப்படையில் பேராசிரியர் பதவிகளுக்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை 02 ஆகும்.

02. அத்துடன், கல்விசார் பணியாட்தொகுதியில் ஏற்கனவே நிலவும் பதவி வெற்றிடங்கள் தொடர்பாக 2020.08.16-ஆம் திகதி புதினப்பத்திரிகை விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டதுடன், பேராசிரியர் பதவிகள் தொடர்பாகவும் மற்றுமொரு புதினப்பத்திரிகை விளம்பரமொன்றை பிரசுரிப்பதற்கும் ஏற்கனவே உறுதியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

துணை (கல்விசார் துணை) பணியாளர்கள்

01. ஏனைய கல்விசார் துணை வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள பதவிகள் தொடர்பாக 2019 ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட புதினப்பத்திரிகை விளம்பரங்களுக்கு ஏற்ப 2020.08.17-ஆம் திகதி வலைதள கட்டுப்பாட்டாளர், மென்பொருள் பொறியியயாளர் மற்றும் கணினி நிகழ்ச்சித்திட்ட/முறைமைப் பகுப்பாய்வாளர் ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டதுடன், முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளவேண்டியதன் அடிப்படையில் அப் பதவி சார் வெற்றிடங்களை நிரப்புவதற்கான தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்காலிக (கல்விசார் துணை) பணியாளர்கள்

01. தற்காலிக (கல்விசார் துணை) பணியாளர் பதவிகளில் தற்காலிக செய்துகாட்டுநர் (Temporary Demonstrator) பதவியானது அடிப்படையிலேயே ஓராண்டு கால ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுவதாகும். மேலும், மருத்துவ பீடத்தில் தற்காலிக செய்துகாட்டுநர் பதவிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் பணியாளர்களில் மருத்துவப் பட்டதாரிகள் அவர்களது பயிலுநர் தொழில்பயிற்சி தொடங்கிய உடனே இப் பல்கலைக்கழகத்தில் அவர்கள் வகிக்கும் பதவிகளிலிருந்து விலகுகின்றனர்.

02. எவ்வாறிருப்பினும், 2020.08.13 ஆம் திகதி தற்காலிக செய்துகாட்டுநர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டுள்ளதுடன், இறுதி தெரிவு நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிருவாக பணியாளர்கள்

01. நாட்டில் நிலவிய மோசமான தொற்றுநோய் நிலைமை மற்றும் பொதுத் தேர்தல் காலப்பகுதி காரணமாக 2020 ஆண்டுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை இது வரை மேற்கொள்ள முடியாமல் போனதுடன், 2020.08.16 ஆம் திகதி நிதிப் பொறுப்பாளர் மற்றும் பல்கலைக்கழக மருத்துவ உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக புதினப்பத்திரிகைகளில் விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிருவாக பணியாட்தொகுதியின் ஏனைய பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக புதினப்பத்திரிகை விளம்பரங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

நூலக பணியாளர்கள்

01. நூலகப் பொறுப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் போது அவ் விண்ணப்பதாரிகள் 2020.07.14 ஆம் திகதி நடாத்தப்பட்ட மதிப்பீட்டு செயற்பாட்டின் போது (Librarian evaluation – UGC Circular No. 921) தேர்ச்சி பெறாததால், 2020.08.16 ஆம் திகதி மீண்டும் நூலகப் பொறுப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை கோருவதற்கு புதினப்பத்திரிகைகளில் விளம்பரங்களை பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
02. நூலக தகவல் உதவியாளர் பதவி வெற்றிடம் சார்பாகவும் 2020.08.09 ஆம் திகதி புதினப் பத்திரிகை விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

எழுதுவினைஞர்கள் மற்றும் இணைந்த தர பணியாட்தொகுதியினர்

01. வெற்றிடங்களாக காணப்படும் பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு 2020.08.09 ஆம் திகதி புதினப்பத்திரிகை விளம்பரமொன்று பிரிசுரிக்கப்பட்டுள்ளது.

கீழ் பிரிவு பணியாட்தொகுதியினர்

01. அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப, இப் பல்கலைக்கழகத்தில் தற்போது 32 வெற்றிடங்கள் நிலவும் கீழ் பிரிவு பணியாட்தொகுதியினர் சம்பந்தமாக புதிதாக ஆட்சேர்ப்புச் செய்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தெற்காசிய மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்தில் 2019 திசம்பர் 31 ஆம் திகதியின் படி ஆளணியினர் பற்றிய விபரம் வருமாறு.

பணியாட்தொகுதியினர்	பதவிப் பெயர் எண்.	அங்கீகரிக்-கப்பட்ட ஆளணி.	உள்ளபடி ஆளணியினர்	வெற்றிடம்
கல்விசார் பணியாளர்கள்	05	52	03	49
தற்காலிக (கல்விசார் துணை) பணியாளர்கள்	01	24	01	23
நிருவாக பணியாளர்கள்	08	12	09	03
நூலகப் பணியாளர்கள்	01	01	00	01
எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தர பணியாளர்கள்	02	31	00	31
சிற்றூழிய பணியாளர்கள்	03	29	00	29
மொத்தம்		**149**	**13**	**136**

எவ்வாறிருப்பினும், 2020.08.19 ஆம் திகதியின் போது மேற்படி பதவிகளின் உள்ளபடியான எண்ணிக்கை பின்வருமாறு மாற்றமடைந்துள்ளது.

பணியாட்தொகுதியினர்	பதவிப் பெயர் எண்.	அங்கீகரிக்-கப்பட்ட ஆளணி.	உள்ளபடி ஆளணியினர்	வெற்றிடம்

கல்விசார் பணியாளர்கள்	05	52	03	49
தற்காலிக (கல்விசார் துணை) பணியாளர்கள்	01	24	01	23
நிருவாக பணியாளர்கள்	08	12	08	04
நூலகப் பணியாளர்கள்	01	01	00	01
எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தர பணியாளர்கள்	02	31	12	19
சிற்றூழிய பணியாளர்கள்	03	29	00	29
மொத்தம்		**149**	**13**	**125**

01. இப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தெற்காசிய மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்தின் பதவிகள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்டிருப்பது ஒப்பந்த அடிப்படையில் ஆகும். அத்துடன், அப் பதவிகள் சார்பாக ஒவ்வொரு வகையினருக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டங்கள் பல்கலைக்கழகத்தின் நிரந்தர பணியாட்தொகுதியில் ஒவ்வொரு பதவிகள் சார்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டங்களை விட குறைந்த பெறுமானத்தைக் கொண்டுள்ளது. இதனால், பதவி வெற்றிடங்களுக்காக புதினப்பத்திரிகையில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்ட போதிலும், ஒப்பீட்டு ரீதியில் குறைந்த சம்பள பெறுமானங்களின் கீழ் சகல பதவிகள் சார்பாகவும் எதிர்பார்க்கப்பட்ட விண்ணப்ப எண்ணிக்கை கிடைக்காத போக்கொன்று காணப்படுகிறது.

02. அத்துடன், கிடைக்கின்ற விண்ணப்பங்கள் மூலம் ஆட்சேர்ப்புச் செய்தாலும், கடமைகள் சார் தன்மையின் அடிப்படையில் சம்பளம் எனும் விடயத்தை ஒப்பீடு செய்வதன் ஊடாக முக்கியமாக கல்விசார் மற்றும் நிருவாக பணியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் சேவையிலிருந்து நீங்கிச் செல்லும் போக்கொன்றும் காணப்படுகிறது.

03. கல்விசார், தற்காலிக (கல்விசார் துணை) மற்றும் நிருவாக பணியாட்தொகுதி பதவி வெற்றிடங்களுக்காக 2020 பெப்பிரவரி மாதம் புதினப்பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டதுடன், அந்த புதினப்பத்திரிகை விளம்பத்தில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2020.03.16-ஆம் திகதி ஆகும்.

04. எனினும், அதனோடு நாட்டில் நிலவிய மோசமான தொற்றுநோய் நிலைமை காரணமாக விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தடைப்பட்டன. இந்த ஆண்டின் மே மாதம் முதல் மீண்டும் அச் செயற்பாடுகள் சார் ஏனைய அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், பொதுத் தேர்தல் காலப்பகுதி என்பதால் மீண்டும் அச் செயற்பாடுகளை மேற்கொள்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன், தற்போது நேர்முகப் பரீட்சை சார் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

05. நிருவாக பணியாட்தொகுதியில் உதவி பதிவாளராக சேவையாற்றிய (பெண்) உத்தியோகத்தரது பதவி விலகல் மூலமாக அப் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளதுடன்

(புதிய ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சை செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன), ஏனைய வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள நிருவாக பதவிகள் படைகளில் இருந்து இணைப்புச் செய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டவையாகும்.

06. எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தர பணியாளர்கள் சம்பந்தமான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தர பணியாட்தொகுதி பதவியொன்றான தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பை மேற்கொள்ளல் மருத்துவ பீடத் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. தற்போது இப் பதவி வெற்றிடங்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் நிரப்புவதற்கான அவசியமொன்று இல்லாததால் இப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இப்போது நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

07. அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப இப் பல்கலைக்கழகத்துடன் இணைப்புச் செய்யப்பட்ட தெற்காசிய மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்தில் தற்போது வெற்றிடங்கள் நிலவும் 29 சிற்றூழியர் தர பணியாளர்கள் சம்பந்தமான புதிய ஆட்சேர்ப்பு செய்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

<u>கணக்காய்வு பந்தி (ஊ)</u>

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு வெளிநாட்டு தகைமைகள் கொண்ட மாணவர்களை அனுமதிப்பதற்குத் தேவையான கல்வித் தகைமைகளை பரீட்சிப்பது தொடர்பான முறைமையொன்றுக்கு முகாமைத்துவ சபை 569:26 மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது (**இணைப்பு '6'**).

2016 ஆண்டிலிருந்து 2019 ஆண்டு வரை வெளிநாட்டு தகைமைகளின் கீழ் மாணவர்களை அனுமதிப்பதற்காக இருந்த அம் முறைமை அவ்வப்போது மாற்றமடைந்துள்ளது. இதற்கான காரணங்கள் யாதெனில், அநேகமான மாணவர்கள் அடிக்கடி பரீட்சையில் சித்தியடையாமையும் பட்டப் பாடநெறியை பூர்த்திசெய்ய இயலாமல் இடைநடுவே பல்கலைக்கழகத்திலிருந்து விலகிச் செல்லலும் ஆகும். இதன் காரணமாக, 2016 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் ஆண்டுகளில் வெளிநாட்டு தகைமைகளின் கீழ் மாணவர்களை அனுமதிக்கும் போது உயர்ந்த தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களை மாத்திரம் அனுமதிப்பதற்கு மாணவர்கள் அனுமதிக்கும் குழு முயற்சி எடுத்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டு தகைமைகளைக் கொண்ட மாணவர்களை அனுமதிப்பதற்கு முன்பு அது தொடர்பான கடிதமொன்றை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி, அதன் மூலம் வெளிநாட்டு உறவுகள் அமைச்சின் ஊடாக ஆசியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா மற்றும் ஆபிரிக்கா நாடுகளில் உள்ள உயர்ஸ்தானிகர் அலுவலகங்கள் மற்றும் தூதரக அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு அறிவிப்புச்செய்து, அதனூடாக மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை கோருகிறது. இந் நடைமுறையானது 2013 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டு தகைமைகளைக் கொண்ட மாணவர்களை அனுமதிக்கும் போது மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் ஒவ்வொரு வருடமும் விண்ணப்பங்கள் 50 அல்லது அதற்கு கூடிய எண்ணிக்கையிலானவை இப் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கிறது. எனினும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கிடைத்த விண்ணப்பங்கள் அநேகமானவற்றின் கல்வித் தகைமையை பரீட்சித்துப் பார்க்கும் போது, அம் மாணவர்கள் இப் பல்கலைக்கழகத்தில் விண்ணப்பித்துள்ள பட்டப் பாடநெறியியை பயிலுவதற்கு அவசியமான அடிப்படை தகைமையை பூர்த்தி செய்திருக்கவில்லை என்பது அவதானிப்பு செய்யப்பட்டது.

அத்துடன், 2016 ஆண்டிலிருந்து 2019 ஆண்டு வரையில் வெளிநாட்டு தகைமையின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களது பாடநெறிக் கட்டணம் படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது. அது தொடர்பாக இப் பல்கலைக்கழக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் மற்றும் ஆலோசனையின் படி இலங்கையில் இருக்கும் ஏனைய அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு இணைவாக வெளிநாட்டு தகைமைகளின் அடிப்படையில் மாணவர்களை அனுமதிக்கும் போது பாடநெறிக் கட்டணங்கள் சமனான அல்லது அதனையொத்த பெறுமதியைக் கொண்டிருத்தல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இதன் காரணமாக, மருத்துவ பட்டம் சார்பாக 2016 ஆண்டில் இருந்த வருடாந்த பாடநெறிக் கட்டணமான டொ. 6000 (USD) தொகை, 2019 ஆண்டின் போது அத் தொகை டொ. 9000 (USD) வரையும், 2020 ஆண்டின் போது அத் தொகை டொ. 12500 (USD) வரை அதிகரித்தது. இக் காரணங்களின் அடிப்படையில் நாட்டிலுள்ள சகல அரச பல்கலைக்கழகங்களினதும் பாடநெறிக் கட்டணங்கள் சமனாக இருந்ததால், வெளிநாட்டு மாணவர்கள் இப் பல்கலைக்கழகத்திற்கு மாத்திரமல்லாது ஏனைய அரச பல்கலைக்கழகங்களுக்கும் ஒரே மாதிரியாக விண்ணப்பங்களை அனுப்புகின்றனர்.

இவற்றின் காரணமாக, மேற்படி விடயங்கள் தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்தி, 2020 ஆண்டு சார்பாக வெளிநாட்டு தகைமைகளின் அடிப்படையில் மாணவர்களை அனுமதிக்கும் போது பட்ட பாடநெறிகளை பயிலுவதற்கு அவசியமான அடிப்படை கல்வித் தகைமைகளில் சில எளிதாக்கல்கள் செய்யப்பட்டுள்ளதால் அதன் மூலமாக எதிர்வரும் வருடங்களில் வெளிநாட்டு தகைமைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்படுவதில் முன்னேற்றமொன்றை எதிர்பார்க்கலாம். மேலும், தற்காலத்தில் மக்களிடையே பிரபல்யமாக இருக்கும் சமூக ஊடகங்கள் மூலமாகவும் இப் பல்கலைக்கழகத்திற்கு வெளிநாட்டு தகைமைகளைக் கொண்ட மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான பிரச்சாரத்திக்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<u>கணக்காய்வு பந்தி (ஐ)</u>

தெற்கத்திய வளாகத்தின் பணியாட்தொகுதியினருக்கு சம்பளம் கொடுக்கும் போது பல்கலைக்கழகத்திற்கு திறைசேரி நிதியேற்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் பல்கலைக்கழகத்தின் கீழ் கணக்குகளில் பதியப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>கணக்காய்வு பந்தி (ஒ)</u>

பல்கலைக்கழக தெற்கத்திய வளாகமாக பயன்படுத்தப்படுகின்ற காணி சுமார் 70.0863 ஹெக்டேயர் (ஏ. 173 ரூ. 0. பேர். 18.09) விஸ்தீரணமுடையதாகும். 2017-ஆம் ஆண்டில் நில அளவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுக்கு ஏற்ப பயன்படுத்தப்-படுகின்ற காணியில் 8.3500 ஹெக்டேயர் (ஏ. 2 ரூ. 2. பேர். 25.6) விஸ்தீரணம் கொண்ட பகுதி இலங்கை முதலீட்டு சபைக்கு ஒதுக்கப்பட்ட காணி எனவும், மிகுதி பகுதியான சுமார் 61.7363 ஹெக்டேயர் (ஏ. 152. ரூ. 1. பேர். 38. 18) விஸ்தீரணமுடைய காணி வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமானது எனவும் தெரியவருகிறது.

எவ்வாறிருப்பினும், வனப் பாதுகாவளர் நாயகத்தினது இலக்கம் EMDL/03/02/14/464/2013 மற்றும் 2017.12.14 திகதி கொண்ட கடிதத்தின் படி, விடுவிப்புச் செய்வதற்கு அனுமதியளிக்க வேண்டிய காணியின் அளவாக மாவட்ட காணி பயன்பாட்டுக் குழு, அமைச்சுகளுக்கு இடையிலான குழு மற்றும் வனப் பாதுகாவளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பது 56.6

ஹெக்டேயர் (ஏ. 139. ரூ. 03. பேர். 18.32) ஆகும். அதற்கேற்ப, 56.6 ஹெக்டேயர் (ஏ. 139. ரூ. 03. பேர். 18.32) ஆன பகுதி ඒ. ඔ. ඕ 42 எனும் நில அளவை பத்திரத்தின் இலக்கம் 1830 காணித் துண்டு 2020.03.06 ஆம் திகதி இப் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அரசாங்க திணைக்களங்களுக்கு காணி வழங்குதல் சம்பந்தமான சான்றிதழ் **இணைப்பு '7'** ஆக தரப்பட்டுள்ளது. மிகுதி 5.1363 ஹெக்டேயர் (ஏ. 12. ரூ. 02. பேர். 30.8) அளவுடைய நிலமானது இப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு அத்தியாவசியமான பகுதியொன்று என்பதால் இக் காணிப் பகுதியை மாவட்டச் செயலாளர் (மொனராகலை) மூலமாக கையேற்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. அது சம்பந்தமான கடிதம் **இணைப்பு '8'** ஆக தரப்பட்டுள்ளது.

மேலும், 8.3500 ஹெக்டேயர் (ஏ. 2 ரூ. 2. பேர். 25.6) விஸ்தீரணமான காணி இலங்கை முதலீட்டு சபைக்கு ஒதுக்கப்பட்ட காணி பகுதியொன்று என்பதுடன், அக் காணி பகுதியை இப் பல்கலைக்கழகத்திற்கு சுவிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அது சம்பந்தமான கடிதம் **இணைப்பு '9'** ஆக தரப்பட்டுள்ளது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலைக்குச் சொந்தமான இல. CO/KSB/2018/489 எனும் விளக்கமளிக்கின்ற உப அட்டவணையில் துண்டு இலக்கம் 5 மற்றும் 6 இல் காட்டப்பட்டுள்ள 19.6681 ஹெக்டேயர் காணி பிரதேசம் பாதுகாப்பு அமைச்சுக்கு கையேற்பதற்கான புதிய சுவிகரிப்பு முன்மொழிவு 2019.12.05 ஆம் திகதி, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இக் காணியை நேரடியாக பாதுகாப்பு அமைச்சுக்கு சுவிகரிப்புச் செய்வது பொருத்தமானது என அவதானிப்பு செய்யப்பட்டுள்ளது. அது சம்பந்தமான MOD/PAC/05/CAB – OB எனும் பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தினது கடிதம் **இணைப்பு '10'** ஆக தரப்பட்டுள்ளது.

மேலும், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை அமைந்துள்ள காணியை சுவிகரிப்புச் செய்வது சம்பந்தமாக ஏனைய செயற்பாடுகளை திட்டமிடுவதற்காக பாதுகாப்பு அமைச்சினது மேலதிகச் செயலாளர் ஆர்.எம்.பீ.எஸ். ரத்நாயக்க அவர்களின் தலைமையில் இராணுவத்தின் மருத்துவப் படைப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோரால் விசேட கள சோதனையொன்று 2020.08.14 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அதன்போது, மேற்படி முழு காணியை நேரடியாக பாதுகாப்பு அமைச்சுக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், அதன் பின்னர் இலங்கை இராணுவத்தின் மருத்துவப் படைப் பிரிவு மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை ஆகியவற்றுக்கிடையில் இக் காணியை பகிர்ந்து கொள்வது சம்பந்தமாக ஏனைய அலுவல்கள் கலந்துரையாடப்பட்டுள்ளது.

<u>கணக்காய்வு பந்தி (ஓ) i</u>

கல்விசார் பணியாளர்கள்:- கணினி திணைக்களம், கட்டடக்கலை திணைக்களம், கணிய அளவையியல் கற்கைப் பிரிவு என்பன சார்பாக 2020 ஆண்டில் தனித் தனியாக கீழே குறிப்பிடப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

பேராசிரியர், உதவி பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I, தரம் II.

விரிவுரையாளர் (தகுதிகாண்), விரிவுரையாளர் (நிரந்தரமற்ற), ஆலோசகர் தரம் II.

அளவையியல் விஞ்ஞானங்கள் திணைக்களம் சார்பாக 2020 ஆண்டில் தனித் தனியாக கீழே குறிப்பிடப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I, தரம் II, ஆலோசகர் தரம் II.

கணக்காய்வு பந்தி (ஓ) ii

கல்விசாராத பணியாளர்கள்:- தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள கல்விசாராத பணியாளர் பதவி பெயர்கள் 30 இல் 13 சார்பாக ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளதுடன், இதில் மொத்தமாக கல்விசாராத பணியாளர்களது எண்ணிக்கை 100 ஆகும். எதிர்வரும் தேவைகளுக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட கல்விசாராத பதவிப் பெயர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள முழுமையான பணியாளர் எண்ணிக்கையை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன், கீழே தரப்பட்டுள்ள பதவிப் பெயர்கள் சம்பந்தமாக 2020 ஆண்டின் போது புதிதாக ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(அ) முகாமைத்துவ உதவியாளர் (III தரம்)
முகாமைத்துவ உதவியாளர் (எழுதுவினைஞர் சேவை) (III தரம்)
முகாமைத்துவ உதவியாளர் (நூலக தகவல் உதவியாளர்) (III தரம்)

(ஆ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (III தரம்)
தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) (III தரம்)

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) (III தரம்)

(இ) மேற்பார்வையாளர் (பராமரிப்பு) (III தரம்)

கணக்காய்வு பந்தி (ஓ) iii

நூலக சேவைகள் வழங்குதல், நூலக கட்டடங்களை நிர்மாணித்தல் சார் அவதானிப்பு: 2022 ஆம் ஆண்டளவில் சகல வசதிகளையும் கொண்ட நிரந்தர நூலகக் கட்டடமொன்றை வளாகத்தினுள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், இருக்கின்ற நூலகக் கட்டடத்தினுள் மாணவர்களுக்கு இணையத்தின் மூலம் கல்வி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டு, கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு பந்தி (ஓ) iv

விடுதி வசதிகள்:- தெற்கத்திய வளாகத்தில் மாணவர் விடுதி வசதிக்காக 600 கட்டில்களைக் கொண்ட விடுதி காணப்படுகிறது. 2019 ஆம் ஆண்டின் முதல் 06 மாத காலப்பகுதியினுள் மாணவர்கள் 512 பேர் மாத்திரம் கல்வி பயின்றதுடன், 2019 யூலை மாதம் தகவல் தொழில்நுட்பமும் தகவல் முறைமையும் சார் பட்டப் பாடநெறியை பயிலும் பட்டதாரி மாணவ, மாணவிகள் இரத்மலானையிலுள்ள கொ.பா.ப. வளாகத்திற்கு மாற்றப்பட்டதன் காரணமாக 2019 ஆண்டின் திசம்பர் மாதம் 31-ஆம் திகதியில் தெற்கத்திய வளாகத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் 412 பேர் வரை குறைவடைந்துள்ளது. 2020 ஆண்டினுள் விடுதி வசதிகளை விருத்திசெய்து, புதிதாக மேலதிக மாணவ, மாணவிகளை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு பந்தி (ஓ) v

தெற்கத்திய வளாகம் அமைந்துள்ள காணியை கையேற்புச்செய்தல்:- இப் பல்கலைக்கழக வளாகம் அமைந்துள்ள நிலப் பிரதேசத்தில் 56.6 ஹெக்டேயர் கையேற்புச்செய்து பூர்த்தியடைந்துள்ளது. அதேபோல், இவ் வளாகத்தின் மாணவர் விடுதி அமைக்கப்பட்டுள்ள பகுதியில் 7.6836 ஹெக்டேயர் அளவான காணி இலங்கை முதலீட்டுச் சபைக்கு உரித்தானது என்பது தெரியவந்ததன் பின்பு, பாதுகாப்பு அமைச்சினது மத்தியஸ்த்துடன் மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு கையேற்புச்செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், பல்கலைக்கழக வளாக விளையாட்டு மைதானத்திற்கான உத்தேச பிரதேசமாக ஆரம்ப திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, இதுவரை பல்கலைக்கழகத்திற்கு கையேற்புச் செய்யப்படாத 5.1363 ஹெக்டேயர் நிலப் பிரதேசமும் பாதுகாப்பு அமைச்சின் மத்தியஸ்த்துடன் வனப் பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான கடிதம் இத்துடன் **இணைப்பு '11'** எனும் வகையில் தரப்பட்டுள்ளது.

கணக்காய்வு பந்தி (ஔ) i

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையின் மருத்துவ பணியாட்தொகுதியினர் சம்பந்தப்பட்ட பதவிப் பெயர்கள் 60 சார்பாக இருக்கவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் 1375 ஆக காணப்பட்ட போதிலும், அதில் பதவிப் பெயர்கள் 19 சார்பாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த பணியாளர்கள் 427 பேர் மாத்திரமே என்பதுடன், மிகுதி பதவிப் பெயர் 41 சார்பாக எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்படாமை மற்றும் நிருவாக பணியாட்தொகுதியினர் சம்பந்தப்பட்ட பதவிப் பெயர் 70 சார்பாக இருக்கவேண்டிய அங்கீகரிக்கப்பட் பணியாட்தொகுதியினர் 501 ஆக காணப்பட்ட போதிலும், 2019 திசம்பர் 31-ஆம் திகதியில் அதில் பதவிப் பெயர் 06 சார்பாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த பணியாளர்கள் 32 பேர் மாத்திரமே என்பதுடன், மிகுதி பதவிப் பெயர் சார்பாக எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்படாமை எனும் கணக்காய்வு அவதானிப்புக்களுக்கான காரணங்கள் வருமாறு.

பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக புதிதாக பணியாட்தொகுதியினர் ஆட்சேர்ப்புச் செய்து வைத்தியசாலை நிருவாக அலுவல்களை நடாத்திச் செல்வதற்கு அப் பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்படவேண்டியுள்ளதால், வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மற்றும் நிருவாக பணியாட்தொகுதி பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளை தயாரித்து, பாதுகாப்பு அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் பல்கலைக்கழக வைத்தியசாலை விசேட மருத்துவ உத்தியோகத்தர், மருத்துவ உத்தியோகத்தர், பல் மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் முதனிலை திறன்களல்லாத சேவை வகையைச் சேர்ந்த பதவிகள் ஆகியவற்றுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் 2019.12.16 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டதுடன், தாதிகள் சேவை வகையிலான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் 2019.12.31 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது. இவ் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு உரிய பணியாட்தொகுதியினரை

நிரந்தரமாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2020 சனவரி மாதம் புதினப்பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டதுடன், 2020 மார்ச் மாதம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு, பணியாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

அதற்கிணங்க, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்பட்டதன் பின்பு, சம்பந்தப்பட்ட மருத்துவ மற்றும் நிருவாக பணியாட்தொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கணக்காய்வு பந்தி (ஔ) iii

பல்கலைக்கழக வைத்தியசாலை புதிதாக ஆரம்பிக்கப்பட்டு நோயாளர் சிகிச்சை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு, ஒப்பந்த அடிப்படையில் பணியாட்தொகுதிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டு, வைத்தியசாலையின் ஏனைய அலுவல்களை பேணிச்செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் போது, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினது இனைந்த சுகாதார விஞ்ஞானங்கள் கற்கை பீடத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, பல்கலைக்கழக வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்டிருந்தவர்களில் 27 பேர் பிணை உத்தரவாதத்தை செலுத்தி முடித்துவிட்டு சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளதுடன், 30 பேர் சேவையை விட்டு நீங்கிச் சென்றுள்ளனர். அவ்வாறு ஒப்பந்தத்தை மீறி சேவைக்கு வருகைதராத நபர்கள் சார்பாக சேவையை விட்டு நீங்கியமை சம்பந்தமாக கடிதங்கள் அனுப்பப்பட்டு, அது தொடர்பான ஏனைய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்டப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேபோல், 66 பேர் அவர்களது சொந்த காரணங்களின் அடிப்படையில் சுய விருப்பத்துடன் சேவையிலிருந்து விலகியுள்ளனர்.

கணக்காய்வு பந்தி (ஔ) iv

பல்கலைக்கழக வைத்தியசாலையில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்கள் மற்றும் நிருவாக பணியாட்தொகுதி பதவிகள் 38 சார்பாக உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு, பாதுகாப்பு அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல், 08 பதவிகள் சார்பாக ஆட்சேர்ப்பு செய்தல் நடைமுறைகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினது பரிசீலனை மட்டத்தில் இருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், நிருவாக பணியாட்தொகுதி 02 பதவிகள் சார்பாக ஆட்சேர்ப்பு செய்தல் நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு, பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 10 பதவிகள் சார்பாக உரிய ஆட்சேர்ப்பு செய்தல் நடைமுறைகளை தயார் செய்து பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட இருக்கிறது.

எம்.பீ. பீரிஸ் RWP RSP VSV USP
மேஜர் ஜெனரல்
உப வேந்தர்

பிரதிகள்:
செயலாளர் – பாதுகாப்பு அமைச்சு